ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-22 எண்-7.8

ஜனவரி, பிப்ரவரி-1934

௧

JL
R65m211,N12
N34.22-7-8
158951

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 22.] ஸ்ரீமுக வஸு மார்கழி மீ [ஸஞ்சிகை 7.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 6 பக்கம் 175)

“[illegible]”

என்று ஸமாதாநம் சொல்லி இருக்கிறார். அதாவது:— ‘உலகத்தில் எந்த அர்த்தத்தில் எந்தச் சப்தங்களுக்கு விசேஷ ப்ரஸித்தி இருக்கின்றதோ அந்த அர்த்தத்தில் அந்தச் சப்தங்களுக்கு ரூடி சக்தியானது அங்கீகரிக்கப்படுவது வழக்கம். உதாஹரணமாகக் குடம் வஸ்த்ரம் என்னும் அர்த்தங்களில் ‘கட’ ‘பட’ என்னும் சப்தங்களுக்கு விசேஷ ப்ரஸித்தி இருப்பதால் அந்த அர்த்தங்களில் அந்

158951

தச சப்தங்களுக்கு ரூடி சக்தி அங்கீகரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படி ரூடி சக்தியை உடைய சப்தங்களுக்குள் விபக்திகளுடன் கூடிய ரூடிசக்தியுள்ள சப்தங்கள் ஸமாஸம் என்னும் ஸம்ஜ்ஞையை அடையாதவைகளாகவும் ஸமாஸம் என்னும் ஸம்ஜ்ஞையை அடைந்தவைகளாகவும் இரண்டு விதங்களாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ‘அஹயே புத்ந்யாய’ ‘விச்வேப்யோ தேவேப்ய:’ ‘நிதிரவயய:’ ‘மங்களம் பரம்’ என்பதைப் போன்ற சப்தங்கள் ஸமாஸம் என்னும் ஸம்ஜ்ஞையை அடையாத விபக்திகளை உடைய ரூடமான சப்தங்கள். மற்றும் ‘ஸ்தம்பேரம:’ ‘கர்ணேஜப:’ ‘த்வசிஸார:’ என்பவைபோன்ற சப்தங்கள் ஸமாஸம் என்னும் ஸம்ஜ்ஞையை அடைந்த விபக்திகளை உடைய ரூடமான சப்தங்கள். இந்த எல்லா சப்தங்களுக்கும் அந்தந்த அர்த்த விசேஷத்தில் ரூடி சக்தியை அங்கீகரிப்பதற்கு அந்தந்த அர்த்தத்தில் விசேஷ ப்ரஸித்தி தான் காரணமாகும்.

இங்கு முதல் கக்ஷியில் சொல்லப்பட்ட ‘அஹயே புத்ந்யாய’ என்பது முதலான ஸமாஸ ஸம்ஜ்ஞை இராத ஸவிபக்திக சப்தங்களுக்குச் சில தேவதைகளிடத்தில் உலக ப்ரஸித்தி இருப்பது போல, இந்த ‘மஹதே தைவதாய’ என்னும் இரண்டு சப்தங்களுக்கும் ருத்ரனிடத்தில் ப்ரயோக ப்ரஸித்தி இல்லை. மற்றும் இரண்டாவது கக்ஷியில் சொல்லப்பட்ட ‘ஸ்தம்பேரம:’ என்பது முதலிய ஸமாஸ ஸம்ஜ்ஞையை உடைய ஸவிபக்திக சப்தங்களுக்கு ‘யானை’ முதலிய அர்த்தங்களில் உலக ப்ரஸித்தி இருப்பதால்

“ஹலதந்தாத் ஸப்தம்யா: ஸம்ஜ்ஞாயாம்”
“தத்புருஷே க்ருதி பஹுலம்”

முதலிய ஸூத்ரங்களினால் ஸம்ஜ்ஞா ப்ரயுக்தமான ‘அலுக்’ வந்திருப்பது போல, இந்த ‘மஹதே தைவதாய’ என்னும் பத த்வயங்களுக்கும் ருத்ர ஸம்ஜ்ஞாத்வேந ப்ரஸித்தி இல்லாததனால் ஸமாஸ ஸம்ஜ்ஞை வந்து தத் ப்ரயுக்தமான விபக்தி லோபத்திற்குக் கீழ்ச் சொல்லப்பட்ட ஸூத்ரங்களினால் ஸம்ஜ்ஞா ப்ரயுக்தமான ‘அலுக்’ வந்திருக்கிறதாகவும் ப்ரஸித்தி இல்லை. ஆகையினால் ஸவிபக்திகங்களான இவ்விரண்டு சப்தங்கள் மற்றை ஸவிபக்திக சப்தங்களுக்குள்ள இரண்டு வகைக்குள் ஒன்றிலும் சேர்ந்ததாக ப்ரஸித்தி இல்லாததனால்

“காரநாம்நி ச ப்ராசாம் ஹலாதௌ”

என்னும் ந்யாயத்தின்படி ப்ரஸித்தி நிமித்தகமான ருத்ரனிடத்தில் ரூடி சக்தியை இந்தச் சப்தங்களுக்குக் கல்பிக்க முடியாது. கீழே சொல்லப்பட்ட த்ருஷ்டாந்த சப்தங்களுக்கோவென்றால் அந்தந்த அர்த்தங்களில் விசேஷ ப்ரஸித்தி இருப்பதால் அவைகளுக்கு அந்தந்த அர்த்தங்களில் ரூடி சக்தி உண்டு என்பது அபிப்ராயம். உலகத்தில் ‘வ்யஸ்த’ சப்தத்திற்கு ஸமாஸ ஸம்ஜ்ஞை இல்லாத சப்தத்தில் ப்ரஸித்தி இருந்தாலும், அந்த அர்த்தத்தை இந்த ‘வ்யஸ்த’ சப்தத்திற்கு அங்கீகரித்தால், மேலே சொல்லி இருக்கிற ‘அலுக்’ ப்ரஸித்திக்கு அவகாசமில்லாததனால் இந்த ‘வ்யஸ்த’ சப்தமானது ஸமாஸ ஸம்ஜ்ஞாபாவ நியதமான விபக்திகளோடு கூடி இருக்கையை இங்கு சொல்லுகின்றது. ‘வ்யஸ்தஸ்ய’ என்று தொடங்கி ‘ப்ரஸித்த்யபாவாத்’ என்பது வரையிலுள்ள சப்தங்களை

“வ்யஸ்தஸ்ய நாமதேயதயா அஹிர்புத்ந்யவிச்வேதேவாதிவத் ப்ரஸித்த்யபாவாத்” என்றும்,

“வ்யஸ்தஸ்ய ஸம்ஜ்ஞாயாம் ரூடத்வேந வா ப்ரஸித்த்யபாவாத்”

என்றும் இரண்டு ஹேது வாக்யங்களாக அந்வயித்தல் வேண்டும். இவ்விஷயம் இங்கிருக்கிற விகல்பார்த்தகமான ‘வா’ சப்தத்தினால் வ்யக்தமாக்கப்படுகின்றது. இங்கு முதல் ஹேது வாக்யத்திலிருக்கிற ‘அஹிர்புத்ந்ய விச்வேதேவாதிவத்’ என்னும் சப்தமானது அஹிர்புத்ந்ய:’ ‘விச்வே தேவா:’ என்னும் சப்தங்களுடைய ஏகதேசத்திற்கு அநுவாதமாகையால் இந்தச் சப்தங்களுடைய ஸாதுத்வத்தைப் பற்றி விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. இதை மேலே விஸ்தாரமாகச் சொல்வோம். இந்த ‘தத்புருஷே க்ருதி பஹுளம்’ என்னும் ஸூத்ரத்தில் ‘பஹுளம்’ என்று சொல்லி இருப்பதால் அதன் அர்த்தத்தை

“க்வசித் ப்ரவ்ருத்தி: க்வசித் அப்ரவ்ருத்தி:
க்வசித் விபாஷா க்வசித் அந்யதேவ ।
விதேர் விதாநம் பஹுதா ஸமீக்ஷ்ய
சதுர்விதம் பாஹுலகம் வதந்தி ॥”

என்று நான்கு விதமாகச் சாஸ்த்ரஜ்ஞர்கள் அங்கீகரித்திருப்பதால் அவற்றுள் ஒன்றான ‘அந்யதேவ’ என்னும் அர்த்தத்தை இங்கு ஆதரித்து ஸப்தமீ விபக்தியிற் சொல்லப்பட்டிருக்கும் ‘அலுக்’ விதியை

'மஹதே' என்னும் சதுர்த்தியிலும் சங்கித்திருக்கிறார். இதனால் அத்யந்த கௌணகல்பத்தை ஆச்ரயித்தாலும் சப்த ஸாதுத்வத்தை ஸம்பாதித்தாலும் ப்ரக்ருத சப்தங்களுக்கு ருத்ரனிடத்தில் ப்ர ஸித்தி இல்லையாகையினால் ரூடி சக்தியைக் கல்பிக்க முடியாதென் பது அபிப்ராயம். இங்கிருக்கிற 'நாமதேயதயா' என்னுட சப்தத் திற்கு 'ரூடி சக்தியுக்தயா' என்பது அர்த்தம். 'நாம' என்னும் சப் தம் 'ரூடம்' என்பதற்குப் பர்யாயம் என்பதை ஸ்ரீ பட்டர் பகவத் குண தர்ப்பணத்தில்

"யோமாஷிநா அயௌகஜ்ஞாவ்யுத்பத்திஸம்ஹவெபிவாகத் ரியதத்வம் ஹி நாமத்வம்"

என்று அருளிச் செய்திருக்கிறார். 'தேய' என்னும் ப்ரத்யயமும் ஸ்வார்த்திகமாக ப்ரஸித்தம். இங்கு ஸமாஸ ஸம்ஜ்ஞை இல்லாத ஸவிபக்திக சப்த விஷயத்தில் 'அஹிர்புத்ந்ய' 'விச்வேதேவ' சப்தங் களை வ்யதிரேக த்ருஷ்டாந்தமாகக் காட்டி இருப்பது போல, ஸமாஸ ஸம்ஜ்ஞையுள்ள ஸவிபக்திக சப்த விஷயத்தில் 'ஸ்தம்பே ரம' 'கர்ணேஜப' சப்தங்கள் உலகத்தில் ஸுப்ரஸித்தங்களென்று நினைத்து இங்கு உதாஹரணமாகக் காட்டி அருளவில்லை. ஆக இந்த இரண்டு ஹேதுக்களினாலும் 'மஹதே தைவதாய' என்னும் பத த்வயங்களுக்கு ருத்ரனிடத்தில் ஒரு படியாலும் ப்ரஸித்தி இல் லாததனால் ரூடி சக்தி கல்பிக்க முடியாதென்று முடிந்தது.

இதற்கு மேல்,

"தஷஹாவெபி தத்த்வஹிஜ்ஞயா தத்தீதிஜயத இதி வெசு"

என்னும் வாக்யத்தினால், இப்படி ப்ரக்ருத சப்தங்களுக்கு ருத்ர னிடத்தில் ப்ரஸித்தி இல்லாததனால் ருத்ரனிடத்தில் ரூடி சக்தி கல் பிக்காவிட்டாலும் இந்தச் சப்தங்களினால் 'மஹாதேவ' சப்தத் திற்கு ஸ்மரணமுண்டாகி அந்த மூலமாக 'மஹதே தைவதாய' என் னும் இந்தச் சப்தங்கள் ருத்ரனைச் சொல்வதாக ஆகக் கூடாதா வென்று சங்கித்துக் கொண்டு

"நது வஹ்ஸ்பெத்தெநவ அஸஞ்ஜாதெத்வ அப்ராக்ருத நிரபெரயிக மஹத்தெதவதாத்வயோ: 'வெடாஹமெதம் புருஷம் மஹாந்தம்' 'தெஜ: பரஸ்யாம் தெவதா

யாம்' இத்யாதி ஷ்ருதிவஸ பரமாத்ம பரமபுருஷ விஷ யத்வவித்யாதெவ 'அத்ர ரூஐயாஷ்மஹாதெவ ப்ரத்ய பிஜ்ஞாப்ரதிரோயாத"

என்னும் வாக்யங்களினால் ஸமாதாநத்தைச் சொல்லி இருக்கிறார். அதாவது:—'கீழே சொன்னபடி 'மஹதே தைவதாய' என்னும் ஸவி பக்திக சப்தங்கள் விபக்திகளுடன் இருப்பதனாலேயே இவை ருத்ர னிடத்தில் ரூடி சக்தியுள்ளவையல்ல என்று நிச்சயித்துவிட்டதால் இவை நேராக ருத்ரனைச் சொல்ல முடியாமல் 'மஹா தேவ' சப்த ஸ்ம்ருதியை உண்டுபண்ணி அதன் மூலமாக ருத்ரனைச் சொல்வ தைக் காட்டிலும், கீழே சொல்லப்பட்ட யோக சக்தியினால் இங்கு காட்டிய வேத வாக்யங்களிலிருக்கும் 'மஹத்' சப்த 'தேவதா' சப்தங்கள் நேராகவே யோக சக்தியினால் நாராயணனைச் சொல்வது போல, இந்தச் சப்தங்களும் நேராகவே நாராயணனைச் சொல்வதே உசிதமாகும். ருத்ரனுடைய உபஸ்திதியானது மற்றொரு சப்தத் தின் ஸ்மரண மூலமாக உண்டாகுவதால், அது விளம்பிதம். நாரா யணனுடைய உபஸ்திதியானது யோக சக்தியினால் நிரபேக்ஷமாக நேராகவே உண்டாகுவதால், இது சீக்ரமானது. ஆகையினால் 'மஹா தேவ' சப்த ஸ்மரண த்வாரமாகவும் இந்தச் சப்தங்கள் ருத்ரனைப் போதிப்பிக்கமாட்டா' என்பது இவ்வாக்யத்தின் தாத் பர்யம்.

இதற்குமேல்,

"நாராயணபராமசுக" "ப்ராயணாராயணம் தெவம்" "ஸ்ரீமத்ப்ராயதனெ விஷ்ணௌ" இத்யாதி பூர்வபர விரோதாத்"

என்னும் வாக்யங்களினால், இந்தச் சப்த த்வயங்கள் ருத்ரனைச் சொல்லலாமென்று சங்கிப்பது, முன்னும் பின்னும் நாராயணனைச் சொல்லும் ப்ரகரணத்திற்கு விருத்தமென்று ஷ ப்ரகரணத்தைக் காட்டி இருக்கிறார். அதற்குமேல்,

"வெராயாய நீயாஷிஷ மஹாதெவஸப்தஸ்ய ப்ரயோகஸ் வி ரவெத்ர ப்ரயோம ஸம்ப்ரதிவமொ த்ருஷ்யத இதி வெக"

என்னும் வாக்யங்களினால், முன்பு 'மஹதே தைவதாய' என்னும் சப்தங்களுக்கு ருத்ரனிடத்தில் ரூடி சக்தியை அங்கீகரிப்பதற்குக் காரணமான ப்ரஸித்தி இல்லை என்று சொல்லப்பட்ட ஹேதுவா

னது ஸ்வரூபாஸித்தம். போதாயந கல்பத்தில் 2-வது ப்ரச்நம் 14-வது கண்டத்திலும், 7-வது ப்ரச்நம் 16-வது கண்டத்திலும், ஷடி தர்ம ப்ரச்நத்தில் 2-வது ப்ரச்நம் 8-வது கண்டத்திலும் 'மஹாதே தேவாய' 'மஹாந்தம் தேவம்' இத்யாதியான ஸுப்ரஸித்த ப்ரயோகங்கள் இருப்பதால், இந்த ப்ரஸித்தி ரூப ஹேதுவைக்கொண்டு ப்ராக்ருத பத த்வயங்களுக்கு ஏன் ருத்ரனிடத்தில் ரூடி சக்தியைக் கல்பிக்கக் கூடாது?' என்று சங்கித்துக்கொண்டு

"[illegible]"

என்னும் வாக்யங்களினால் 'போதாயநீயத்தில் 'மஹாதே தைவதாய' என்னும் ஸவிபக்திக சப்தங்கள்

"[illegible]"

இந்த ஏழு ருத்ர நாமங்களுடன் கூடவே சேர்த்து ருத்ரனைச் சொல்லும் ப்ரகரணங்களெல்லாவற்றிலும் படிக்கப்பட்டிருப்பதால், முன்பு சொன்ன யௌகிகார்த்த லேச யோகமிருப்பதைக் கொண்டு ருத்ரனைச் சொல்லுகின்றன. அங்கும் ரூடி சக்தியினால் ருத்ரனைச் சொல்லவில்லை. ராமாயணத்திலோ வென்றால், ருத்ர ப்ரகரணமில்லாமல் விபரீதமான நாராயண ப்ரகரணமாகவே இருக்கின்றது' என்று ஸமாதானம் சொல்லி இருக்கிறார். அதாவது:—ஒரு சப்தத்திற்கு ஒரு அர்த்தத்தில் ரூடி சக்தியைக் கல்பிப்பதற்குக் காரணம் அந்தச் சப்தத்திற்கு அந்த அர்த்தத்தில் கேவலம் ப்ரயோக ப்ரஸித்தி மாத்ரமன்று; அந்யதா ஸித்தமல்லாத ப்ரயோக ப்ரஸித்திதான் காரணமாகும். போதாயநீயத்தில் 'மஹாதே தைவதாய' என்னும் ஸவிபக்திக ப்ரயோக ப்ரஸித்தி இருந்தாலும், அது ருத்ர ப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருக்கையாகிற ஹேதுவினால் அந்யதா ஸித்தம். ஆகையினால், அநந்யதாஸித்த ப்ரயோக ப்ரஸித்தி காரணமில்லாததனால் ப்ராக்ருத பத த்வயங்களுக்கு ருத்ரனிடத்தில் ரூடி சக்தி கல்பிக்க முடியாது என்பது அபிப்ராயம். இதனால்,

"[illegible]"

என்னும் பாதுகாஸஹஸ்ரம் 48-வது ச்லோகத்தில் 'மஹதி தேவே' என்று தாமே வ்யஸ்த சப்தங்களை ருத்ர போதகமாக அருளிச்செய்

திருப்பதும் 'நாக ஸிந்து' 'அஹிபதி சூடா' முதலிய ப்ரகரண வசாத் ஸங்கதமென்கிற விஷயம் ஸ்பஷ்டமாக்கப்பட்டதாகிறது.

இதற்குமேல்,

"[illegible]"

என்னும் வாக்யங்களினால், 'போதாயநீயத்தில் படிக்கப்பட்ட 'மஹாதே தேவாய' என்பது போன்ற சப்தங்கள் ருத்ரனிடத்தில் ரூடி சக்தியுள்ளவைகளாக இருந்தாலும், இந்த ராமாயணத்தில் இருக்கிற 'மஹாதே தைவதாய' என்னும் சப்தங்கள் ருத்ரனிடத்தில் ப்ரஸித்தமாகப் போதாயநீயத்தில் படிக்கப்படவில்லை. புல்லிங்கமான 'மஹாதேவ' என்னும் சப்தமன்றோ ருத்ரனிடத்தில் ரூடி சக்தியுள்ளது; இங்கிருக்கிற நபும்ஸக லிங்கமான 'மஹாதைவதம்' என்னும் சப்தமானது ருத்ரனிடத்தில் ப்ரஸித்தமன்று. ஆகையால் பாஞ்சராத்ரத்தில் ப்ரஸித்தமான அக்நி நடுவில் இருக்கும் பகவானுடைய ஆராதநமே இங்கு சொல்லப்படுகின்றது' என்று முடித்திருக்கிறார். சப்தத்தினாலும் லிங்கத்தினாலும் பல படியாக மாறுதலை அடைந்திருக்கிற ப்ராக்ருத சப்தத்தில் முன்பு சொன்ன ஏக தேச விக்ருதமில்லாமல் அதிக விகாரமுண்டாகி இருப்பதால், முன்பு சொன்ன ஏக தேச விக்ருத ந்யாயம் இங்கு ப்ரவ்ருத்திக்காதென்பது அபிப்ராயம். இவ்விஷயம் சேகரம் முதலிய க்ரந்தங்களிலும் ப்ரஸித்தம்.

இப்படி ஸ்ரீ தேசிகனுடைய ஸச்சரித்ர ரக்ஷை ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஸ்வாரஸிகமான அர்த்தத்தைத் தெரிவித்ததோடு இங்கிருக்கிற 'மிச்வேதேவ' சப்தமானது ஸமாஸ ஸம்ஜ்ஞையையே அடையாத தனித்தனி சப்தங்கள் என்பதே ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளமாகையினால் இங்கு விபக்தி லோபத்திற்கு ப்ரஸக்தியே இல்லாததனால் 'அலுக்' ப்ரஸக்தி இல்லை என்பது கைமுதிக ந்யாய ஸித்தம் என்பதையும் வ்யக்தமாக உபபாதித்தோம். இனிமேல் இந்த ஸ்ரீ ஸூக்திகளுக்கு இங்கு நாம் காட்டிய அர்த்தத்தைத் தவிர்த்து வேறு விதமான அர்த்தத்தைச் சொல்வது வாக்யங்களுடைய ஸ்வாரஸ்யத்திற்கு விருத்தமென்பதையும் வ்யக்தமாகக் காட்டுகிறோம்.

‘விச்வே தேவா:’ என்னும் சப்தத்தில் வ்யாகரணத்தில் சொல்லப்படாத ‘அலுக்’ வந்திருக்கிறதாக ஸ்ரீ தேசிகன் ப்ரமித்திருக்கிறார் என்று நினைக்கிறவர்கள், அப்படி ப்ரமிக்கக்கூடிய அந்வயம் இன்னதென்று எழுதாதனால் அவ்விபரீதாந்வயத்தையும் நாம் விசாரித்தே நிச்சயிக்க வேண்டியதாகின்றது. இங்கு இருக்கிற ‘வ்யஸ்தஸ்ய’ என்று தொடங்கி ‘ப்ரஸித்த்யபாவாத்’ என்பது வரையிலுள்ள சப்தங்களால் ஒரே ஹேது சொல்லப்படுகிறதாக அபிப்ராயமா? அல்லது இரண்டு ஹேதுக்கள் சொல்லப்படுகின்றன வென்பது அபிப்ராயமா? ஒரே ஹேது வாக்யமானால் இதன் நடுவில் இருக்கிற ‘வா’ என்னும் சப்தமானது முன்பு சொல்லப்பட்ட ‘ஸமஸ்தஸ்யைவ ததாரூடத்வாத்’ ‘வ்யஸ்தஸ்ய..........ப்ரஸித்த்யபாவாத்’ என்னும் பஞ்சம்யர்த்தங்களை விகல்பிக்கின்றதா? அல்லது ‘ஸமஸ்தஸ்ய’ ‘வ்யஸ்தஸ்ய’ என்னும் ஷஷ்ட்யந்தார்த்தங்களை விகல்பிக்கின்றதா? இவ்விரண்டு பக்ஷங்களிலும் ‘வ்யஸ்தஸ்ய வா’ என்றாவது ‘ப்ரஸித்த்யபாவாத் வா’ என்றாவது ப்ரயோகிக்கவேண்டியது உசிதமாக இருக்க, இப்படி அபேக்ஷிதமான இடத்தை விட்டு அநபேக்ஷிதமான ‘அலுக்த்வேந வா’ என்னும் இடத்தில் அந்த ‘வா’ என்பதை ப்ரயோகித்திருப்பது சப்த ஸ்வாரஸ்ய விருத்தம். ‘அலுக்த்வேந வா’ என்று ப்ரயோகித்திருக்கிற வாக்ய ஸ்வாரஸ்யத்தைக் கவனித்தால் ‘வ்யஸ்தஸ்ய நாமதேயதயா அலுக்த்வேந வா’ என்னும் த்ருதீயார்த்தங்களை விகல்பிக்கிறதாகவன்றோ தோன்றுகின்றது? இந்த வாக்ய ஸ்வாரஸ்ய விரோதத்தைப் பொருத்து ‘வா’ என்பதற்கு தூராந்வயமே அங்கீகரிக்கப்பட்டாலும்

“ [illegible] ”

என்பது முதலிய இடங்களில் விகல்பித்த விஷயங்கள் இரண்டும் ஸமபிவ்யாஹ்ருத ஏக பதார்த்தாந்விதங்களாகவே இருப்பது ப்ரஸித்தமாகையால் ‘ஸமஸ்தஸ்ய வ்யஸ்தஸ்ய வா’ என்று விகல்பிக்கிற பக்ஷத்தில் விகல்பிக்கப்பட்ட ஷஷ்ட்யந்தார்த்தங்கள் இங்கு வெவ்வேறு பதார்த்தத்தில் அந்வயித்திருப்து வாக்ய ஸ்வாரஸ்ய விருத்தம்; ‘ஸமஸ்த’ சப்த கதநமும் நிரர்த்தகம். ‘ரூடத்வாத் ப்ரஸித்த்யபாவாத் வா’ என்று அந்வயிக்கின்றது என்னும் பக்ஷத்தில் பஞ்சம்யந்தார்த்தங்கள் இரண்டும் ஒரே வ்யஸ்த சப்த விஷயமாக இருப்பதால் புநருக்தி தோஷம் வரும். இங்கு ‘மஹாதேதைவதாய’ என்னும் வ்யஸ்த சப்தங்கள் ருத்ரனிடத்தில் ரூடி சக்தியுள்ளவைகளாக ஆகக் கூடாவோ என்னும் சங்கைக்கு, இந்த வ்யஸ்த சப்தங்கள் ருத்ரனிடத்தில் ரூடி சக்தியுள்ளவையல்ல என்று பதில் சொல்

வது தான் உசிதமாகும் என்னும் அபிப்ராயத்துடன் ‘ஸமஸ்தஸ்யைவ ததா ரூடத்வாத்’ என்று ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இங்கிருக்கிற அந்ய யோக வ்யவச்சேதார்த்தகமான ‘ஏவ’ காரத்தைக் கவனிக்கும்வர்களுக்கு இவ்விஷயம் வ்யக்தமாகும். இப்படி இல்லாவிட்டால் வ்யஸ்த சப்தம் ரூட மாகலாம் என்னும் சங்கைக்கு ஸமஸ்தம் ரூடமாக இருக்கின்றது என்னும் பதில் அஸங்கதமாகுமன்றோ? ஆகையினால் ‘ஸமஸ்தஸ்யைவ ததா ரூடத்வாத்’ என்பதற்கும் வ்யஸ்த சப்தம் ரூடமன்று என்பதே அர்த்தமாக முடிவதால் ‘வ்யஸ்த்ஸ்ய’ என்னும் இரண்டாவது ஹேது புநருக்தமாகவே முடியும். ஆனால், ‘வ்யஸ்தஸ்ய ரூடத்வாபாவாத்’ என்று ருஜுவான பதிலை எழுதாமல், ‘ஸமஸ்தஸ்யைவ ததாரூடத்வாத்’ என்று ருஜுவல்லாத பதிலை ஏன் எழுத வேண்டுமென்று கேட்கலாம். வ்யஸ்த சப்தங்கள் ருத்ரனிடத்தில் ரூடங்களல்லவென்று சொன்னால், ‘வேறே எது ரூடம்?’ என்று ஒருவனுக்கு சங்கை ஜநிக்கலாம். அப்பொழுது ஸமஸ்த சப்தம் ரூடமென்று சொல்லவேண்டி வருமென்று நினைத்து அதையும் தெரிவிப்பதற்காக இம்மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டு ஹேதுக்களாலும் ‘வ்யஸ்த சப்தங்கள் ருத்ரனிடத்தில் ரூடமல்ல’ என்னும் ஒரே விஷயம் சொல்லப்படுவதால் புநருக்தி தோஷம் ஸம்பவிக்கின்றது.

இரண்டாவது ஹேது வாக்யத்தில் முன்பு சொல்லப் படாத த்ருஷ்டாந்த ப்ரதர்சநாதி விசேஷம் இருப்பதால் புநருக்தியைப் பரிஹரித்தாலும் விகல்பம் அஸம்பாவிதமாகும். ஸங்க்ஷேப விஸ்தர ரூபமான ஒரே விஷயத்தில் விகல்பம் எப்படி ஸம்பவிக்கும்? ஆகவே ‘வா’ என்பது வ்யர்த்தமாகும். இது நிற்க, வ்யஸ்தங்களான ‘மஹாதேதைவதாய’ என்னும் இந்தச் சப்தங்களுக்கு ஸமாஸ ஸம்ஜ்ஞையே இல்லாததனால் ‘லுக்’ ப்ரஸக்தியே இல்லாதிருக்க ‘அலுக்த்வேந’ என்று எழுதினதும் அஸங்கதமாகும். ‘நாமதேயதயா’ ‘அலுக்த்வேந’ என்னும் இரண்டு பர்யாய பத ப்ரயோகமும் அநபேக்ஷிதம். ஆகையினால், ‘வ்யஸ்தஸ்ய’ என்று தொடங்கி ‘ப்ரஸித்த்யபாவாத்’ என்பது வரையிலான சப்தங்களினால் ஒரே ஹேது சொல்லப்படுகின்றதென்று சொல்வது ஸர்வதா வாக்ய ஸ்வாரஸ்ய விருத்தம். ஆனால், ‘வா’ சப்த ப்ரயோகத்திற்கு அநுகுணமாகவே த்ருதீயாந்தார்த்தங்களையே விகல்பத்திற்கு விஷயங்களாக்கி

“வ்யஸ்தஸ்ய நாமதேயதயா ப்ரஸித்த்யபாவாத்”

‘வ்யஸ்தஸ்ய ஸம்ஜ்ஞாத்வேநாபி வா ப்ரஸித்த்யபாவாத்’

என்று இரண்டு ஹேதுக்களாகவே அந்வயிக்கிறோ மென்றால், நடுவில் இருக்கிற 'அஹிர்புத்ந்ய விச்வே தேவாதிவத்' என்னும் த்ருஷ்டாந்தமானது அவையிரண்டினுள் எதில் அந்வயிக்கின்றது என்று சொல்லவேண்டும். இரண்டாவது ஹேதுவில் அந்வயிக்கிறதென்றால் வ்யஸ்தங்களான 'மஹதே தைவதாய' என்னும் சப்த த்வயங்களுக்கு அஹிர்புத்ந்யாதி சப்தங்களுக்குப் போல ஸம்ஜ்ஞாயாம் அலுக்த்வேந ப்ரஸித்தி இல்லை என்று அர்த்தமாகும். இது அந்வய த்ருஷ்டாந்தமா? வ்யதிரேக த்ருஷ்டாந்தமா? அந்வய த்ருஷ்டாந்தம் ஸம்பாவிதமானாலும். வ்யஸ்தமென்கிற விக்ரஹ வாக்யங்களில் அஸம்பாவிதமான அலுக்கைச் சொன்னது அஸங்கதமாகும். இது அந்வய த்ருஷ்டாந்தமென்கிற பக்ஷத்தில் விச்வே தேவ சப்தத்தில் ஸ்ரீ தேசிகன் அலுக் வந்திருப்பதாக ப்ரமித்திருப்பதாகச் சொல்வதும் அஸம்பாவிதமாகும். வ்யதிரேக த்ருஷ்டாந்த பக்ஷத்தில் முன் சொன்ன அலுக்கினுடைய அஸங்கதத்வம் ஸம்பவிக்கும். ஆகையினால்தான் அது தோஷ துஷ்டமென்றால், இது மிகவும் அநுசிதம். இந்த ஹேது வாக்யத்திற்கு ஒருவித தோஷமும் ஸம்பவியாமல் ஸ்வாரஸிகமாக இருக்கக்கூடிய ஒரு அர்த்தம் சொல்லக்கூடுமானால் அதை விட்டுவிட்டு விபரீதமான வேறொரு அர்த்தத்தைக் கல்பித்து அவ்வர்த்தம் பொருந்தாமற்போனால் அக்குற்றத்தை வாக்யம் எழுதினவர் தலையில் சுமற்றுவது பாண்டித்யத்திற்கு அழகாகமாட்டாது. சப்தங்களின் ஸ்வாரஸ்யத்தை நன்கு கவனித்துச் சரியான வழியில் பதார்த்தங்களை அந்வயித்து, இருக்கிற சப்தங்களுடைய ஸாது பாவத்தை ஸ்திரப்படுத்துவதன்றோ பாண்டித்யத்தின் பெருமையாகும்? ஆகையினால், இதை வ்யதிரேக த்ருஷ்டாந்தமாகக் கீழே அந்வயித்து, வ்யஸ்த சப்தத்தை ஸவிபக்திக பர்யாயமாக்கி,

"வ்யஸ்தஸமஸ்தாஹிர்புத்ந்யவிச்வேதேவாதிவச் ச மஹதே தயா ப்ரஸித்த்யபாவாச், வ்யஸ்தஸ்ய ஸம்ஜ்ஞாயா அலுக்த்வேந வா ப்ரஸித்த்யபாவாச்"

என்று இரண்டு ஹேதுக்களாக்கி, முதல் ஹேதுவானது ஸமாஸ ஸம்ஜ்ஞையில்லாத ஸவிபக்திக சப்த விஷயமென்றும் இரண்டாவது ஹேதுவானது ஸமாஸ ஸம்ஜ்ஞையுள்ள ஸவிபக்திக சப்த விஷயமென்றும் சொன்னால், கீழே சொல்லிய ஒரு வித தோஷமும் ஸம்பவியாமல் ஸ்வாரஸிகமான அர்த்த விசேஷமும் ஸித்திக்கிறதுடன் இப்படி அர்த்தம் சொல்லுகிறவர்களுடைய ப்ராமாணிகத்வமும்

புத்திமத்வமும் ப்ரஸித்தமாகும். ஆகையினால் இந்த ஸ்ரீ ஸூக்திகளுக்கு நாம் எழுதியிருக்கும் ஸாதுதமமான அர்த்தத்தைத் தவிர்த்து வேறு விதமான அர்த்தத்தைச் சொல்ல முடியாதென்பதையும், வேறு அர்த்தத்தைக் கல்பித்தால் அப்பொழுது எதிர்வாதிகளால் சொல்லப்படும் அலுக் ரூபமான ஒரு தோஷம் மாத்ரமில்லாமல் மற்றும் பல வித தோஷங்கள் ஸம்பவிப்பதால், அது சப்த ஸ்வாரஸ்யத்திற்கு ஸர்வதா பொருந்தமாட்டாதென்பதையும் பரக்க நிரூபித்தோம்.

இது நிற்க, ஸ்ரீ தேசிகன் விச்வதேவ சப்தத்தில் அலுக் வந்திருப்பதாக ப்ரமிக்கவில்லை என்னும் முக்யமான விஷயத்தையும் இங்கு வ்யக்தமாகக் காட்டுகிறோம். இதே ஸச்சரித்ர ரக்ஷையில் ப்ராக்ருத ப்ரகரணத்திற்கு அடுத்த ப்ரகரணத்தில் ஸ்ரீ தேசிகன்,

"நநு வைச்வதேவாவசிஷ்டேந" "வைச்வதேவ ப்ரியோ மாயோமேந" "யே வைச்வதேவநிரதா:" "தேந க்ருத்வா வைச்வதேவம்" "வைச்வதேவ வதாரஸி" "வைச்வதேவகரணே" "வைச்வதேவ ப்ராணாக்நிஹோத்ரம்"

என்று பலவிடங்களில் அலுக் ப்ரமமில்லாமலே எழுதி இருப்பதைக் கவனித்தல் வேண்டும். இம்மாதிரியே அலுக் ப்ரஸக்தியே சொல்ல முடியாத ப்ராக்ருத சப்த ப்ரயோகங்கள் வேத வாக்யங்களிலும் நூற்றுக்கணக்காக ஸுப்ரஸித்தங்களாக இருப்பதால் பாமரர்களும் அறிந்திருக்கும் இந்த வேத சப்தங்களை ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீ தேசிகன் அறியாமல் போய் விட்டாரென்று சொல்வது பொருந்துமோ?

"விச்வே தேவாஸ்ஸஹஸ்ருஷ்டீ:" "விச்வாந் தேவாந் ஹவிஷா வர்தயந்தீ:" "விச்வேதேவை: விதூர்ஷி:" "விச்வஸ்யா தேவஹூ:" "விச்வேஷாம் தேவாநாம்" "விச்வேஷு தேவேஷு" "ஸஹோ ப்ருஹ்ய" "ஸஹஸ்ய ப்ருஹ்ய" "ஸஹோப்ருஹ்யஸ்ய" "ஸஹஸ்ரம் ப்ருஹ்யம்"

என்று அநேகமாக ஏழு விபக்திகளிலும் விபக்திகளுக்கு லோபமில்லாமல் ப்ரயோகங்கள் இருக்கின்றன. இவ்விடங்களிலெல்லாம் அலுக் வந்திருப்பதாக ஒருவனும் சொல்லமாட்டான். எந்தச் சப்தத்திற்

காவது எல்லா விபக்திகளிலும் அலுக் சொல்லப்பட்டிருந்தாலன்றோ இங்கு அந்த ப்ரமம் ஸம்பவிக்கக்கூடும்? இப்படியே

"வைஶ்வதேவோ வா சரு:" "வைஶ்வதேவம் ஹவி:" "ஹவ்யாநி விஶ்வதேவ்யா" "வைஶ்வதேவேநைவ ப்ரஜாபதி:" "ஸைஷா வை வைஶ்வதேவஸ்ய" "வைஶ்வதேவஸ்ய வைஶ்வதேவத்வம்"

இத்யாதியான இடங்களில் விபக்திகளில்லாமல் லுக் வந்த ப்ரயோகங்கள் இருப்பதால், இங்கு அலுக் வராததற்குக் காரணம் சொல்ல வேண்டும். ஸாமாந்ய ஜநங்களாலும் அறியப்பட்ட இந்த வேத வாக்யங்கள் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுக்குத் தெரியாமல் போய் விட்டன வென்று சொல்ல முடியாதாகையால் ஸ்ரீ தேசிகன் விச்வ தேவ சப்தத்தில் அலுக் வந்ததாக ப்ரமிக்க வில்லை என்பதையும் இங்கு வ்யக்தமாகக் காட்டினோம்.

இப்படி நிரூபித்து விட்டபடியால், இந்த ஸூக்திகளைக் குறித்து 'இவை வ்யாகரண விருத்தங்கள்' என்று வைதிக ஸார்வ பௌமர் தூஷித்திருப்பதாகப் பழி சுமற்றுவதும் சரியன்று என்று சொல்லப் பட்டதாகிறது. தோஷம் இல்லாத விடத்தில் தூஷண ஸம்பவம் ஏது? இதிருக்க, வைதிக ஸார்வ பௌமர் ஸுதீவிலோசநத்தில் தூஷித்திருப்பது வேறு விஷயமென்பதையும் இங்கு வ்யக்தமாக்கு கிறோம். பார்வண ச்ராத்த ப்ரயோக ப்ரகரணத்தில் விச்வ தேவர் களைக் குறித்து இரண்டு ப்ராஹ்மணர்களை வரிக்க வேண்டு மென்னும் அர்த்தத்தைத் தெரிவிக்கிற "த்வௌ விச்வதேவார்த்தே" என்னும் வாக்யத்திற்கு வ்யாக்யாநம் பண்ணுமிடத்தில், வைதிக ஸார்வ பௌமர்,

"அத்ர கேசிந்நவோத்ர விஶ்வதேவாய இத்யத்ர விஶ்வ ஶப்தம் ப்ரயோகஸாமாந்யாத் பஹுவசநாந்தம் பட²ந்தி। தத்ர விஶ்வ ஶப்த ஸாத்ருஶ்ய நிமித்த ஜ்ஞாநாஜ்ஞாந விஜ்ருʼம்பி⁴தம்। அஸ்மாபி⁴ஸ்து ஶ்ரௌதஸ்மார்தப்ரயோகேஷு வைஶ்வதேவம் ஹவி: வைஶ்வதேவேந வாரணா இத்யாதி³ஷ்வேகவசநாந்தமேவ த்³ருஷ்டம்"

[ச்ராத்த ப்ரகரணத்தில் விச்வதேவர்களை வரிப்பதற்காகச் சொல் லப்படுமெதான 'விச்வ தேவார்த்தே' என்று சொல்லவேண்டிய இடத் தில் சிலர் 'விச்வே தேவார்த்தே' என்று சொல்லுகிறார்கள். அது வ்யாகரணம் தெரியாததனால் ஸம்பவிக்கின்றது] என்று எழுதி

இருக்கிறார். இந்தத் தூஷணம் ச்ராத்தம் பண்ணிவைக்கும் சாஸ்த்ர ஜ்ஞாநமிராத சில புரோஹிதர்களைப் பற்றியது என்பதற்கு வேறு ஸாக்ஷிகள் தேடவேண்டாதபடி இக்காலத்திலும் நூற்றுக்குத் தொண்ணூறு புரோஹிதர்கள் "விச்வே தேவார்த்தே" என்று அப சப்தமாகவே சொல்லிக் கொண்டிருப்பது எங்கும் ஸுப்ரஸித்த மாக இருப்பதால் வ்யக்த மாகின்றது. இதை வைதிக ஸார்வ பௌம ரும் "அத்ர விச்வ தேவார்த்தே இத்யத்ர" என்று ச்ராத்த ப்ரகர ணத்தைக் குறிப்பிடும் 'அத்ர' சப்தத்தினாலும் "அர்த்தே இத்யத்ர" என்று ஸம்பந்தமான 'அர்த்த' சப்தத்தைக் குறிப்பிட்டுக் காட்டி அந்தச் சப்தத்தில் தூஷணம் சொல்வதாலும் வ்யக்தமாகக் காட்டி இருக்கிறார். ஸ்ரீ தேசிகனுடைய ஸச்சரித்த ரக்ஷையில் "அஹிர் புத்ந்ய விச்வே தேவாதிவத்" என்னும் ஆநுபூர்வியானது தத்கால புஸ்தகங்களில் காணப்படுவதால், இது 'அஹி: புத்ந்ய:' 'விச்வே தேவா:' என்னும் ப்ரதமாந்த சப்தங்களுடைய பாகங்களான 'அஹிர் புத்ந்ய விச்வே தேவ' என்பவைகளுக்கு அநுவாதமென்று தான் சொல்லவேண்டும். இங்கு 'அஹி' சப்தமும் 'விச்வ' சப்த மும் ப்ரதமாந்தமாக இருப்பதால், அவைகளைப் போலவே ஒரே மாதிரியாக இருக்கும் கீழே காட்டிய வேத வாக்யங்களெல்லாவற்றி லும் 'புத்ந்ய' 'தேவ' சப்தங்களும் அதே விபக்த்யந்தங்களாகவே காணப்படுவதாலும் இவையும் ப்ரதமாந்தங்களின் அநுவாத மென் றே சொல்வது உசித மாகும். ஆகையால் வைதிக ஸார்வ பௌமர் தூஷித்தது வேறு விஷயம், ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி வேறு விஷயம் என்பது அவரவர்கள் வாக்யங்களாலேயே வ்யக்த மாகின்றது. தவி ரவும், இங்கு 'வைச்வதேவம்' 'வைச்வதேவேந' என்னும் இடங்களில் அலுக் காணப்படவில்லை என்று வைதிக ஸார்வ பௌமர் எழுதி இருக்கிறார். இது ஸ்ரீதேசிக ஸூக்தி விஷயமாக இருந்தால், ஸ்ரீதேசி கன் அலுக் இல்லாமல் ஷஷ்டீ சப்த ப்ரயோகங்களைப் பல விதமாகச் செய்திருக்கிறபடியால், அவைகளைக் குறிப்பிட்டுக் காட்டி, 'உத்தர க்ரந்தங்களில் அலுக் இராமல் எழுதி இருப்பதால் ஸ்ரீதேசிகன் பூர் வோத்தர விருத்தமாக எழுதி இருக்கிறார்' என்றல்லவோ அவர் தூஷித்திருக்கவேண்டும்? ஆகையினாலும் வைதிக ஸார்வபௌமரு டைய தூஷணம் ஸச்சரித்ர ரக்ஷா ஸ்ரீஸூக்தி விஷயமன்று என் பதைப் பண்டிதர்கள் கவனிக்க வேண்டும். ஆகவே ஸுந்தர தேசிகர் என்பவர் தன்னுடைய ப்ரம பரத்தை நிரபராதியான வைதிக ஸார்வபௌமர் சிரஸ்ஸில் சுமற்றினார் என்பதும் வ்யக்தமாகின்றது.

இப்படி ஸச்சரித்ர ரக்ஷா ஸூக்தியில் ஒருவித தோஷ ப்ரஸக்தி யுமில்லை என்பதை இங்கு வ்யக்த மாக்கி விட்டதால், இதைப் போலவே ஸ்ரீ தேசிகனுடைய வேறு ஸ்ரீ ஸூக்திகளிலும் எவ்வித தோஷத்திற்கும் ப்ரஸக்தியே இல்லை என்பதற்கு நிதர்சனமாக இதை உதாஹரித்துக் காட்டின வ்யாஜத்தினால் கிஞ்சித்கரித்து க்ருதார்த்தனாக ஆகின்றேன்.

இத்தம் ஶ்ரீநிகமாந்தார்ய ஸூக்திஸார [illegible] ।
[illegible] ॥

புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்வதர்மம்

[மஹாமஹோபாத்யாய. தட்டை. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(ஸஞ்சிகை 6 பக்கம் 178 தொடர்ச்சி)

மற்றவர்களைப்பற்றி நாம் இப்பொழுது வ்யவஹரிக்க வரவில்லை. அது ஆவச்யகமுமன்று. ப்ராஹ்மணர்களுக்கு இப்பொழுது நேர்ந்திருக்கிற விபத்தை நோக்கியே துக்க ஸாகரத்தில் அழுந்தி இவ்விஷயத்தை எழுதலானேன். யாகம் செய்தல் செய்வித்தல், வேதமோதுதல் ஓதுவித்தல், பொருளை ஈதல் ஈட்டல், இந்த ஆறும் ஸாமாந்ய தர்மங்கள். விசேஷித்து ஸ்நாநத்தை முன்னிட்ட ஸந்த்யை ஜபம் ஹோமம் தேவபூஜை அதிதிபூஜை வைச்வதேவம் ஆகிய இந்த ஆறு கர்மாக்களும் நாள் தோறும் அவசியம் ப்ராஹ்மணர்களால் அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகள் இவைகள் முற்றிலும் லோபித்துவிட்டன. ஆயிரம் ப்ராஹ்மணர்களுக்குள் யாரோ ஒருவர் அநுஷ்டிப்பரோ இல்லையோ என்கிற ஸந்தேஹம் நேர்ந்து விட்டது. மனிதன் பந்தகங்களான கர்மபாசங்களை அறுத்து ஸம்ஸார வலையினின்று மீட்சி யடைந்து மீண்டும் கர்ப்ப வாஸமில்லாமல் சாச்வதமான மோக்ஷ ஸுகத்தைப் பெறவேண்டுமென்கிற விருப்பமுடையவனாக ஆவதற்கும் கோரியவண்ணம் பரமபுருஷார்த்தரூபமான மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸுகத்தை அளிக்கிற பரம புருஷ

னுடைய ப்ரஸாதத்தைப் பெறுவதற்கும் இந்த ஸ்வதர்மாநுஷ்டானமே ஸாதகம். காலபலத்தால் தர்மங்களுக்கு லோபம் வந்து விட்டது. 'எல்லா தர்மங்களும் கலியுகத்தில் நஷ்டங்களாகி விடும்' என்னும் மஹர்ஷி வசநம் வீண் ஆகுமோ? மஹர்ஷி ஜ்ஞாந த்ருஷ்டியினால் வருங்கால வ்ருத்தாந்தத்தைக் கண்டறியும் திறமை வாய்ந்தவரன்றோ? இது கலி புருஷனுடைய ஸாம்ராஜ்யம் நிரங்குசமாக நடைபெறுகிற ஸமயம். கலியின் முதிர்ச்சியினால் ப்ராஹ்மணர்களுக்குக் கரணத்ரயமும் கெட்டு விட்டது. துரந்ந போஜநத்தால் முகம் அசுத்தமாய்ப் போய் விட்டது. துஷ்ப்ரதிக்ரஹத்தால் கை பயனற்றதாக ஆயிற்று. சிந்திக்கத் தகாத வஸ்துவைச் சிந்திப்பதனால் மனதும் அசுத்தமாயிற்று. இக்காரணங்களால் இவர்கள் நிர்வீர்யர்களாகி அலக்ஷ்யமாகக் கண்டவர்கள் காலால் இடறிச் செல்லும்படியான அவஸ்தைக்கு வந்து விட்டார்கள். முற் காலத்தில் இருந்த வஸிஷ்ட விச்வாமித்ராதிகளுடைய ப்ரபாவத்தை நினைத்துப் பார்த்தால் தேகத்தில் நடுக்க முண்டாகின்றது. திருவயோத்தியில் சக்ரவர்த்தித் திருமகன் திவ்ய ஸபையில் வஸிஷ்டருக்கு இருந்த கௌரவம் என்ன? அவ்வாறே தசரத மகாராஜன் பக்கத்தில் விச்வாமித்ரர் யாக ரக்ஷணார்த்தமாக ஸ்ரீராமபிரானை யாசிக்கவந்த தருணத்தில் அவரைக்கண்டு அரசன் பரபரந்து எதிர் கொண்டு "[illegible]" இத்யாதியான மதுரமான வசநங்களை வெளி இட்டுக்கொண்டு அவருடைய மநோரதத்தைப் பூர்த்தி செய்விப்பதில் அரசனுக்கு உண்டான த்வரையும் பக்தியும் என்ன? இத்தகைய மகிமை வாய்ந்திருந்த மஹர்ஷிகளும் ப்ராஹ்மணர்கள், நாமும் ப்ராஹ்மணர்களா? அந்தோ! இது என்ன? அவர்களோடு நம்மை ப்ராஹ்மண்ய தர்மத்தாலேயே ஸாம்யமுள்ளவர்கள் என்று சொல்வது, பதார்த்தத்வமென்கிற தன்மை இருப்பதனால் மலையும் பரமாணுவும் ஸமம் என்று சொல்வது போல் பரிஹாஸத்துக்கு இடமாகின்றது.

இப்பொழுது காந்தி என்பவர் தக்க பரிவாரங்களுடன் தெற்கு திக்கு நோக்கி புறப்பட்டிருக்கிறார். எங்கும் சென்று கலி தர்மத்தைக் குடி இருக்கும்படி செய்யப்போகிறாராம். இந்தக் கார்யத்தை உத்தேசித்து புறப்பட்டிருக்கிற மஹாபுருஷனுக்கு பக்கம் பக்கமாக வரவேர்ப்பு பத்ரங்களும் பணமுடிப்பும் அளிக்கப்படுகின்றனவாம். இவர் செய்யும் கார்யம் தர்மங்களை அழிப்பதிலும் ஆசாரங்களை ஒழிப்பதிலுமே முடியுமென்று தெரிகின்றது. ஸாதுக்களைப் பழிப்

பதும் சேரியில் விழிப்பதும் தேசத்திலுள்ள அமைதியில் சுழிப்பதும் ஸ்வபாவமாக இருக்கிற ஒரு மனிதனைப் போற்றுவதும் தேற்றுவதும் கலியின் வைபவமே. இந்த மஹா புருஷனுக்கு முக்ய சிஷ்யராகிய ஒருவர் இந்தியா பேபரில் வரைந்திருக்கிற ஒரு வ்யாஸத்தைப் பார்த்து என் மனம் கொதிக்கின்றது. அதில், பஞ்சமர்கள் ஆலயத்தில் ப்ரவேசிப்பது, அவர்களோடு நேசத்துடன் கலந்து உறவாடுவது, தீண்டாமையை ஒழிப்பது, ஜாதி ஹிந்துக்கள் தங்களைப்போல் பஞ்சமர்களையும் உரிமையுடையவர்களாகச் செய்வது, கலந்து போஜநம் செய்வது, இவை முதலிய பற்பல பிதற்றல்கள் இருக்கின்றன. இதை எழுதினவர் ஒரு வைஷ்ணவ ப்ராஹ்மணர். இவர் புத்தி போன போக்கை அறிஞர்கள் பார்க்கலாம். இவர் நீதிபதி ஸபையில் வ்யவஹார ஸாரங்களை எடுத்து விளக்கிச் சொல்லக் கூடிய திறமை வாய்ந்த வாவதூகராம். இப்படிப்பட்ட போலி ப்ராஹ்மணர்களாலேயே இந்தத் தர்ம விப்லவம் உண்டாயிருக்கிறது. சூத்ரர்களும் வைச்யர்களும் இந்த வழிக்கே வரவில்லை. இந்த ப்ராஹ்மணர்களே எல்லா அக்ரமங்களையும் தாமே முதலில் நடத்திக்காட்டுகிறார்கள். ம்லேச்சர்களுக்கும் தமக்கும் யௌந ஸம்பந்தத்தைச் செய்துகொள்ளுகிறார்கள். ஜாதிவிட்டு ஜாதியைத் தேடி உத்வாஹ ஸம்பந்தத்தைத் துணிந்து செய்துகொள்ளுகிறார்கள். காராக்ருஹத்தில் வாஸம் நேர்ந்தால் கொடிய பாபமன்றோ? அதற்குத் தகுந்த ப்ராயச்சித்தம் செய்துகொண்டாலுங்கூட மீண்டும் அவனுக்குச் சுத்தமான ப்ராஹ்மண்யமேற்படாது. நாலு மாத்துத் தங்கம்போல் தான் அவன். பத்தரை மாத்துத் தங்கம்போன்ற சிறந்த ப்ராஹ்மண்ய முள்ளவனாக ஆகான். ஹவ்ய கவ்யங்களைச் செய்து தேவ பித்ரு கார்யங்களை நடத்த அவனுக்கு அதிகாரம் கிடையாதென்கிற தர்ம சாஸ்த்ர வசநங்கள் ஸ்பஷ்டமாக ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் பொழுதே நிர்ப்பயமாக காரா க்ருஹம் புகுவோம் என்கிற ப்ரதிஜ்ஞையுடனே பல தடவை இந்த ப்ராஹ்மண ப்ரஷ்டர்கள்தாம் ஜயில்களை நிரப்புகிறார்கள். இவ்வளவு காலமாகப் பஞ்சமர்களையும் இன்னும் அவர்களைப் போன்ற சில ஜாதீயர்களையும் நாம் கீழ்ப்படுத்தித் தீண்டக்கூடாதென்று சொல்லி விலக்கி வைத்ததனாலுண்டான பாபத்துக்கு, நாமே அந்தத் தீண்டாமையை விலக்கி அவர்களுக்கு ஆலய ப்ரவேசம் செய்வித்து அவர்களோடு சேர்ந்து பேதமின்றி ஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்தால் மாத்ரம் நாம் தகுந்த ப்ராயச்சித்தம் செய்து கொண்டவர்களாவோமென்பது இவர்களுடைய வாதம். இதனால் இந்து மதம் புநிதமாய் விடுமாம். இப்படியும் ப்ராஹ்ம

ணர்கள் பத்ரிகைகளில் வரைகிறார்கள். ஹா! ஹா! இதென்ன கஷ்ட காலம்! இத்தருணத்துக்குப் பொறுமையே ஸாதுக்களுக்குப் பூஷணமாகும். பொறுமை உள்ளவனுக்கு ஒருகாலும் குறைவு ஏற்படாது. ஸீதாபிராட்டி ஆஞ்ஜநேயனை நோக்கி, "𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍀 𑌬𑌤 𑌗𑌾𑌥𑍇𑌯𑌂 𑌲𑍌𑌕𑌿𑌕𑍀 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿 𑌮𑍇 । 𑌏𑌤𑌿 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑍋 𑌨𑌰𑌂 𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌾𑌦𑌪𑌿 ॥" என்று சொன்னவண்ணம் பொறுத்திருந்தால், பிற்காலம் நமக்கு நல்ல ஸமயம் வரும்; அப்பொழுது நன்மையைக் கட்டாயம் அடையலாம். வந்தேறியான அந்ய தர்மமானது அறிவீனத்தால் ஆதரிக்கப்பட்டிருந்தாலும், அதைப் புறக்கணித்து, குல பரம்பரா ப்ராப்த ஸ்வ தர்மத்தையே நாம் கைக்கொள்ள வேண்டும். இதுவே விவேக க்ருத்யம். "𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌰𑌤𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌨𑌰𑌃" என்று அபியுக்தர்கள் முறையிடுகிறார்கள். இந்த ஸ்வதர்மாநுஷ்டாநந்தான் பகவந் முகோல்லாஸகரம். இதுவே முக்தி பர்யந்தமான எல்லா ச்ரேயஸ்ஸுக்களுக்கும் காரணம்.

பகவத் கீதையில் ஸ்ரீ கண்ணபிரான் அர்ஜுநனை உத்தேசித்து, "ஸ்வதர்மாநுஷ்டாநமே முக்யம்; அதை நீ கைவிடக் கூடாது ; அதனால் எல்லா நன்மைகளையும் அடைவாய்; நீ சோகத்துக்கு இடம் கொடாதே; மனச்சோர்வை நீக்கி, தைர்யத்தை அவலம்பித்து ஸ்வதர்மமான யுத்தத்தைச் செய்வாயாக" என்று ஸ்வதர்மத்தையே செய்யத்தக்க தர்மமாக உபதேசித்திருக்கிறார். இதை அநுஷ்டிப்பதில் கொஞ்சம் ந்யூநதை ஏற்பட்டாலும் பாதகமில்லை; அதனால் நன்மையே உண்டாகும். அந்ய தர்மங்களைக் கைப்பற்றலாகாது. இந்தக் கருத்தை ஸ்ரீ கண்ணபிரான் அர்ஜுநனுக்கு, "𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍 । 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌯𑌾𑌵𑌹𑌃 ॥" என்று வெளியிட்டார். ஆகையால் அஜ்ஞாநத்தால் அந்யர்களுடைய வேஷ பாஷாதிகளை நாகரிக பாவனையால் ஏற்று, ஸ்வமதம் ஸ்வாசாரம் ஸ்வஜாதி ஸ்வதர்மம் இவைகள் அனைத்தையும் இழந்து, ம்ருகங்கள் போல் காமசாரம் காமவாதம் காமபக்ஷணம் ஜாதிப்ரம்சகரமான கார்யங்கள் இவைகளைச் செய்துகொண்டிருக்கிற ப்ராஹ்மணர்களின் நிலைமையைப் பார்த்து, விவேகிகளான ஆஸ்திகர்கள் இவர்களைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்த முயற்சிப்பதுமன்றி, இவர்களால் உண்டாகிற தேசக்ஷோபத்தை நீக்கவும் முற்படவேண்டும் என்று வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ:

ஸர்வமத விநா விடை

வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி

V. R. நரஸிம்ஹாசார்யர் எழுதியது.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 6 பக்கம் 171)

உலகத்தில் மாந்தர்கள் பெறவேண்டிய க்ஷேம லாபங்களுக்கெல்லாம் ஆத்மஜ்ஞாநம் (அதாவது: தந்தம்மைப் பற்றிய உண்மை உணர்வு) இன்றியமையாத ஸாதநமென்பதை முன்னமே சொல்லியிருக்கிறே னன்றோ? ப்ரத்யக்ஷம் முதலான லௌகிக ப்ரமாணங்களையும், அவைகளின் மூலமான யுக்திகளையுங் கொண்டு எத்துணை தான் சோதித்துப் பார்த்தாலும், அந்தச் சோதனையினால் தேஹேந்த்ரியாதிகளை விட வேறான ஆத்மாவெனப்படுகிற தனித் தத்வமொன்றிருக்கின்றதென்று கண்டுபிடிப்பதே மிக்க அரிதாகிவிடுகிறது. ஒருக்கால் மஹத்தான ப்ரயத்நத்தினால் இத்தேஹத்திற்குள் ஆத்மாவென்கிற ஒரு தனிப் பொருள் இருக்கிறதென்று ஸாதிக்கக் கூடுமானாலும், 'அப்பொருள் இச்சரீரத்தோடு கூடத் தோன்றி, இது அழியும்போது தானுமழிந்து விடுகிறதா? அல்லது இத்தேஹத்திற்கு முன்னும் பின்னும் தொடர்புள்ளதா?' என்றெழும் சங்கைக்கு அவற்றால் சற்றும் ஸமாதாநமுண்டாகிறதில்லை. ஏனெனில்: எவ்வளவுதான் ஸாவதாநமுள்ளவரின் அநுபவமானாலும், எத்துணை தான் நிபுணரின் யுக்தியென்றாலும், அவைகளின் அதிகார எல்லை இத்தேஹத்தோடு தீர்ந்துவிடுகிறதே யன்றி, இதற்கு முன்னே பின்னே ஒரு அரையங்குல அளவிற்குக் கூடச் செல்லுவதாக வில்லை. இனி இப்படிப்பட்ட ஆத்மஜ்ஞாநத்திற்குச் சரீரமே ஆத்மாவென்கிற நினைப்பை விட என்ன அதிக மதிப்பிருக்கிறது? ஆத்மா நீடித்து நிற்குமொரு பொருளென்று நிர்ணயம் வந்தாலன்றோ அது பெறவேண்டிய நெடிய பயனைப்பற்றியும், அவ்வித புருஷார்த்தத்தின் ஸாதநத்தைப் பற்றியும் சிந்திக்க இடமுண்டாகும்? இவ்வாத்மாவைப்பற்றி, 'இது தேஹாந்தர ஸம்பந்தமுள்ளதா? இல்லாததா?' என்று மதவாதிகளுக்குள் எப்போது அபிப்ராய பேதமேற்பட்டதோ, அதனாலேயே இது தேஹாந்தரத்தில்

முன்பின் ஸம்பந்த முள்ளதே யானாலும், அந்த ஸம்பந்தம் ஸாதாரண அநுபவ யுக்திகளுக்கு இலக்காயிருக்கவில்லை யென்று விளங்கிவிடவில்லையா? இன்றேல், உலகத்தில் நாஸ்திகரே இருக்க மாட்டாரன்றோ? ஆனால் சில ஸாஹஸக்காரர்கள், 'ஸ்திரமான ஆத்மா உண்டென்று ஆஸ்திகர் கூறியதை மறுப்பதற்காகவே நாஸ்திகர் அதில்லையென்று ஹடமாக வாதிக்கின்றன ரென்றும் சொல்லுகிறார்கள். அது யுக்தமல்ல. ப்ரத்யக்ஷமாகப் பார்க்கக் கூடிய பொருட்களைப்பற்றி ஆஸ்திகர் சொல்வதையெல்லாம் நாஸ்திகரும் அங்கீகரிக்க வில்லையா? அப்படியிருக்க, இவ்வாத்மாவைப் பற்றிச் சொல்லுவதை மாத்ரம் அங்கீகரிக்காமல் ஆக்ஷேபிக்கின்றன ரென்றால் அதற்கு இவ்வாத்மா ப்ரத்யக்ஷாநுமாந ரூபங்களான ப்ரஸித்த ப்ரமாணங்களைக் கொண்டு காணக்கூடாதிருத்தலே யன்றோ காரணமாக வேண்டும்? எனவே, இவ்வாத்ம தத்வத்தின் நெடிய நிலையைப் பற்றி வேதசாஸ்த்ரம் விவரித்துக் கூறியிராவிட்டால், அதைத் தெரிந்துகொள்ள வேறு வழியே கிடையாதாகையால், அதற்குற்ற நிலையான மஹா புருஷார்த்தத்தையோ அதன் ஸாதநத்தையோ கனவிற்கூட நினைப்பதற்கு ஸந்தர்ப்பம் கிடைக்காமற் போய்விடுமாதலின், ஈதொன்றே இவ்வேத சாஸ்த்ரம் ப்ரமாண வகுப்பிற்குள் வெகுவாகச் சிறப்புற்று விளங்குகிறதான ப்ரதாந ப்ரமாணமென்பதற்குப் போதுமானது.

தம்பீ! நீ இதைத் தெரிந்துகொண்டாயன்றோ? இனி, இவ்வேதசாஸ்த்ரத்தின்கண் ப்ரமாணத்தன்மைக்குரிய பெருமையுள்ளதாவெனும் விஷயத்தை விவரிக்கிறேன். ஆயுர்வேதம் தநுர்வேதம் என்பனவெல்லாம் இவ்வேத சாஸ்த்ரத்தின் சில பாகங்கள்தான். அவற்றுள் ஆயுர்வேதத்தை யெடுத்துக்கொள்வோம். இது, சரீரேந்த்ரியங்கள் ஏதேனும் உபாதியினால் பீடிக்கப்பட்டுத் தத்தம் தொழிலைச் செய்வதற்கு வகையற்றிருந்தால், தக்க சிகித்ஸா முறையினால் அவ்வுபாதியைக் களைந்து, அவ்வவை தந்தம் தொழிலை நடத்துவதற்கான ஆற்றலைப் பெற உதவி யளிக்கின்றது. உதாரணமாக: கண்ணில் காமாலை யெனப்படுகிற ரோகம் உண்டானால், அக்கண் பொருட்களை உள்ளபடி அததன் உருவத்தோடு தெரிந்துகொள்ளும் ஆற்றலை யிழந்து விடுகிறது. ஆயுர்வேதம் அதற்கென்று ஒரு அஞ்ஜநத்தைக் கூறுகின்றது. அதன்படி அவ்வஞ்ஜநத்தை உபயோகித்தால் அக்குற்றம் நீங்கிக் குணமடைந்து, கண் உள்ளபடி பொருட்களைக் காட்டுகின்றது. இந்தப் பாகத்தில் சற்றுக்கூட ஸந்தேகிப்பதற்கு இடமில்லை. இது நம்மெல்லோருடைய அநுபவத்திலும் அறியக்

கிடக்கின்றது. இனி இந்த அநுபவமே, நீடித்த வ்யாதிகளான குல்மம் க்ஷயம் முதலானவற்றைப் பற்றி அந்தச் சாஸ்த்ரம் சொல்லும் சிகித்ஸா முறைகளையும் நம்பும்படி செய்துவிடுகிறது. சிறியதற்குள்ள ந்யாயம் பெரியதற்கும் துல்யமானது தானே? இப்படியே விஷக்கடிக்கு அது சொல்லும் வைத்யத்தை இன்றுவரை நாம் அநுபவித்திராமற் போனாலுங்கூட நம்பிச் செய்துகொள்ளுகிறோம். இந்த ந்யாயத்தின்படியே, இந்த வேத சாஸ்த்ரத்தின் உத்தம பாகமான உபநிடதங்கள் சொல்லும் சிகித்ஸைகளும் சரியாக விருக்குமென்றே நம்புகின்றோம். புறக்கண்ணைப் பற்றிய வரையில் ஆயுர்வேதங் கூறுகிற முறை பயன் பெறுவதுபோல, அகக்கண்ணைப் பற்றி வேதாந்த சாஸ்த்ரம் காண்பிக்கும் முறை பயனுளதாகிறது. அது சொல்வதென்ன? இந்த நேத்ராஞ்ஜநம் புறக்கண்ணிற் படர்ந்திருக்கும் காமாலை நோயைப் போக்கிக் கொடுப்பதுபோல, யோகாஞ்ஜநமெனப்படுகிற உயர்தரமையானது மனக் கண்ணுள் படர்ந்திருக்கிற அஜ்ஞாநமெனும் திமிரத்தைத் தூரத்தி விட்டு, ஆத்மஜ்ஞாநவொளியை யீந்து, அதனுதவியால் தேஹேந்த்ரியாதி விலக்ஷணமாய் நித்யமாய் நிர்மலமாயுள்ள ஆத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கச் செய்கின்றது. 'மையைக் கண்ணால் பார்க்கவும் மாட்டே'னென்று ஒருவன் தரையில் பிடிவாதமாய்க் கவிழ்ந்து கிடந்தால் காமாலை போய்விடுமா? கண் தான் பார்வையைப் பெறுமா? பெறாதன்றோ? அதுபோல, 'யோகமார்க்கத்தில் ஓரடி கூட எடுத்து வைக்க மாட்டேன்; எனது போக விருளிலேதான் கிடந்து புரளுவேன்' என்று ஒருவன் அதில் உழன்றுகொண்டிருந்தால் அவன் மனக்கண் ஒளிபெறுவது எதைக் கொண்டு? ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கலாமென்ற ஆசைக்குத்தான் இனி எங்கு இடமுண்டு? ஒன்றுமே யில்லையன்றோ? ஆகவே இவ்வேத சாஸ்த்ரம் சொல்லியது அநேகம் பலித்திருப்பதால், ஆத்மாவைப் பற்றி இது சொல்லுவதும் சரியாகத்தான் இருக்குமென்கிற நம்பிக்கையுடன் ப்ரவ்ருத்திக்க வேண்டுமே தவிர, 'நீந்தத் தெரிந்த பிறகுதான் தண்ணீரி லிறங்குவே'னென்பதுபோல் குருட்டுப் பிடிவாதம் பிடிப்பதில் ப்ரயோஜநமொன்று முண்டாகாது. நம்பிச் செய்து பார்க்க வேண்டியதுதான் முன்னுக்கு வருவதின் லக்ஷணம். எனவே: இதன்கண் ப்ரமாணத்திற்குள்ள எல்லாப் பெருமையும் நன்றாய்ப் பொருந்தியிருக்கிறதென்பதே வைதிகரின் துணிபு.

கோபால்:—அண்ணா! வேதாந்த சாஸ்த்ரத்தின் உபதேசப்படியே நடந்து பார்க்கலாம். நம்பிச் செய்தும் பயனில்லாமற் போய்

விடுமோவென்று ஸந்தேஹமுண்டானாலும், அதையும் பொருள் படுத்தாமல் செய்தும் பார்க்கலாம். அவ்வளவோடு போய்விடுமானால், ஆலோசனையில்லை. ஆனால் துறட்டுப் பழத்தை நம்பிக் கையிலுள்ள கனியை யிழந்தது போலங்குமில்லை யிங்குமில்லை யந்தராளம்' எனுங் கதையாக, ஆத்மலாபமும் முயற் கொம்பாகி விஷய போகமும் அழிக்கப்பட்டுப்போமானால் அநர்த்தமாக வன்றோ முடியுமென்கிற பயம் குறுக்கிட்டுத் தடுக்கையில் மாந்தர்கள் யோக மார்க்கத்தில் எப்படித் தாராளமாய் ப்ரவ்ருத்திக்க முடியும் என்று என் நெஞ்சம் ஐயுறுகிறதே?

பலராம்:—தம்பி! அச்சப்படாதே; அப்படி ஸந்தேகிப்பதற்கு இடமேயில்லை. இதை நிரூபிக்கிறேன் கேள். ஆத்மாவென்பதொன்று உண்மையில் இல்லாமற் போய்விடுமானால் அதனை அடைவதற்கென்று விஷய ஸுகத்தையெல்லாம் வெறுத்துத் தள்ளியது அசட்டுத்தனமாகுமென்றல்லவோ நீ நினைக்கிறாய்? நல்லது; அப்படியே வைத்துக்கொள். அதற்காக நீ என்ன செய்கிறதாயிருக்கிறாய்? ஆத்மாவென்கிற பேச்சையே எடுக்காமல் இவ்விஷய போகத்திலேயே மண்டிக் கிடக்கலாமென்ற யோஜனையா? அப்படியாகில் யான் உன்னை யொன்று கேட்கின்றேன். அதற்கு என்ன பதிற் சொல்லப்போகிறாய்? நீ நினைக்கிறபடி ஆத்மாவென்பதொன்றில்லாமல், அது முயற்கொம்புபோலப் பொய்யாகவே யிருந்து விட்டாலெத்தவும் நலமாயிற்று. அப்படிக்கின்றி, உண்மையில் அஃதொன்றிருந்து தங்கி நின்று விடுமானால், அதைப்பற்றிச் சிந்திக்காமலும், அதன் பிற்காலத்திய அநுகூலத்தை யொன்றையுந் தேடாமலும், நீ அற்பமான அஸ்திரமான இவ்விஷய ஸுகாபாஸத்தில் மயங்கிக் கிடந்து விட்டது அநர்த்தமாக முடியாதா?

கோபால்:—ஆமாம் அண்ணா! இதைக் கேட்கும்போது மிக்க பயந்தானுண்டாகிறது. ஆனாலும் அப்படியும் போக முடியாமல் இப்படியும் போக முடியாமல் தடுமாற்றமாகவன்றோ என் மனம் திகைக்கின்றது? இதற்கு நல்லதொரு போக்குவீட்டைத் தாங்கள் தான் காட்டவேண்டும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீ ராமஜயம்

ஸ்ரீ ஸீதாராம தாம்பத்யம்

நாம் த்யானம் பண்ணும்பொழுதும் ஸ்தோத்ரம் பண்ணும் பொழுதும் ப்ராயச: ஸீதா ஸமேதரான ராமரையே த்யானித்தும் ஸ்துதித்தும் வருகிறோம். பரமாத்மாவாக நாம் ராமரை யோஜிக்கும்போது, லக்ஷ்மீ தேவியான ஸீதாதேவியுடன் அவரை உபாஸிப்பதே சரியான முறையாகும். உபாஸகர்கள் விஷயமாக, ஸீதா ராமர்களுக்கும் லக்ஷ்மீ நாராயணர்களுக்கும் பேதம் கிடையாது. அவர்கள் அவ்விதம் பேத புத்தி பண்ணுவதும் பிழையாகும். ஸ்ரீராமன் மநுஷ்யாவதாரத்தில், பதி பத்நிகள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை எடுத்துக் காட்ட வந்தார் என்பதை இதிஹாஸமானது சொல்ல ஏற்பட்டதென்பதும் தவறாகாது. ஏனென்றால்: ஸ்ரீராமர் சரியான புருஷர் [“[illegible]”] எனப்படுகிறார். இவ்விஷயத்தை, “[illegible]” என்று ஹநுமார் எடுத்துச் சொல்லுகிறார். மேலும், க்ருஹஸ்தர்கள் ஐஹிகாமுஷ்மிகங்களை உத்தேசித்துப் பாராயணம் பண்ணிவரும் இந்த ராமாயண க்ரந்தம், ஸ்ரீ ஸீதா ராமர்களின் தாம்பத்யத்தையே முக்யமாகக் கொண்டிருக்கிறது. மோக்ஷத்தையே எதிர்பார்க்கும் முமுக்ஷுக்களுக்குப் பரம நிவ்ருத்தியைப் போதிக்கும் ஸ்ரீமத் பாகவதம் போலன்று இந்த க்ரந்தம். க்ருஹஸ்தாச்ரமத்தில் அதிகமாகக் காணப்படுவது ச்ருங்கார ரஸம். அந்த ரஸம் குறைந்துபோகும் பக்ஷத்தில் தாம்பத்யத்தின் அழகு குறைந்துவிடும். முமுக்ஷுக்களுக்கு முக்யமாய் வேண்டியது சாந்தி ரஸம். அதில் ஏதாவது தவறு ஏற்பட்டால் முமுக்ஷுத்வம் நிலைக்காது. ஆகையால் இவை இரண்டும் சீர்திருத்தமடைய வேண்டுமாகையால் அந்த ரஸங்கள் ததும்பியிருக்கும் க்ரந்தங்களைப் பாராயணம் பண்ணுவதே உசிதமான முறையாகும்.

உலகத்திலுள்ள ஸமஸ்த பாபங்களுக்கும் காரணம் காம க்ரோதங்களே. “[illegible]” என்றார் கீதாசார்

யனும். அந்தக் காமமானது தவறுதல் அடைவதற்குக் காரணம், ரஸங்களின் விபர்யாஸங்களே. ஆகையால் ரஸங்கள் கெடாதிருந்தால் பாதகங்களுக்கு இடமே இல்லை. ராமாயண பாராயணத்தால் நம்மிடத்திலும் ரஸங்கள் சுத்தி அடைவதால் பாதகங்கள் ஏற்படமாட்டா; அவை தொலையவும் கூடும். இதனால் தான், ‘[illegible]’ எனப்பட்டது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் மஹர்ஷி, ராமரிடத்தில் ஸீதையின் பக்தி விசேஷத்தையும், ஸீதையினிடம் ராமர் கொண்டுள்ள அன்பையும் ஒவ்வொரு காண்டத்திலும் எடுத்துக் காட்டியிருக்கிறார். ராமருக்கும் ஸீதைக்கும் இருக்கும் ப்ரியம், அவர்கள் இருவருக்கும் ஸம்ச்லேஷ தசையில் நடக்கும் ஸம்பாஷணையிலும், அவர்கள் விச்லேஷ தசையில் புலம்பும்போதும் நன்கு புலப்படும். இவர்களுடைய ஸம்பாஷணைகளை அயோத்யா ஆரண்ய காண்டங்களிற் பரக்கக் காணலாம். இதையே பவபூதி எனும் மஹாகவி, ‘[illegible]” என்று வர்ணித்திருக்கிறார். பிறகு, (ஆரண்ய காண்டத்தில்) ஸீதையைக் காணாமல் ராமர் கதறுவதை வால்மீகி, “[illegible]” என்கிறார். வஸந்தருதுவைக் கண்டதும் ஸீதா விரஹத்தால் ஸ்ரீராமர் சொல்வதை ஸங்க்ரஹித்துச் சம்பு ராமாயணக்காரரும், “[illegible]” [தேஹ ஸௌக்யமில்லாத காலத்தில் ஔஷதியைப் போலவும், விளையாடும் பொழுது ஸமவயஸ்ஸான யுவதியைப் போலவும், த்ரேதாக்நி கார்யமையத்தில் பத்நியைப் போலவும், யுத்த காலத்தில் க்ஷத்ரிய குல ஸ்த்ரீயைப் போலவும், தேவ பித்ரு ப்ராஹ்மண பூஜா காலத்தில் கிஹ்ஸையைப் போலவும், மனம் நிம்மதியில்லாமலிருக்கும் பொழுது பந்துவைப் போலவும் உள்ள ஸீதையைக் காணவில்லையே!] என்று புலம்புவதாக எழுதியிருக்கிறார். பின்னர் (ஆரண்ய காண்டத்தில்) மஹர்ஷிகளின் பொருட்டு ராக்ஷஸர்களை வதம் பண்ணுவதாக ப்ரதிஜ்ஞை செய்பண்ணின பிறகு நடக்கும் ஸீதாராம ஸம்வாதத்தில்,

"அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் | ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: ||" [ஸீதே நான் என் உயிரை விட்டாலும் விடுவேன், லக்ஷ்மணனையும் உன்னையும் விட்டாலும் விடுவேன்; நான் பண்ணின ப்ரதிஜ்ஞையை விடமாட்டேன்; மேலும் ப்ராஹ்மணர்களிடத்தில் வாக்தத்தம் செய்துவிட்டுத் தவற மாட்டேன்] என்று சொல்லுகிறார். வால்மீகி ராமாயணத்தில் இது முக்யமான ச்லோகங்களில் ஒன்று. இந்த ச்லோகம் ஸ்ரீராமாவதார மஹிமையை நன்றாக எடுத்துக் காட்டுவதுடன், அவருடைய அபயப்ரதான குணத்தையும் ஸூசகம் பண்ணுகிறது; அன்றியும் க்ஷத்ரியர்களுக்கு ப்ராஹ்மணர்களிடத்தில் உள்ள கௌரவத்தையும், ப்ரதிஜ்ஞா பங்கம் கூடாதென்னும் உத்தமமான தர்மத்துக்கு எதிரில் ப்ராத்ரு வாத்ஸல்யம் பத்நீ வாத்ஸல்யம் இவை நிற்கமாட்டா வென்பதையும் காட்டுகிறது. ஆகையால் இந்த ச்லோகத்தைக் கொண்டே ஸ்ரீராமருடைய குண விசேஷங்களைத் தீர்மானித்து விடலாம். இதைக் கொண்டுதான் பவபூதி "ஸ்நேஹம் தயாம் ச ஸௌக்யம் ச யதி வா ஜாநகீமபி" என்று சொல்லியிருக்கிறார். இந்த ச்லோகத்திலிருந்து ஸீதா ராமர்களின் தாம்பத்ய விசேஷம் நன்கு விளங்கும்.

உலகத்தில் ப்ரியமும் ஆதரவும் தர்மத்துக்கு விருத்த மில்லாமல் இருக்கவேண்டும். தர்மத்துக்கு ப்ரதிகூலம் ஏற்பட்டால் மேற்கூறிய குணங்கள் தாமே மறைந்து விடும். "தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி" என்கிற கீதா வாக்யத்தின்படி, தர்மத்துக்கு ப்ரதிகூலமில்லாமல் காமத்தில் ப்ரவேசமே யொழிய, தர்மத்தை மீறிக் காமத்துக்கு இடமில்லை. ஆகையால்தான் ராமர் 'ஸீதே! உன்னைக் கை விட்டாலும் விடுவேன்; தர்ம சாஸ்த்ரத்தை மீறி ஒரு கார்யத்தையும் செய்யமாட்டேன்' என்றார். இங்கு, ராமர் தமது பத்நியான ஸீதையைக் காட்டிலும் தர்மசாஸ்த்ரத்திற்கு ப்ராதாந்யம் கொடுத்தது அறியத்தக்காது. இவ்விஷயம், ஸீதையை வநத்துக்கு அனுப்பும் பொழுதும், அவளுடைய அக்நிப்ரவேச ஸமயத்திலும் ஸுவ்யக்தம்.

ராவண ஸம்ஹாராநந்தரம் விபீஷண பட்டாபிஷேகம் முடிந்ததும், ஸீதையினிடம் ராமர் தம்முடைய ஜயத்தைத் தெரிவிக்குமாறு சொல்லியனுப்பும் ப்ரகரணத்தில், ஸீதாதேவி ஸ்ரீராமரைக்

காண வேண்டுமென்று அபிப்ராயப்பட்டதை ஹநுமார் தெரிவித்த பொழுது, "அகமத்ஸ ஸஹஸா ஸாஸ்ராநதீக்ஷ்ண பாஷ்பபரிப்லுத: | தீர்க்கமுஷ்ணம் விநிச்வஸ்ய ஜகதீமவலோகயந் ||" என்று ஸ்ரீராமர் யோசனையில் ஆழ்ந்து கண்ணீர் பெருக்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஸீதையை அழைத்துவரச் சொன்னதாகவும், விபீஷணன் அவ்வாறே அவளை அழைத்துவந்து ஸமீபத்திலிருப்பதாய்த் தெரிவித்தபொழுது, "தாமாகதாமுபச்ருத்ய ரக்ஷோக்ருஹசிரோஷிதாம் | ஹர்ஷோ தைந்யம் ச ரோஷச்ச த்ரயம் ராகவமாவிசத் ||" என்று வெகு நாட்களாய்ப் பாராமலிருந்தவள் ஸமீபத்திலிருக்கிறாளென்கிற ஸந்தோஷமும், அநேக மாஸ காலமாக ராவண க்ருஹத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள் என்கிறதால் தைந்யமும், நிரபராதியான ஸ்த்ரீயை அபஹரித்துப்போய்த் தன் க்ருஹத்தில் வைத்திருந்து மறுபடியும் அங்கீகரிக்க அநர்ஹையாய்ச் செய்துவிட்டானே யென்று ராவணன் விஷயத்தில் கோபமும் உடனே ஸ்ரீ ராமரை அடைந்தன என்று சொல்லுகிறார் மஹர்ஷி. தர்மாசரணை முக்யமா யௌவராஜ்ய பட்டாபிஷேகம் முக்யமா என்று வந்த பொழுதும் ஸ்ரீ ராம பிரான் விஷயத்தில் தர்மந்தான் தலை நின்றது. "தேநேதம் ஸவயஸ்ஸ்ரோதா ஸ்வஹஸ்தேந உபஜீவதி" என்கிற தம் உயிர்க் குயிரான ஸீதை அவச்யமா தர்மாசரணை அவச்யமா என்று வந்த பொழுது அப்போதும் தர்மந்தான் முன்னின்றது. ராஜ்யத்தைப் பற்றி வரும் ஸமயத்தில் ஸ்ரீராமர் "நாஹமர்த்தபரோ தேவி" [நான் பொருளாசை கொண்டவனல்லேன்] என்றும், "வித்தி மாம் ருஷிபிஸ்துல்யம்" [நான் ருஷிகளுக்கு ஸமானமானவன்; தர்மபரன்] என்றும் தெரிவித்தார். இந்த ஸமயத்தில் "வாலிச: பத காமாத்மா ராமோ தசரதாத்மஜ:" [அறியாத சிறுவன் ஸ்ரீராமன்—காமாத்மா—ஸீதையினிடம் உள்ள ப்ரேமையால் தர்மத்தை மீறி நடந்தான்] என்று உலகோர் சொல்வார்களென்றும், "அநந்யஹ்ருதயாம் பக்தாம் மச்சித்தபரிவர்த்திநீம் | அஹமப்யவகச்சாமி" என்று ஸீதை சுத்தமானவளென்று தெரிந்தும், "ப்ரத்யயார்த்தம் து லோகாநாம்" என்றும், "லோகஸம்ஹர்ஷணாவாசி ஸம்சயஸ்ய க்ருதே ஹஸி" என்றும் காணுதிருக்கும்போதெல்லாம் நினைத்துக் கதறிக்கொண்டிருந்த ஸீதையைப் பஹு ப்ரயாஸப்பட்டு ராவண ஸம்ஹாரம் செய்து, நேரில் பார்த்தபொழுது அவளை அங்கீகரிக்கவாவது ப்ரியமாகப் பேசவாவது அல்லது பார்க்கவாவது

செய்யாமல், உலகத்திற்குத் தர்ம மார்க்கத்தை அநுஷ்டித்துக் காட்டத் துணிந்தார். ஸீதையைப் பார்க்கும்பொழுது ஆஜ்யாஹூதி செய்யப்பட்ட அக்நியைப்போல், 'துஷ்டாத்மா ராவணன் செய்த வேலையல்லவா இது?' என்று ராமருக்குக் கோபம் வ்ருத்தியடைந்தது. இவ்விடத்தில் ‘‘ஸம்ப்ருதஸ்நேஹஸம்பூர்ணா ஹ்ருதயஃ கோபஸம்யுதஃ । ஆஜ்யாஹூத்யாவஸிக்தஸ்ய பாவகஸ்யேவ தீப்ததஃ ॥ '' என்கிறார் மஹர்ஷி. ஸீதையினிடம் தோஷமென்ன? பரக்ருஹவாஸம். ஆனால் தமக்கு அவள் சுத்தை என்று தெரிந்திருந்த போதிலும், தமது மநஸ் ஸாக்ஷி மாத்ரம் போதாதா? போதாது. அன்று ராமர் இப்படிச் செய்திருந்தால், 'யத்யதாசரதி ச்ரேஷ்டஃ'' என்கிற ந்யாயப்படி எல்லாரும் செய்துவிடுவார்கள். அரசன் தர்ம மர்யாதையைக் காப்பாற்றவேண்டியவன். மேலும், ‘‘ராமோ தர்மப்ருதாம் ச்ரேஷ்டஃ'' [ராமன் தர்மாத்மாக்களுள் ச்ரேஷ்டன்.] அரசனே தர்மத்துக்கு அடங்காதபக்ஷத்தில் ‘‘யதா ராஜா ததா ப்ரஜாஃ'' என்ற ந்யாயப்படி ப்ரஜைகள் தர்மாநுஷ்டாநம் தவறிவிடுவார்கள். அன்றியும், ‘‘தேஜஸ்வீ நாபமாநக்ஷமஃ'' ‘‘கஃ ஸஹேதாநுஷி க்ஷமோஜாதஃ'' என்று தேஜஸ்ஸை விரும்புகிறவன் இவ்விதமான கார்யங்களைச் செய்யக்கூடாதென்று தெரிவிக்கும் பொருட்டு, ஸீதை லக்ஷ்மணனைப் பார்த்து அக்நியைத் தயார் செய்யச் சொன்னபோதும் ஸ்ரீராமர் வேண்டாமென்று தடுக்கவில்லை. ஹநுமாருக்கு வாலில் நெருப்பு வைக்கப்பட்டபோது, அவரை அக்நி ஹிம்ஸிக்கவில்லையென்று ராமருக்குத் தெரிந்திருக்கலாம். ஆகையால் ப்ராயச்சித்தமில்லாமல் பத்நியை க்ரஹிப்பது சரியல்லவென்று நினைத்து, அவர் சும்மா இருந்திருக்கக்கூடும். எனவே ஸீதா ராமர்கள், தர்மாசரணையையே முக்யமாகக் கொண்டவர்களாதலால், அவர்களுடைய தாம்பத்யம் மிகவும் அருமையானது. இதுபற்றியே விவாஹ காலங்களில் ஆசீர்வாத ஸமயத்தில் ‘‘ஜாநகீ ரகுநாயகாவிவ'' என்று சொல்லப்படுகிறது. ஆகவே ராஜ்ய நஷ்டத்தையும் பார்யா நஷ்டத்தையும் கருதாமல் அர்த்தகாமங்களை அடக்கி, தர்மத்திலேயே நின்ற ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியின் பெருமை யாரால் சொல்ல முடியும்?

ஏ. நடராஜ அய்யர் B. A.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீஃ

ஸ்ரியை நமஃ

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்

[ஜீவனுடைய ஸ்வரூபம்]

சென்ற ஸஞ்சிகையில் பகவானுடைய ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்பதை விசாரித்தோம். பகவான் கேவலம் ஜ்ஞாநமே [முழு உணர்வு]; அப்படி அவன் முழு உணர்வாக இருக்கையிலும், அவன் ஸகலத்தையும் ப்ரத்யக்ஷமாக ஒரேகாலத்தில் அறிகிறானென்றும், ஸகல பதார்த்தங்களையும் தனது அதிகாரத்துக்கு உட்பட்டவைகளாக வைத்துக்கொண்டு அவைகளை எப்பொழுதும் அவன் நியமநம் செய்துகொண்டு வருகிறானென்றும் ச்ருதிகள் சொல்லுகிறபடியால், அவன் அறிவுக்கு ஆச்ரயமாகவும் (இருப்பிடமாக) இருக்கிறான்; அவன் எவ்வித ரூபமும் ஆகாரமும் அற்றவனாக இருக்கையிலும், தன்னை ஆச்ரயிக்கும் பக்தர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு ஒரு ஸ்தல விசேஷத்தில் தனது குணங்களைப் போலத் தனக்கு விசேஷணமாக ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு அநேக திவ்யாயுதங்களுடனும் திவ்ய பூஷணங்களுடனும் லக்ஷ்மீ விசிஷ்டனாய் அநேக நித்ய முக்த பரிவாரங்களால் கைங்கர்யம் செய்யப்பெற்றவனாய்க் கேவலம் தனது இச்சையால் ஆவிர்ப்பவித்து நிற்கிறான்; அப்படி ஆவிர்ப்பவித்து நிற்கும் திவ்ய மூர்த்தி அவனுடைய நித்யேச்சையால் ஏற்பட்டு, அது காரணமாக நித்யமாயும் அளவற்ற ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடியதாயும் இருக்கிறபடியால், அதுவே பரம ப்ராப்யமாக எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுகின்றது. ச்ருதியின் அர்த்தத்தைச் சரியானபடி அறிந்த மஹான்கள் பகவத் ஸ்வரூபத்தை இவ்விதம் விளக்கியிருக்கிறார்களென்பதை அவ்விடத்தில் நாம் விவரித்தோம். இனி: ஜீவனுடைய ஸ்வரூபத்தைப் பற்றி நமது சாஸ்த்ரம் என்ன சொல்லுகின்றது என்பதைச் சற்று விசாரிப்போம்.

முதலில், ஜீவன் என்னும் வஸ்து ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்பதை நாம் கவனித்தல் வேண்டும். அது வேறு

பட்டதன்று என்று வேறு சில வேதாந்திகள் வாதிக்கிறார்கள். அவர்களும் நம்மைப் போலவே ச்ருதியைக் கைப்பற்றியே தம் மதத்தை நிலை நிறுத்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய வாதத்தில் நாம் இப்பொழுது ப்ரவ்ருத்திப்பதான ஆலோசனை இல்லை. ப்ரஹ்மமும் ஜீவனும் ஸ்வரூபத்தில வெவ்வேறு என்பதே ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஆசார்யர்களுடைய ஸித்தாந்தம் என்பதை மாத்ரம் நாம் இவ்விடத்தில் குறிக்கின்றோம். அவர்களுடைய ஸித்தாந்த ப்ரகாரம் ஜீவன்கள் அநந்தங்கள்; அந்த ஜீவன்கள் பகவானைப் போல ஜ்ஞாநத்தையே ஸ்வரூபமாக உடையவர்கள்; பகவானைப்போலவே தங்களுக்குத் தர்மமாக மற்றொரு ஜ்ஞாநத்தையும் உடைத்தாயிருக்கிறார்கள். ஆனால், பகவானுடைய ஸ்வரூப ஜ்ஞாநம் விபு [எல்லா விடங்களிலும் வ்யாபித்து நிற்கின்றது]; ஜீவனுடைய ஸ்வரூப ஜ்ஞாநம் அணு. பகவானுக்குத் தர்மமாக இருக்கும் ஜ்ஞாநம் அவனுடைய ஸ்வரூப ஜ்ஞாநம் போல விபுவே; ஜீவனுடைய தர்ம ஜ்ஞாநமும் விபுவென்றே நமது சாஸ்த்ரம் சொல்லுகின்றது. இந்த ஸ்வரூப ஜ்ஞாநம் தர்ம ஜ்ஞாநம் இவை இரண்டும் ஜ்ஞாநமானதால் ஸ்வயம் ப்ரகாசங்கள். ஸ்வரூப ஜ்ஞாந விஷயத்தில் அதன் ஸ்வயம் ப்ரகாசத் தன்மைக்கு ஒரு பொழுதும் ஒரு வித குறைவும் இல்லை. தர்ம ஜ்ஞாந விஷயத்தில் பகவானுடையது எப்பொழுதும் பரிபூர்ணமே; ஜீவனுடைய தர்ம ஜ்ஞாநமோ, அந்தஜீவன்கள் கர்மவசமாக இருக்கும்பொழுது பரிபூர்ணமன்று; அந்தந்த ஜீவனுடைய கர்மத்துக்குத் தகுந்தபடி அது ஏற்றக் குறைவுகளை அடைந்து நிற்கும்; கர்ம பந்தம் நீங்கின பிறகு அந்த ஜ்ஞாநம், பகவானுடையதைப் போலவே, எவ்வித குறைவுமிராமல் பரிபூர்ணமாகவே ப்ரகாசிக்கும். பகவான் ஜீவன் இருவரும் ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாக இருக்கிறபடியால், இருவர்களும் சேதநர்களாவார்கள். ஆகையால், சேதநனாக இருப்பதுடன் விபுவான ஜ்ஞாந ஸ்வரூபத்தை உடையவன் பகவானென்றும், சேதநனாக இருந்து அணுவான ஜ்ஞாந ஸ்வரூபத்தை உடையவன் ஜீவனென்றும் இருவர்களுக்கும் லக்ஷணம் சொல்லக் கூடும். இவ்விடத்தில் விபுவென்றும் அணுவென்றும் சொல்வது ஸ்வரூப ஜ்ஞாநத்தைப் பற்றியதே யாகும்.

இந்த ஜீவன் பகவானுக்குச் சேஷனென்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். அதாவது: ஜீவன்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளால் ஏற்படும் ப்ரயோஜநம் எல்லாவற்றையும் பகவானே அடைகின்றான்; எனவே: ஜீவன் பகவானுக்காகவே இருக்கிறவன் என்று சொன்னதாயிற்று. இப்படி இருவர்களும் சேஷ சேஷி

ஸம்பந்தத்தைப் பெற்றிருப்பது ஸர்வேச்வரனாயிருக்கும் பகவானுடைய ஸங்கல்பத்தாலேயே. இந்த விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு நாம் பகவானுக்கும் ஜீவனுக்கும் பின் வருமாறு வேறு லக்ஷணங்களும் சொல்லக்கூடும். சேதநனாக இருப்பதுடன் ஸகலத்திற்கும் சேஷியாகவும் இருப்பவன் பகவான்; சேதநனாக இருப்பதுடன் பகவானுக்குச் சேஷனாகவே இருப்பவன் ஜீவன். அதாவது: ஜீவன் எப்பொழுதும் பகவானுக்குப் பாதந்த்ரன், பகவானுக்காகவே இருக்கிறவன் பகவான் ஸ்வதந்த்ரன் என்று சொன்னதாயிற்று. இதில் ஸம்பந்தப்பட்டதாக நாம் மற்றுமொரு விஷயத்தை அறிதல் வேண்டும். பகவான் தனது ஸ்வாதந்த்ர்யத்தையும் பக்தர்களிடம் தனக்கு இயற்கையாயுள்ள ப்ரீதியையும் காரணமாய்க்கொண்டு, தான் எல்லாருக்கும் பதியாகவும் மற்றைச் சேதநர்கள் தனக்குச் சேஷர்களாகவும் இருப்பதை மாற்றி, பக்தர்களைத் தனது சேஷிகளாகவும் தன்னை அவர்களுக்குச் சேஷனாகவும் செய்துகொள்ளக் கூடும்.

“ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்”

[என்னிடத்தில் அத்யர்த்தமாகப் பக்தி செய்பவன் எனக்கு ஆத்மா] என்று அவனே சொல்லி யிருக்கிறான். இவ்விடத்தில் ‘ஆத்மா’ என்று சொன்னதன் கருத்து, ‘பக்தர்கள் எனக்குச் சேஷி; நான் அவர்களுக்குச் சேஷன்’ என்பதே. இதை அவலம்பித்தே நாம் பகவானைப் ‘பக்த பராதீநன்’ என்று சொல்லுகிறோம். அர்ஜுநனுக்கு ஸாரத்யம் செய்ததும், கோப ஸ்த்ரீகள் இட்ட வேலைகளைச் செய்ததும், அவன் அம்மாதிரி பக்தர்கள் விஷயத்தில் பராதீநத்தன்மையை ஏறிட்டுக்கொள்ளுகிறான் என்பதைக் காட்டுகின்றன. ஆனால் இவ்விதம் ஏறிட்டுக் கொள்ளப்படும் சேஷத் தன்மை ஒரு காரணத்தைப் பற்றி ஏற்படுகிறபடியால், இது ஸ்வபாவத்தால் ஏற்பட்டிருப்பது என்று சொல்லக்கூடாது. இருந்தபோதிலும் இது கீழ்க் குறிக்கப்பட்டுள்ள லக்ஷணங்களுக்கு விரோதிக்கு மாதலால், இதற்கு ஒத்து வரும் பொருட்டு அந்த லக்ஷணங்களைப் பின்வருமாறு ஆசார்யர்கள் பரிஷ்கரித்திருக்கிறார்கள். ‘எவ்வித காரணமுமின்றி ஸ்வபாவத்தாலே எல்லாவற்றுக்கும் சேஷியாக இருப்பவன் பகவான்; எவ்வித காரணமுமின்றி ஸ்வபாவத்தாலேயே சேஷனாக இருக்கும் சேதநன் ஜீவன்.’ ஒரு காரணத்தைக் கொண்டு பகவானுக்கு ஏற்படும் சேஷத் தன்மையும் பக்தர்களுக்கு ஏற்படும் சேஷித் தன்மையும் இந்தப் பரிஷ்காரத்தால் விலக்கப்படுகின்றன. இது ஸம்ஸ்க்ருதத்தில் “நிருபாதிகசேஷீ பகவாந், நிரு

வாயிக ஸெஷோ ஜீவ:'' என்று குறிக்கப்படும்.

இம்மாதிரியே 'பகவான் மற்றை எவனுக்கும் அதீநன் அன்று' என்பதும் நிர்வஹிக்கப்படும். 'சேஷர்களாயிருக்கும் ஜீவன்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளால் உண்டாகும் ப்ரயோஜநத்தைப் பகவானே அடைகின்றான் என்னும் காரணத்தைக் கொண்டன்றோ பகவான் அவர்களுக்குச் சேஷியாகின்றான் என்று சொல்லப்பட்டது ? இப்படி ஜீவன்களுடைய வ்யாபாரங்களால் பகவான் ஒரு அதிசயத்தை அடையும் பக்ஷத்தில் அவனை எவ்விதத்தில் அந்யாதீநன் அன்று என்று சொல்லக்கூடும் ?' என்று ஒரு சங்கை உண்டாகலாம். 'ரத்நம் தனது சிறந்த ப்ரபையால் மேன்மை பெற்றதாக இருக்கின்றது' என்று சொல்லுமிடத்தில், ரத்நத்தின் பெருமை ப்ரபையால் உண்டானதாக இருக்கையிலும் அது எப்படி ரத்நத்திற்குக் குணக்குறைவை உண்டுபண்ணமாட்டாதோ, அப்படியே சேஷபூத வஸ்துக்களாலே பகவானுக்கு அதிசயமுண்டானாலும் அந்த அதிசயம் பகவானுடைய அநந்யாதீநத்வத்தை [மற்றை எவனுக்கும் அதீநனாக இராமல் இருக்கும் தன்மையை] பாதிக்கமாட்டாது. ஆகையால் அந்தச் சங்கைக்கு இடமில்லை.

இவ்வளவு சொன்னதிலிருந்து ஏற்பட்டது என்னவென்றால்—'ஜீவனுடைய ஸ்வரூபம் பகவானுடைய ஸ்வரூபம் போல, சுத்தமான ஜ்ஞாநமே; பகவான் ஸகலத்தையும் ஒரே காலத்தில் ஸ்வயமாகவே எப்பொழுதும் ஸாக்ஷாத்கரிக்கும் யோக்யதையைப் பெற்றிருப்பதுபோல், ஜீவனும் அவ்வித யோக்யதையைப் பெற்றிருக்கிறான். ஆனால் ஜீவன் கர்ம பந்தத்துக்குப் பரவசமாக இருக்கும் காலத்தில் அந்த யோக்யதையை அவன் இழந்து நிற்கிறான். அவன் பகவானுக்கு ஸ்வபாவத்தால் தாஸன்; ஆகையால் அந்தத் தாஸ்யத்திற்கு அநுரூபமான கைங்கர்யமே அவனுக்குப் பரம புருஷார்த்தம் ஆகின்றது என்பதுதான்.

"தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:".

என்பது இதற்குப்ரமாண வாக்யம். மோக்ஷமென்றும் ப்ரஹ்மாநந்தமென்றும் எல்லாராலும் ப்ரார்த்திக்கப்படும் பதவி இந்தக் கைங்கர்யமே என்பது தான் நமது ஸித்தாந்தம். மோக்ஷம் அடைந்த பிறகு, நாம் மனம் போன போக்கெல்லாம் போகலாமென்பதாவது, நமக்கு இவ்விடத்தில் தோன்றுவதுபோல போகங்களில் இச்சை தோன்றினால் அந்த இச்சையை மோக்ஷத்தில் எவ்வித ப்ரதிபந்தகமு

மிராமல் யதேஷ்டம் அநுபவித்து அதனால் அளவற்ற ஆநந்தத்தை அடையலாம் என்பதாவது நமது ஸித்தாந்தமன்று. அம்மாதிரி இச்சை தோன்றினால் அதை எவ்வித விக்நமுமின்றிக்கு நிறைவேற்றிக் கொள்ள நமக்குச் சக்தி ஸம்பவிக்கின்றது என்பது உண்மையேயாயினும், ஸ்வபாவத்தால் பகவத் கிங்கரர்களாக இருக்கும் நமக்கு அவனுடைய கைங்கர்யமே அநுரூபமான புருஷார்த்தமாகத் தோன்றுமே தவிர, மற்றை எதுவும் அப்படிப்பட்ட புருஷார்த்தமாகத் தோன்றமாட்டாது. ஆனால், 'கைங்கர்யம் என்பது துக்கமன்றோ ? அப்படி துக்கமான கைங்கர்யம் எவ்விதத்தில் புருஷார்த்தமாகக் கூடும் ?' என்று ஒரு ஆக்ஷேபம் உண்டாகலாம். 'இந்த உலக வாழ்க்கையில் கைங்கர்யம் துக்கம் என்பது உண்மையே. ஆனால், அது அப்படி துக்கமாக இருப்பது, நாம் ஜந்மாந்தர கர்மத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதைக் காரணமாக உடையது. அந்தக் கர்மம் ஒழிந்தால் கைங்கர்யம் துக்கமாக இருக்கமாட்டாது' என்பதுதான் அந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம். தவிரவும், நாம் செய்யப் போகும் கைங்கர்யம், ஸர்வோத்க்ருஷ்டனாயும் நம்மிடத்தில் அளவற்ற ப்ரீதியை உடையவனாயும் இருக்கும் நமது நிருபாதிக ஸ்வாமியைக் குறித்தது என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆகையால் அந்தக் கைங்கர்யமே நமக்கு மிகவும் போக்யமானது என்பதில் ஆக்ஷேபமில்லை. நம்மை இப்பொழுது வருத்துவதெல்லாம் பாரதந்த்ர்யமென்றும், அந்தப் பாரதந்த்ர்யத்தை ஒழித்து ஸர்வ ஸ்வாதந்த்ர்யத்தை ஸம்பாதித்துக்கொள்வதுதான் மோக்ஷமாக இருத்தல் வேண்டுமென்றும் வாதிக்கிறவர்களின் கோஷ்டியில் நாம் சேரவில்லை. 'நாம் பகவானுக்கு ஸர்வ ப்ரகாரத்தாலும் பரதந்த்ரர்கள்; நம்முடைய அபராதத்தால் அந்தப் பாரதந்த்ர்ய ஸுகத்தை நாம் இப்பொழுது இழந்து நிற்கிறோம். மறுபடியும் அதை நாம் சரிவரப் பெறுவதே மோக்ஷமாகுதல் வேண்டும்' என்பதே நமது ஸித்தாந்தம்.

இதற்குமேல் போவதற்குமுன் 'பகவானும் ஜீவனும் ஜ்ஞாந ஸ்வரூபங்கள் என்னும் வாக்யத்தில் ஜ்ஞாநம் என்பது எதைக் குறிக்கின்றது ? அந்த ஜ்ஞாநம் ஸ்வயம் ப்ரகாசம் என்பதால் நாம் என்ன அறிகின்றோம் ? சேதநர்கள் அசேதநங்கள் என்னும் பதங்களின் பொருள் என்ன ?' இவை முதலிய விஷயங்களைக் கொஞ்சம் நாம் தெளிய அறிதல் வேண்டும். 'எது ஒரு விஷயத்தை ப்ரகாசிப்பிக்கின்றதோ அது ஜ்ஞாநம்' என்று சொல்லப்படும். அதாவது—கண்ணால் பார்க்கப்படும் வஸ்துக்களின் விஷ

யத்தில், எப்படி வெளிச்சமானது அந்த வஸ்துக்களுக்குப் பார்க்கப்படும்படியான யோக்யதையைக் கொடுக்கின்றதோ, அப்படியே நம்மால் அறியப்படும் வஸ்துக்களின் விஷயத்தில் அந்த வஸ்துக்களுக்கு நம்மால் அறியப்பட்டு வ்யவஹரிக்கப்படும்படியான யோக்யதையை ஜ்ஞாநம் என்பது கொடுக்கின்றது என்று சொன்னதாயிற்று. ஆகையால் ஜ்ஞாநம் என்பதற்குப் பின்வருமாறு லக்ஷணம் சொல்லலாம்:— 'ஒரு விஷயம் வ்யவஹரிக்கப்படுவதற்குத் தகுந்த யோக்யதையை எது கொடுக்கின்றதோ அது ஜ்ஞாநம்.' "ஏதேனும் ஒன்றினுடைய வ்யவஹாராநுகுண்யத்தைப் பண்ணுகை ஜ்ஞாநத்வம்' என்று ஸ்ரீ தேசிகன் லக்ஷணம் அநுக்ரஹித்திருக்கிறார். 'நாம் ஒரு வஸ்துவை அறிகிறோம்' என்று சொல்வதற்கு, அந்த வஸ்து நமது இந்த்ரியங்களுள் ஒன்றுடன் ஸம்பந்தம் பெறுவது மாத்ரம் போதாது; நமது ஜ்ஞாநமும் அதை ப்ரகாசிப்பித்தல் வேண்டும். நாம் வேறொரு வஸ்துவை நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது நமது கண்ணுக்கு எதிரில் இருக்கும் பொருளையும் நாம் அறியாமல் இருக்கிறோ மன்றோ? அப்படி அறியாமல் இருப்பது, நமது ஜ்ஞாநம் அந்தப் பொருளை ப்ரகாசிக்கச் செய்யாமல் இருப்பதனாலேயே. இந்த ஜ்ஞாநத்தைத்தான் தர்மபூத ஜ்ஞாந மென்று சொல்லுகிறோம்; இதுதான் ஸம்ஸாரிகளாயுள்ள நமக்குள் சிலருக்கு அதிக ப்ரகாசத்துடனும் சிலருக்குக் குறைந்த ப்ரகாசத்துடனும் அவரவர்களுடைய கர்மத்திற்குத் தகுந்தபடி ஏறியும் சுருங்கியும் நிற்கின்றது. ஒருவன் ஒரு விஷயத்தைத் தெளிவாக அறிவதும் மற்றொருவன் அதைத் தெளிவாக அறியாததும் இந்தத் தர்ம பூத ஜ்ஞாநத்தின் ப்ரகாச தாரதம்யத்தால்தான். ஸம்ஸார பந்தத்திலிருந்து மோக்ஷம் கிடைத்தபிறகு இம்மாதிரியான தாரதம்ய மின்றிக்கே அந்த ஜ்ஞாநம் பகவானுக்குப் போலவே நமக்கும் பூர்ணமாக ப்ராகாசிக்கும். ஜீவன் அணுவாக இருக்கையிலும் இந்த ஜ்ஞாநம் விபு வாகையால், இதன் ப்ரசாரத்தைக் கொண்டே நெருங்கின தேசத்திலும் காலத்திலும் இராத வஸ்துக்களையும் நாம் க்ரஹிக்கின்றோம். இவ்விதம் இந்த ஜ்ஞாநம் விஷயங்களை ப்ரகாசிக்கச் செய்வது தன்னால் ஆச்ரயிக்கப்பட்டிருக்கும் ஜீவனுக்கு மாத்ரமே தவிர, தனக்கு இல்லை. அதாவது— தனக்குத் தன்னைத் தோற்றுவிக்கும் சக்தி இல்லை என்று சொன்னதாயிற்று. இந்தக் காரணத்தாலேயே நாம் இந்த ஜ்ஞாநத்தை அசேதநமென்று சொல்லுகின்றோம். எது எது தனக்குத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளச் சக்தியற்றதோ அது எல்லாம்

ஸம் அசேதநம். நமது தர்மபூத ஜ்ஞாநம் வேறு, ஸ்வரூப ஜ்ஞாநம் வேறு, என்று கீழ்ச் சொல்லப்பட்டிருப்பதன் காரணம் இப்பொழுது விளங்கும். நமது ஸ்வரூப ஜ்ஞாநம் நமது தர்ம பூத ஜ்ஞாநம் போலன்றிக்கே, தன்னைத் தான் அறியும் யோக்யதையை உடைத்தாயிருக்கின்றது. ஆகையால் தான் அந்த ஸ்வரூப ஜ்ஞாநத்தைச் சேதந மென்று சொல்லுகின்றோம். இந்த ஸ்வரூப ஜ்ஞாநம் இப்படி தன்னைத் தனக்கே தோற்றுவிக்கும் யோக்யதையுடன் கூடியிருக்கையிலும், தர்ம பூத ஜ்ஞாநம் போல வெளிப்பட்ட விஷயங்களை ப்ரகாசிப்பிப்பதற்கு அது யோக்யதை யற்றது என்பதே நமது கொள்கை. 'நான்' என்று தோற்றுவிப்பது ஸ்வரூப ஜ்ஞாநத்தின் செயல்; 'நான் இந்த விஷயத்தை அறிகின்றேன்' என்று தோற்றுவிப்பது தர்ம பூத ஜ்ஞாநத்தின் செயல். ஸ்வரூப ஜ்ஞாநத்திற்கு ஒருபொழுதும் ஒருவர் விஷயத்திலும் எவ்வித குறைவும் இல்லை. இந்த ஜ்ஞாநம் இரண்டுக்கும் ப்ரகாசிப்பிக்கிற யோக்யதை இருக்கிறபடியால் இரண்டும் ஜ்ஞாநம் என்று வ்யவஹரிக்கப்படுகின்றன. ஸ்வரூப ஜ்ஞாநமே ஆத்மா. இந்த ஜ்ஞாநங்கள் இரண்டையும் ஏன் நாம் ஸ்வயம் ப்ரகாசங்களென்று சொல்லுகிறோ மென்றால், மற்றை வஸ்துக்கள் தமது ப்ரகாசத்திற்கு இந்த ஜ்ஞாநத்தைச் சார்ந்து நிற்பன போல, இவை தமது ப்ரகாசத்திற்கு மற்றை ஒன்றையும் சார்ந்து நிற்க வில்லை என்னும் காரணத்தாலேயே. இப்படி இவை இரண்டும், ஒன்று சேதநமாயும் மற்றொன்று அசேதநமாயும் இருக்கையிலும், ஸ்வயம் ப்ரகாசமாக இருக்கிறபடியால், இவை இரண்டும் ஜடங்களல்லவென்று சொல்லப்படுகின்றன. ஸ்வயம் ப்ரகாச மிராத மற்றைப் பொருள்களெல்லாம் ஜடங்களே. இன்னும இவைகளைப் பற்றி விசாரிக்க வேண்டிய விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:

க்ரந்த விமர்சம்

(1)

கும்பகோணம் ஸ்ரீநிவாஸ விலாஸ புஸ்தகசாலை ஸ்ரீ. உப. ஸி. ர. ஸ்ரீநிவாஸ பாட்டாசார்ய ஸ்வாமியிடமிருந்து கீழ்க் குறிக்கப்பட்டுள்ள நாலு க்ரந்தங்கள் நாம் வரப் பெற்றோம். அவை:—

(1) ஸ்ரீ தத்வதர்சம்—ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி செய்தருளியது; விலை அணு 12.

(2) விபஸ்சித் பரிதோஷிணீ— ஷை ஷை

(3) ஸ்ரீமத் வேதாந்த தேசிக வைபவ ப்ரகாச கீர்த்தனை.—மத்யார்ஜுநம் ப்ரஹ்மஸ்ரீ அநந்த பாரதி இயற்றியது. விலை அணு 8.

(4) அபாமார்ஜந ஸ்தோத்ரம்.—விலை அணு 1

இவைகளுள் முதல் இரண்டும், காஞ்சீபுரம் ஸ்ரீ. உப. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி செய்தருளியிருக்கும் 'ப்ரணவாதிகார தத்வம்' என்னும் க்ரந்தத்தின் கண்டங்கள். மூன்றாவது க்ரந்தம், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய வைபவங்களை விஷயமாக உடையவைகளாகவும், இராக தாளங்களுக்கு இசைந்திருக்கும்படி செய்யப்பட்டவைகளாகவுமான க்ருதிகளடங்கிய க்ரந்தம். நான்காவது, ஸ்ரீ விஷ்ணு தர்மத்தில் படிக்கப்பட்டுள்ள ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரம். இந்தப் புஸ்தகங்களை அபேக்ஷிப்பவர்கள் "ஸி. ர. ஸ்ரீநிவாஸ பாட்டாசார்யர், ஸ்ரீநிவாஸ விலாஸ புஸ்தகசாலை, 16- பாட்டாசார்ய தெரு, கும்பகோணம்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(2)

ஸத் சூத்ர தர்மம்:—இது புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் க்ரந்தம். இதில் நான்காவது வர்ணத்தார்களால் தினந் தோறும் அநுஷ்டிக்கப்பட வேண்டியவையாக மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டுள்ள தர்மங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு, எல்லாருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு 2. தபால் சார்ஜு வேறு. "திருச்சி ஜில்லா, எலமனூர் போஸ்ட், திருப்பள்ளத்துறை, ஸ்ரீ. உப வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்" என்னும் விலாஸத்திற்கு எழுதி இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

கடிதங்கள்

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஸம்பாதகருக்கு:—

ப்ரஹ்ம ஸ்ரீ சேங்காலிபுரம் அநந்த ராம தீக்ஷிதர், இவ்விடம் சென்ற கார்த்திகை மீ நாலைந்து நாட்கள் உபந்யாஸம் செய்தார். இராக்காலத்தில் இராமயணத்தில் சில முக்யமான பாகங்களும், பகற் பொழுதில் குசேலோபாக்யாநம் த்ருவ சரித்ரம் ப்ரஹ்லாத சரித்ரம் அக்ரூரர் சரிதம் ஆகிய இவைகளும் உபந்யாஸம் செய்யப்பட்டன. ஒவ்வொரு நாள் உபந்யாஸமும் கேட்பவர் மனத்தைப் பரவசமாக்கிவிட்டது. கதையை வ்யாஜமாக வைத்துக் கொண்டு, அவர்கள் அதிலுள்ள பக்தி ரஸத்தைத் தந்மயமா யிருந்துகொண்டு சொன்ன அழகும், அந்த வாக் சாதுர்யமும் பண்டித பாமரர்கள் யாவருக்கும் த்ருப்தியை விளைத்தன. அன்றியும், அங்கு வந்துள்ளோர் அனைவரும், வைதிக மார்க்கத்தைத் தாமும் அநுஷ்டித்து வரவேண்டுமென்கிற எண்ணமும் ச்ரத்தையும் கொண்டனர். தீக்ஷிதரவர்களைப் போன்ற மஹான்கள் இம்மாதிரி அடிக்கடி ஆங்காங்கு சென்று நமது வைதிக மார்க்கத்தை எடுத்துச் சொல்வார்களாகில், வைதிக மார்க்கத்துக்கு ஒரு குறைவும் உண்டாகா தென்பது திண்ணம். கடைசி நாள் ராமாயண பட்டாபிஷேகம் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. யாவரும் தீக்ஷிதரவர்களைக் கௌரவித்து அனுப்பினர். அச்சபையில் ஒரு யோக்யதையுமற்ற அடியேனுக்கும், தீக்ஷிதரவர்களுடைய அபாரமான சக்தியையும் ஜ்ஞாந வைராக்ய அநுஷ்டாநாதிகளையும் குறித்துச் சில ச்லோகங்கள் சொல்ல அவகாசம் நேர்ந்தது. அவற்றைக் கேட்ட எல்லோரும் 'தீக்ஷிதரவர்களுக்குத் தகும் தகும்' என்று மெச்சினர். கரகோஷத்துடன் ஸபை கலைந்தது.

சேலம்,
14—12—33.

கடாம்பி ராமாநுஜாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோ(அ)ஜ்ஞ: ப்ரவிஶ்ய சிரகாலம் ப்ரஸாத்ய

ஸஞ்ஜீவயத்யவிரதம் ஸுக்ருதீயா: ஸ்வயா ந: ।

அந்த்யாம்ஶ்ச ஸஹ்ருதய ஶ்ரவணாத்மதீநு

ப்ராணாலயோ ஜயதி ஸாமயிகாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

ப்ரஜா வ்ருத்தியைத் தடுத்தல்

ஸ்வல்ப காலமாகச் சில லௌகிக ப்ரபுக்கள் நமது தேசத்தில் ப்ரஜா வ்ருத்தி மிகவும் அதிகரித்து வருகின்றதென்றும், அதைத் தடுப்பதற்குத் தகுந்த மார்க்கத்தை நாம் சீக்ரத்திலேயே தேடவேண்டுமென்றும், அப்படித் தேடாவிட்டால் தேசத்திற்கே பெரிய கஷ்டங்கள் நேர்ந்து விடுமென்றும் ப்ரமம் கொண்டவர்களாய், ப்ரஜைகளின் வ்ருத்தியைத் தடுப்பதன் ஆவச்யகதையைப் பற்றிப் பத்ரிகைகள் வாயிலாகவும் ஸங்கங்கள் மூலமாகவும் மஹா ஜநங்களை முன்னிட்டு உபந்யாஸம் செய்து வருவதை நமது ஸுஹ்ருத்துக்கள் கவனித்திருக்கலாம். எல்லாரும் தம் தம் ச்க்திக்குத் தகுந்தபடி இந்த்ரியங்களை அடக்கி, காமங்களுடைய உபபோகத்தை மிதப்படுத்திக்கொண்டு, அதன் வழியாக ப்ரஜைகளின் அதிகமான உத்பத்தியைத் தடுக்க முயல வேண்டுமென்று அவர்கள் உபதேசிக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சாஸ்த்ர விருத்தங்களாயும் அளவற்ற காம போகங்களுக்கு இடம் கொடுக்கக்கூடியவையுமான சில ஜுகுப்ஸாவஹங்களான மார்க்கங்களைக் காண்பித்து, அவைகளை எல்லாரும் தெரிந்துகொண்டு அநுஷ்டிக்க வேண்டுமென்றும், அப்படி அநுஷ்டித்து ப்ரஜா வ்ருத்தியைத் தடுக்க வேண்டுமென்றும் அவர்கள் உபதேசித்து வருகிறார்கள். சாஸ்த்ரங்களின் பெருமை குலைந்து நிற்கும் இந்நாளில், எல்லாரும் தம் தம் புத்திக்குத் தோன்றியபடி பண்டைக் காலத்திய அநுஷ்டா

நங்களை மாற்ற முயல்வதும், அந்த மாற்றத்துக்குத் தகுந்தபடி தாம் நடப்பது மாத்ர மின்றிக்கே தாம் நடக்கிறபடி பிறரையும் நடக்கும் படி செய்விப்பதும் ஸஹஜமாகி விட்டன. அப்படி அவர்கள் மனம் போனபடி நடப்பதிலும் பிறரையும் அவ்விதம் நடப்பிப்பதிலும் நமக்கு எவ்வித ஆக்ஷேபமுமில்லை; ஆனால் அவர்கள், 'எங்களுடைய புத்திக்கு அவ்விதம் நடப்பது தான் சரியென்று தோன்றுகின்றது; ஆகவே நாங்கள் அம்மாதிரி நடக்கிறோம்; ஆகையால் தான் பிறரையும் அம்மாதிரி நடக்கும்படி தூண்டுகின்றோம்' என்று சொல்லாமல், 'நாங்கள் செய்யும் கார்யம் சாஸ்த்ரதிற்கு ஒத்ததே' என்று சாஸ்த்ர ஆதாரத்தை அவர்கள் கைப்பற்ற முயல்வதை நாம் த்ருடமாக ஆக்ஷேபிக்கின்றோம். அவர்களுக்குச் சாஸ்த்ரத்தில் நம்பிக்கை இராமலிருக்கையில், அவர்கள் சாஸ்த்ரத்தை எடுத்துக் கூறுவது ருஜுவான கார்யமாகுமோ? விதவா விவாஹம் ப்ரௌடா விவாஹம் வேற்று ஜாதியில் விவாஹம் இம்மாதிரி விவாஹங்களைச் செய்பவர்களும், மனம் போனபடி ஆஹாரம் முதலியவற்றைச் செய்பவர்களும், விக்ரஹ பூஜையில் நம்பிக்கையின்றிக்கே ஆலய ப்ரவேசத்தை அபேக்ஷிப்பவர்களும், ப்ரூண ஹத்தி செய்து அதனால் ஜகத்தின் க்ஷேமத்தைத் தேடுபவர்களும் என் வீணில் சாஸ்த்ரத்தை வருத்துகிறார்கள் என்பது நமக்குப் புலப்படவில்லை.

சென்ற மாஸத்தில், பெரிய லௌகிக பதவியில் இருக்கும் ஒரு ப்ரபு, ப்ரஜா வ்ருத்தியைத் தடுப்பதைப் பற்றி உபந்யஸித்து வருகையில், நமது வேதத்தில் அதற்கு ப்ரமாணம் இருக்கின்றது என்று சொன்னாராம். அவர் எந்த வேதத்தைப் பார்த்தாரோ? வேத வாக்யங்களின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்கு வேண்டியதான யோக்யதையை எவ்விடத்தில் ஸம்பாதித்துக் கொண்டாரோ? படிக்காத மூடர்கள் தமது யோக்யதையை அறியாமல் பெரிய கார்யங்களில் ப்ரவ்ருத்திப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். சிறந்த வித்யைகளை அப்யஸித்து மஹாஜநங்களுக்கு ஹிதாஹிதங்களை எடுத்து உரைக்கும் அந்தஸ்தைப் பெற்றிருப்பவர்கள் இம்மாதிரியான ஸாஹஸத்தைச் செய்யத் துணிவதை நாம் இது வரை பார்த்ததில்லை; கேட்டதுமில்லை. காமம் க்ரோதம் முதலியவைகளின் சமனத்தையும், இந்த்ரியங்களின் நிக்ரஹத்தையும், நாம் அடையவேண்டிய ச்ரேயஸ்ஸுக்கு ஒரே மார்க்கமென்று ச்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் இதிஹாஸ புராணங்களாலும் இடித் திடித்துக் கூறும் நமது சாஸ்த்ரம், இந்த ப்ரபுக்களால் இப்பொழுது உபதேசிக்கப்படும்

உச்ச்ருங்கலமான இந்த்ரிய லாலநத்தை ஆமோதிக்கின்றது என்று சொன்னால் அதை விவேக முள்ளவர்களுள் எவர் நம்புவார்கள்? ஸாமாந்ய ஜநங்களை ஏமாற்றுவதற்காகப் புத்தி பூர்வகமாய்ச் செய்யப் படும் அந்ருஜுவான ப்ரவ்ருத்தி என்றே இதை நாம் க்ரஹிப்போம். இது த்ரவ்ய லாபத்தை உத்தேசித்துச் செய்யப்படும் மோசமாக இராவிட்டாலும், தமது இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற் காகச் செய்யப்படும் மோசமே. இவர்களுடைய அபிஸந்தி ஜநங்க ளுடைய ஹிதத்தைத் தேடுதல் வேண்டும் என்னும் ஸாதுவான அபி ஸந்தியாக இருக்கலாம்; செய்யப்படும் கார்யம் தோஷ துஷ்டமாக இருந்தால், அது நல்ல எண்ணத்தாற் செய்யப்படுகின்றது என்பது அதன் தோஷத்தை மறைக்குமோ?

இந்த விஷயத்தைப் பற்றி அதிகமாக எழுதுவதற்கு நமது மநஸ் லஜ்ஜைப்படுகின்றது. பகவத் ஸ்ருஷ்டியில் சிற்சில கார்யங்கள் ஸப்யங்களென்றும் மற்றும் சில அஸப்யங்களென்றும் பிரித்துப் பேசப்படுகின்றன. ஸபைக்கு அயோக்யங்களான விஷயங்களுட்சில, சிற் சில ஸமயங்களில் விசாரம் செய்வதற்கு ஸ்தாநமாகும்படி ஸம் பவங்கள் ஏற்படலாம். அப்பொழுது அவைகளின் விசாரம் ஸதஸ்ய மாகச் செய்யப்படாமல் ஏகாந்தத்தில் செய்யப்படுவது பண்டைக் காலத்து மர்யாதை. இப்பொழுது ப்ரக்ருதமாயிருக்கும் ப்ரஜா வ்ருத்தியைப்பற்றிய விசாரம் ஸதஸ்ஸுக்கு அர்ஹ மன்று என் பதே நமது அபிப்ராயம். ஆகையால் அதைப் பற்றி விசாரிக்க வேண் டியது அவச்யமாக இருந்தால் அதை இப்பொழுது இவர்கள் விசா ரிப்பது போலப் பஹிரங்கமாக விசாரிப்பது யுக்தமாகமாட்டாது. நமது சென்னை மா நகரில் ஸமீபகாலத்தில் ஸ்த்ரீ புமான்க ளெல்லா ரும் ஒரு பெரிய ஸங்கமாகச் சேர்ந்து இந்த ப்ரஜா வ்ருத்தியின் மர் மங்களை யெல்லாம் பூர்ணமாக விசாரித்து, அது விஷயமாகச் சிற்சில நிர்ணயங்களைச் செய்ததாகப் பத்ரிகைகளில் அறிக்கை ஒன்று வெளி வந்திருந்தது. இவ்விதம் ஸ்த்ரீகளும் புமாந்களும் நிஸ்ஸங்கோசமாக இம்மாதிரியான விஷயங்களைப் பற்றி ஸதஸ்ஸில் பேசும்படியாகவும் நிர்ணயங்களைச் செய்யும்படியாகவும் காலம் நேர்ந்து விட்டதே என்று நாம் மிகவும் வருந்துகின்றோம். ஸ்வாமி கொடுத்திருக்கும் தேஹத்தை வஸ்த்ரம் முதலியவைகளால் மறைத்துக்கொள்வது காட்டு மிராண்டித்தனம் என்று நினைக்கும் இந்தக் காலத்தில் எது தான் அஸம்பாவ்யமாகும்?

*   *   *   *   *

“தர்ம ராஜ்யம்”

நமது மஹர்ஷிகளால் ஜகத்தின் ச்ரேயஸ்ஸை உத்தேசித்துச் சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள தர்மங்களை நிலை நிறுத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் ‘தர்ம ராஜ்யம்’ என்னும் பெயர்கொண்ட ஒரு புதிய பத்ரிகை இந்த மதிராஸ் நகரத்தில் நிகழும் தை மாஸம் முதல் நடத்தப்பட்டு வருகின்றது என்று நாம் அறி கின்றோம். இது இங்க்லிஷ் பாஷையில் எழுதப் பெற்று, தத்காலத் தில் ஏழு நாட்களுக்கு ஒரு தடவை ப்ரசுரிக்கப்படுமென்றும், சீக்ரத் தில் அவ்விதம் வாரம் ஒரு முறையாக வெளி வருவது மாறி ப்ரதி தினமும் வெளி வருமென்றும் அதன் அதிகாரிகளால் சொல்லப்பட் டிருக்கின்றது. கால பலத்தாலும் இன்னும் அதுபோன்ற மற்றைத் தோஷங்களாலும் நமது ஸநாதந தர்மம் இக்காலத்தில் குலைந்து வருகின்றது என்பது ஆஸ்திகர்களா யிருக்கும் ஹிந்துக்க ளெல்லா ருக்கும் தெரிந்த விஷயமே. நமது மதத்தில் ஜநித்து, நடை உடை பாவனைகளில் தாம் ஹிந்துக்களே என்று சொல்லிக் கொண்டுள்ள நமது பெரியோர்களுள் அநேகர், ஸநாதந தர்மம் என்பது முற் காலத்துக்கே தகுந்த தென்றும் இக்காலத்தில் அதன் அநுஷ்டாநம் பல தீங்கையே விளைவிக்குமென்றும் சொல்லிக்கொண்டு அதை அநாதரித்தும் தூஷித்தும் வருகிறார்கள். அவர்களுடைய வார்த்தை பெரிய பதவியில் இருப்பவர்கள் சொல்லும் வார்த்தையாக இருக்கி றபடியால் ஸாமாந்ய ஜநங்கள் அதில் த்ருடமான நம்பிக்கை வைத்து அதனால் ஏமாந்து வழிதவறி நடப்பதையும் எல்லாரும் பார்க்கலாம்.

“யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந:”

என்கிறபடி பெரியவர்களென்று கொண்டாடப்படும் ஜநங்களுடைய வார்த்தையும் அநுஷ்டாநமுமே ஸாமாந்ய ஜநங்களுக்கு ப்ரமாண மாகின்றதன்றோ? இப்படி லோகம் ஏமாந்து போவதைத் தடுத்து, ‘ஸநாதந தர்மமென்று ஒன்று உண்டு; அதன் அநுஷ்டாநம் இக் காலத்திலும் ஸாத்யமானதே; அது ஒருகாலும் தீங்கை விளைவிக்க மாட்டாது; சாச்வதமான ச்ரேயஸ்ஸைப் பெறுவதற்கு அதுவே சரி யான வழி’ என்பதை எல்லாருக்கும் உபதேசிக்கும் நோக்கத்து டன் வெளிவரும் இந்தப் பத்ரிகையை நாம் மிக்க ஆநந்தத்துடன் ஸ்வாகதம் செய்கின்றோம்.

இந்தப் பத்ரிகை பூரி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமி களால் அநுக்ரஹிக்கப்பட்டு, அவர்களுடைய ஸஹாயத்துடன்

நடத்தப்பட்டு வருகின்றதென்றும், ஸர்க்கார் உத்யோகத்தில் ஜட்ஜ் பதவியில் பஹுகாலம் இருந்து, இப்பொழுது வேலையிலிருந்து நிவ்ருத்தராயிருக்கும் ப்ரஹ்ம ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்த்ரிகள் அதற்கு ஸம்பாதகராக இருக்கிறாரென்றும் அந்தப் பத்ரிகையிலிருந்து நாம் அறிகின்றோம். இப்படிப்பட்ட மஹான்கள் ப்ரவ்ருத்தித்திருக்கும் கார்யத்தின் ஸித்தி கைகூடும் என்பதில் ஆக்ஷேபம் ஏது?

" ஜாம்பவாநுயத்ர யத்ர ஸாதவஸ்ஸமுபாஸதே ।
ஸாகல்யாத்ஸர்வஸம்பத்திஷ்ட தா ஸந்தி தத்ர வை ॥"

*   *   *   *   *

பூகம்பம்

நமது இந்தியாவின் வடபாகமாகிற பேஹார் ராஜதானி நேபாள தேசம் முதலிய பல இடங்களில் ஸ்ரீமுக வருஷம் தை மாஸம் 2உ (15-1-34) மத்யாஹ்நம் 2 மணிக்குப் பெரிய பூகம்பமொன்று உண்டாகி அநேக பட்டணங்களையும் அநேக க்ராமங்களையும் பாழாக்கிவிட்டதாம். சற்றேறக்குறைய இருபதினாயிரம் ஜநங்கள் நாசம் அடைந்து விட்டார்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். பூமி அசைந்தமாத்ரமின்றிக்குப் பலவிடங்களில் பூமி வெடித்து அந்த வெடிப்புகளிலிருந்து கந்தகம் கலந்த ஜலம் ப்ரவஹித்துத் தாழ்ந்த ப்ரதேசங்களெல்லாவற்றையும் ஓரே வெள்ளக் காடாகச் செய்து விட்டதாம். இந்த விபத்திலிருந்து பகவத் க்ருபையால் தப்பியிருக்கும் ஸ்வல்ப ஜநங்கள் அந்நம் வஸ்த்ரம் தங்குமிடம் ஒன்றும் அகப்படாமல் மஹத்தான கஷ்டத்தை அநுபவிக்கிறார்களாம். இது பெரியதொரு ஆதங்கமே. ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தை யார் அறியக் கூடும்? இவ்வளவு கொடிதான சிக்ஷையைச் செய்வதற்கு, நாம் அதற்குத் தகுந்த மஹா பாபங்களைச் செய்தே இருத்தல் வேண்டும். பாபம் செய்யும் காலத்தில் அதன் கொடுமையைக் கொஞ்சமேனும் அறியாமல் செய்துவிடுகின்றோம்; அவைகளின் விபாகம் வரும் காலத்தில் கதியற்றவர்களாய்க் கதறுகின்றோம்.

" ந சிந்தயதி கர்த்ருத்வே
ஸஹஸா பாபமாசரந் ।
ஸோஸ்மாம் விபாககாலே து கண்டக
க்ருதஜ்ஞஸ்ஸந்தாபமுபைதி ॥"

பெரும்பாலும் இதுவே ஜநங்களின் நடத்தையாக இருக்கின்றது. பகவானே விவேகத்தைக் கொடுத்து எல்லாரையும் காப்பாற்ற வேண்டும்.

தசரத தனயனு மெதுகுலத் தவன்
வசையறு புதல்வனு மாகி வையக
மிசையெழுந் திடினுமீ மேலிந்த சிலரித்
திசையுறத் தொணர்கிலை திரும்பிப் போந்தனை. 57

என்றனை யியம்பிடக் கேட்ட வெந்தையும்
நன்றுறும் குறுநகை புரிந்து நாறல
சொன்றிய தேவிநீ யுரைத்த பின்னரே
நின்றது நினைவிது நிகழ்த்தக் கேட்டியால். 58

ஆசுரத் தனத்தன லகத்தின் சும்மையால்
வாசனை வயத்தராய்ப் புவியின் மாந்தர்கண்
மாசறும் பலவவ தார மாடியான்
ஆசறத் தெருட்டினு மறிவொன் றின்றியே. 59

மயங்கிய மனத்தராய் மாறி மாறியே
யியங்கிடு மெந்திர மெனப் பிறப்பது
முயங்கிட வுருள்வது மாகி யோவலில்
பயந்கொளு நரகவின் பயன்க டுய்ப்பரால். 60

தொடர்தரு பழவினைத் துவக் கறுத்துநம்
மிடமுற வியைந்தருள் காணங் கொண்டவர்
கொடுவினை புரிகுவர் சமிதை கொய்திடும்
படைகொடு பசுவின்வால் பரித லென்னவே. 61

ஆகையி னவரையான் விரகின் மீட்டிடத்
தோகையே யிங்ஙனந் துணிந்துளே னெனப்
பாகடு கிளிமொழி யதுவென் பாங்கென
வோகையி னுபேந்திரன் மறித்துங் கூறுவான். 62

இவகை யவதரிப் படைந்துளே னெழின்
மைவிழி மடைந்தையே யவற்றுண் மண்ணகங்
கைவழி யமுதெனக் கலந்த ருச்சையா
யுய்வழி யிதுவென வொளிரு கின்றனன். 63

பூமியு நீளையும் பொருந்த நீயுமென்
காமுறு மருகினில் வளையுங் காவிரித்
தாமமா ரரங்கமே முதல தண்பொழி
லேமமார் பதிகளி லிலகு மெம்மையே. 64

அனந்தனே யாதியா மரிய சூரிகள்
நனந்தலை யுலகினி லுதித்து நான்மறைத்
தனந்தனால் விளக்கிடத் தயங்கு மாந்தர்கண்
மனந்தெளி வுறவிவண் மணந்து வாழ்வரால். 65

பற்பல வருணமா யவர்கள் பார்மிசை
யுற்பவித் திடுகையி னுதிப்ப ணீளையு
மற்புட னிலகுமாழ் வார்க ளாரியர்
பொற்புறு மிவரெனப் புகல்வ ராங்கரோ. 66

ஏதியே முதலிய வுதிக்கு மிவ்வகைப்
போதவா ரியர்மறைப் பொருளைத் தண்டமிழ்
வேதமா யிழைத்தெனை விரும்பும் பல்வகை
மேதகுந் திருப்பணி யிழைத்து மேவுவார். 67

ஐம்பொறி வழிமனம் வலிக்க வாடியும்
வம்புறுந் துறைபல துணிந்து மாழ்கியும்
வெம்புறுங் கொடுந்தடம் படிந்த வேழமா
யம்புவி யறிவில ரழுங்குவா ரெலாம். 68

வாய்மையின் வழியினி லெமது வைபவந்
தூய்மையி னுதிப்பவர் துலக்கி யெம்பதம்
ஆய்மையி னருளினு ளான மாத்திரம்
பாய்மதக் களிறென வடைப்பர் பான்மையால். 69

அடைந்தவ ரனந்தனு தியர்க ளன்னவின்
குடைந்தபூந் தேன்கலந் தொளிருங் கோதையாய்
மிடைந்துநந் திருப்பணி மிழற்ற யாவரு
முடைந்திடும் பெருங்களி யுததி யாடுவார். 70

எனத்திரு மகட்கிசைத் தெதிர்த்த கஞ்சனால்
பனைக்காக் களிறிறப் படுத்த மாயனும்
நினைத்தன னருகுள நித்தர் பூமிசைத்
தனித்தனி யுதித்திடத் தயையி னென்பவே. 71

உ-வது சருக்கம்

முதலாழ்வார்கள் வைபவம்

காளியன் முடிமே னடித்ததுங் கல்லைக்
கவின்பெறு வனிதையாக் கியதும்
நீளுல கொருங்கே யளந்ததுங் குடிலச்
சகடற நிமிர்ந்துதைத் ததுவும்
வாளியல் கரத்துப் பஞ்சவர் பெருக
வளம்பெறுந் தூதுசென் றதுமாந்
தாளதா மரையா லிறைமலர்ப் பதமெந்
தலைமிசை தரித்துவாழ் குதுமே. 1

முத்தியைப் பயக்கும் புரிகளோ ரேழின்
முக்கிய மெனத்துலங் குவதா
யுத்தம மகஞ்செய் கலைமகள் கணவ
னுத்தர வேதியென் றளதா
யத்தகைப் பிரமன் பெயர்கவென் பதனு
லவனரி தனையருச் சித்த
வித்தக நகர மாகையிற் கச்சி
யெனுமொரு திருநகர் விளங்கும். 2

பங்கயன் புரிந்த வேள்வியின் வபையைப்
பரிவுடன் கவர்ந்தெழும் பவளத்
தங்கலும் வரத னம்மலர்த் தாள்கள்
வணங்குற விழிதரு மமரர்
செங்கதிர் முடிக ளுரிஞ்சிடச் சிதறும்
பொன்பிதிர் பரவலின் முழுது
மங்கதைத் தருவைந் தடர்ந்தபொன் னகரென்
றறைகுவ ரறிவினிற் பெரியோர். 3

பற்பல வடுக்கிப் பளிங்கினு லுயர்ந்த
பவனமி தன்பர்பாற் பயிலும்
மற்புறு கலவி புரிந்தயர்ந் துறங்கு
மங்கனைத் திரண்முகத் தழகைச்
சிற்சில கவரச் செறிந்திட வவர்கண்
ணுட்டிய மைபடிந் துறலால்
பொற்புறு கருமை வடிவிடை யிலகப்
போந்திடுந் திங்கள்வா னகமே. 4

அளவிடற் கரிய கடவுளர் நிலயத்
 தந்தர மளவிடுஞ் சிகரத்
திளவெயி லெறிக்குங் கதிர்மணி யொளியாற்
 சிவந்தரு கொழுகுறு மெழிலார்
வளம்பல தருநன் னதியது வேக
 வதியெனப் பகருவ ரதனைத்
தளவமின் முறுவ லரம்பையர் ககனத்
 தாங்கிணி யெனமகிழ்ந் தடைவார். 5

மறையவர் புரியு மகத்திடை யெழும்பு
 நறும்புகை விண்ணக மறைக்க
நறைநிறை துளவத் தார்புனை வரத
 ளுள்விழ வவற்றினிற் கறங்கும்
பறைகளு முழங்க வறுபதம் பாடு
 மருமலர்ப் பைம்பொழி லிடையே
யுறைதரு மயில்கள் காரென மருண்டங்
 குவப்புட னடிக்கும்வே ளிலினும். 6

விண்ணக மெழுந்த வெண்மணி மாட
 நிரைமிசை விண்ணதி பெருகத்
தண்ணிளம் பிறையு மூர்தலி னிழைத்த
 தவம்பெறும் போகிக ளுறையக்
கண்ணொரு மூன்று முடைக்கறை மிடற்றே
 காம்பரக் கடவுளின் பொலிவை
நண்ணிய வெமக்கார் நிகரெனப் பொங்கி
 நகுமெனப் புகலுறு நாளும். 7

கலிவயத் தனராய்க் கருத்தழிந் தலையுஞ்
 சேதனர் படுந்துயர் களையப்
பொலிவுற வெழுந்த தூப்புலன் வரதன்
 பொன்னடி புரிந்தரு ளாள
நிலவிடு நீயிக் கரிகிரி யிகந்து
 நின்பரம் பதத்தினு மடியேற்
கிலைமன மென்று சூளுரைத் திடினித்
 திருநகர்க் கிணைபிறி தெவனோ. 8

காண்கினு மருகித் தீண்டினும் வினையைக்
 கலக்குறு மனந்தமா சரசின்
பாங்கரின் மதமாப் பருப்பத முடிமேற்
 பைம்பொனிற் பளபளென் றிலகும்
மாண்பரு புணியகோடியென் றெவரு
 மகிழ்ந்தடை விமானம திடையே
காண்புறு மருளா ளன்றனைக் கண்ட
 கண்களே கண்ணெனத் தகுமே. 9

இப்பெரும் பகடார் நகர்தனிற் பதினெண்
 டிருப்பதி களிலெழி லேய்ந்த
மைப்புய னிறமால் கண்வளர்ந் தருளு
 மாமதிற் சினகரத் தருகார்
அப்பெனு மமுத நிறைதரும் பொய்கை
 யாடகத் தாமரை மலரில்
அப்பெருந் திருமா லங்கையிற் சங்கத்
 தஞ்சமாய்ப் பொய்கையா னுதித்தான். 10

முந்திய யுகத்தே நாலிரண் டிலக்கத்
 துடன்சில வாண்டுகண் முடிந்து
பிந்திய வொருசித் தார்த்தியைப் பசியி
 லட்டமி பிணைந்திடு மோணத்
திந்தமா வுலக முய்ந்திட வுதித்த
 விப்பெரும் பொய்கையாழ் வானுங்
கந்தமா மலராள் கணவனம் மலர்த்தாள்
 கருதியே தவந்தனி லிருந்தான். 11

பின்மறு தினத்தின் மாவலி புரத்திற்
 பேய்முலை சுவைத்தவற் குரிய
பொன்மலர்க் காவின் மாதவி மலரி
 லவன்கதை யஞ்சமாய்ப் போந்த
நன்மைசேர் பூத நாதனுந் திருமா
 லடியெனு நளினமே நாடித்
தொன்மைசேர் யோகத் துறைபிற மாது
 தோன்றுமா றருந்தவ மிழைத்தான். 12

மறுதினம் பேயா னந்தகத் தஞ்ச
 னுகியே மயிலையி லிலகும்

வெறிகமழ் துளவன் கேசவன் கோயி
லருகொரு விரைமலர்க் கிணற்றி
லறுபத முரல்செவ் வல்லியின் மலரி
லவதரித் தஞ்சன வண்ணன்
மறையுறு பொருளென் றவன்றனைக் காண
மன்னிய தவம்புரிந் துறைந்தான். 13

கருவிலே திருவாய்ந் தெழுந்தவம் முதலாழ்
வார்களோர் மூவருங் கலையிற்
பெருகியே யோழுக வுலகினிற் பலர்தே
றான்மவா தியர்களாய்ப் பெருமான்
மருமலர்த் தாள்கண் மருவுத லின்றி
மறுகட வுளர்தமை யருச்சித்
திருமையு மிழந்து பிறப்பிறப் பென்னு
மிருதலைக் கொளியிடைப் புழுவாய். 14

உழல்வது கண்டு நாரணன் றிருத்தா
ணினைப்பது முயர்ந்த நற்குருவின்
கழலடைந் தவர்தங் கடைக்கணிப் புறலுங்
கரியமா லடியர்தம் பதத்தை
விழைவுடன் கண்டு பணிதலு மன்றி
வேறொரு விரகிலை யமுத
மெழில்பெற வடைய வென்றுல கறியத்
தெருட்டிடத் துணிந்தனர் மறையால். 15

துணிந்தெழுந் தாங்காங் கொளிர்ந்தரு ளருச்சை
யெம்பெரு மானடி தொழுதுங்
குணங்கொளுந் தமது மதந்தனைப் பெருக்கிக்
குவளையுங் கமலமு முதலா
மணங்கமழ் மலரார் பெண்ணையின் கரையின்
மன்னுமங் கோவலூர் தன்னை
மணந்தரு ளாய ரடி பணியத்
தனித்தனி மறைந்தன ரவணே. 16

கார்முகில் படியுங் கனகமா மதில்சூழ்
நகரம் புகுந்தவர் கமலை
மார்புறத் திகழும் பூவரா கன்றன்
மலரடி பணிந்தகங் குழைந்து

நேர்பெறத் துதித்தா னந்தவா ரிதியின்
மூழ்கிமெய்ப் புளகொடு நிலவிப்
பேர்கில மனத்தின் பேர்ந்தவர் வெவ்வே
றிடங்களிற் பிறங்கினர் பெரியார். 17

ஒருவரை யொருவ ருணர்கிலா துறைய
வொண்கதிர் குடகட லொளிக்க
விரவினிற் பொய்கை யாரொரு மனையி
னிடைகழி தனிற்படுத் திருக்க
புரையறு பூதத் தாரவண் போந்தெற்
குண்டுகொ லிடஞ்சிறி தென்ன
வொருவரே படுப்ப ரிருவரே யிருப்ப
ரொன்றுமேல் வருகவென் றுரைத்தான். 18

கேட்டவ னுழைய விருவரு மிருக்கக்
கேழ்கிள ரல்லியி னுதித்தோன்
மீட்டவ ணெழுந்தெற் குண்டுகொல் சிறிதின்
றிரவினின் மேவிட மென்ன
வாட்டமின் றொருவர் படுக்கலா மன்றி
வைகலா மிருவரே மூவ
ரீட்டியே நிற்க லாந்திரு வுளமே
லெழுந்தருள் கெனவவ ரிசைத்தார். 19

மூவரு மந்தக் கடைத்தலை நின்று
முதமொடுங் குசலமே வினவி
மேவிய கலப்பு நன்றிது நமது
விழைவுமிங் கடைகுது மென்று
காவிபோல் வண்ணன் கண்ணனுங் கிடியுங்
காற்றுமே கலந்துகு மழையைத்
தேவரு மறியா தியற்றியங் கெழுந்து
திகைத்திட வவர்நெருக் கினனால். 20

வேறு

மண்ணவர் பருகியுய்ய் மறையெனு மமுதங்கால
விண்ணவர் பெருமானந்த விமலராங் கழையைப்புக்கு
நண்ணியு நெருக்கவிந்த நடலையின் கடைதற்கென்னென்
றெண்ணியே யவர்களெஞ்சந் தியங்கியே யிருக்குமெல்லை. 21

பொய்கையா னருக்கனுகும் பொருவருஞ் சுடரையேற்ற
வுய்கையார் பூதத்தானு ஞானமா மொளியைத்தூண்டச்
செய்கையா லிக்தவந்த காரமு மகன்றுசெய்ம்கழ்
மெய்கையாக் கலுழன்மீது மாதவன் மிளிர்ந்தான்மன்னே. 22

மான்றன துரிவையாலே மார்புறை மலர்மேன்மாதைத்
தான்மறைத் தனனென்றோதுந் தன்மையாற் களவின்கண்ணும்
பான்மையிற் பிரியாதொன்றும் பங்கயத் தணங்கினோடும்
வானகத் திலகுவானை மூவரும் வணங்கிப்பின்னும். 23

ஆடின ரங்குமிங்கு மோடின ருடலமெங்கும்
கூடினர் புளகநாவுங் குழறிடக் குணங்கடம்மைப்
பாடின ரகங்குளிர்ந்தார் பரமனுங் கடைக்கணித்து
மாடொளிர் நிலயந்தன்னை மறைந்துடன் மணந்தான்மன்னே. 24

தாங்கண்ட செயலைவையந் தான்றெளிந் துய்யத்தேறி
யாங்கவர் முறையேமூன்றந் தாதியா மொருமூன்றாறும்
பாங்குடன் வரைந்தத்தேக வீசனைப் பணிந்துமீண்டு
நீங்கருந் தலங்கடோறுஞ் சென்றனர் நிமலரன்றே. 25

திருமழிசையாழ்வார் வைபவம்

மூதண்டம் பிளக்கவார்த்து முரணையி லிலங்கைசெற்ற
கோதண்டன் பெருமையிவ்வா றவருல கறியக்கூடி
வேதங்க ளுன்கினும் விளக்கியே விளங்குங்காலைப்
போதங்கொண் மழிசையாழ்வான் போந்தமை புகலுகிற்பாம். 26

பிருகுவும் வசிட்டன்றானும் பிறங்குயாழ் முனியுஞானம்
பெருகுநற் சுகனும்பெற்ற தாதையு முதலாமற்ற
விரிசடைத் தவத்தராய விருடிகள் விரவிமுன்னர்
ஒருபக லயனையண்மி யின்னண முரைக்கலுற்றார். 27

கலைமகட் கிறைவயாங்கள் காசினி யிடையிலீண்டி
நிலைபெற வசித்தற்கான நின்மல தலமேதென்ன
வுலகையு மழிசையுங்கண் டுண்மையை யுணர்ந்துவல்லே
துலையொன்று தொணர்கவென்று துவட்டனுக் குரைத்தானன்றே. 28

"காரீர்யா வ்ருஷ்டிகாமோ யஜேத" இத்யாதிஷு ஸித்தே ஸதி நியோகே வ்ருஷ்ட்யாதிஸித்திநிமித்தஸ்ய வ்ருஷ்டிவ்யதிரேகேண நியோகஸ்யாநுகூலதா நாநுஸந்தீயதே! யத்யபி ஜந்மாந்தரே வ்ருஷ்ட்யாதிஸித்தௌ நியம:, ததாऽபி ஸ்வநியமேநைவ

காரீர்யா......'மழையை அபேக்ஷிப்பவன் காரீரியைக் கொண்டு யாகம் செய்தல் வேண்டும்' என்பது முதலிய இடங்களில் நியோகம், ஜ்யோதிஷ்டோம யாகங்களிற் போல் விளம்பியாமல் உடனே ஸித்திக்கின்றது; ஆனால் அது புருஷாநுகூலமாக அநுபவிக்கப்பட வில்லையே! அந்த நியோகத்தை நிமித்தமாகக் கொண்டு ஸித்திக்கும் மழை மாத்ரமே அநுகூலமாக அநுபவிக்கப் படுகின்றது. ஆகையால் 'நியோகம் அநுகூலம்' என்று சொல்வது எவ்விதம் அநுபவத்திற்கு ஒத்ததாகும்? 'இந்தக் காரீரியாகம் முதலியவற்றைச் செய்பவனுக்கு இந்த ஜந்மத்திலேயே மழை முதலியவை ஸித்தித்து விடுகின்றன வென்பது நியதமில்லையாகையால் நியோகத்தின் ஸித்தி அநுபலக்ஷமாகவும் கூடும்; அதன் அநுகூலத்தன்மையும் அநுபவிக்கப்படாமல் போய் விடலாம்' என்று ஸமாதாநம் சொல்லலாமோவென்றால் அது நிலைபெற மாட்டாது.

காரீர்யா:—'நியோக மென்பது ஸுகரூபமே' என்று சொல்வது ஸ்வாநுபவ விருத்த மென்பதை நிரூபிக்கிறார். ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களால் உண்டாகும் அபூர்வம் கடைசி இஷ்டி முடிந்த பிறகே ஸித்திக்கிற படியாலும் வேறொரு ஜந்மத்திலேயே பலங் கொடுக்கக் கூடியதாகையாலும், அந்த அபூர்வத்தின் ஸுகத் தன்மை இப்பொழுது அநுபவத்தால் விளங்கக் கூடியதாகமாட்டாது. இந்த ஜந்மத்திலேயே பலத்தைக் கொடுக்கக் கூடியதான அபூர்வத்தை உண்டாக்கும் ஒரு வைதிக க்ரியையில் அந்த அபூர்வம் ஸுகரூபமாக அநுபவிக்கப் படுகின்றதா இல்லையா என்பதை விசாரிக்கும் பொருட்டு இந்தக் காரீரி யாகம் இவ்விடத்தில் கூறப்பட்டிருக்கின்றது. 'கரீர' என்பது ஒரு முள் செடிக்குப் பெயர் (மூங்கில் தளிரையும் அது குறிக்கும்). அதன் ஸம்பந்தம் பெற்றது காரீரீ. அதைக் கொண்டு ஒரு யாகம் செய்தால் மழையை விரும்புவோன் மழையை அடைவன் என்றும் இந்த யாகத்தைச் செய்தவுடன் இதனால் உண்டாகும் அபூர்வம் ஸித்தித்து ப்ராயேண இந்த ஜந்மத்திலேயே பலனைக் கொடுக்கின்றது என்றும் சொல்லப் பட்டிருக்கின்றது. அப்படி ஸித்திக்கையிலும் மழை வந்த பிறகே ஸுகம் ஏற்படுகின்றதே தவிர மழை வருவதற்கு முன் அந்த அபூர்வம் அநுபவத்தில் ஸுகமாகத் தென்பட வில்லையாகையால், நியோகம் ஸுக ரூப மென்று சொல்வது அநுபவ விருத்தமே ஆகுமன்றோ? யத்யபி ஜந்மாந்தரே...'காரீரி யாகம் செய்பவனுக்கு இந்த ஜந்மத்திலேயே மழையாகிற பலம் ஏற்படுகின்றது என்னும் நியமமொன்று மில்லை; அது அடுத்த ஜந்மத்திலும் ஏற்படக் கூடும். ஆகையால்

நியோகஸித்திரவஶ்யாஶ்ரயணீயா ; தஸ்மிந் நானுகூல்யாவஶ்யம்பாவ ஸாதநாநுபவஹதிந் விருத்தே | ஸாவகாஶத்வாத் க்ருதிஸாத்யேஷ்டாதிரேகி க்ருத்யுத்தேஶ்யத்வம் ந விருத்தே |

க்ருதிம் ப்ரதி ஶேஷித்வம் க்ருத்யுத்தேஶ்யத்வமிதி வசநமிதம் ஶேஷித்வம்? கிஞ்ச ஶேஷத்வம்? இதி வக்தவ்யம் | ''கார்யப்ரதி ஸம்பந்தீ ஶேஷ:, தத்ப்ரதிஸம்பந்தித்வம் ஶேஷித்வம்' இதி வசநே,

---

இந்த ஜன்மத்தில் மழையின் ஸித்தி நியதமில்லை யென்று மாத்ரம் சொல்லப்படுகிற படியால், சில ஸமயங்களில் மழை ஸித்திக்கலாம் என்றும் ஏற்படுகின்றது. அப்படி மழை ஸித்திக்கும் பொழுது நியோகம் நிச்சயமாக ஸித்திக்கிறபடியால் அதன் அநுகூலத் தன்மையாகிற ஸுகம் அப்பொழுதாவது அநுபவிக்கப்படவேண்டு மன்றோ? அதுவுமில்லை யாதலால் அநுபவ விரோதம் ஸ்தாபிக்கப்பட்ட தாகின்றது. ஆகையால், க்ருதியால் ஸாதிக்கக்கூடிய இஷ்ட வஸ்துவைத் தவிர்ந்து வேறு ஒரு க்ருத்யுத்தேச்யமும் இருக்கின்றது என்பது இல்லை.

க்ருதிம் ப்ரதி ஶேஷித்வம்:—க்ருதிக்கு எது சேஷியோ அதுதான் அதன் உத்தேச்யம்' என்று உத்தேச்யத்தை விவரிக்கலாமோவென்றால், 'சேஷி சேஷம் இவைகளின் பொருள் என்ன?' என்பதை விளக்குதல் வேண்டும். 'கார்யத்திற்கு எது ப்ரதி ஸம்பந்தியோ அது கார்யத்திற்குச் சேஷம்; அந்தச் சேஷத்திற்கு எது ப்ரதி ஸம்பந்தியோ அது அந்தச் சேஷ வஸ்துவுக்குச் சேஷி' என்று சொல்லும் பக்ஷத்தில், கார்

அதனால் உண்டாகும் அபூர்வத்தின் ஸுகத்தன்மை அநுபவத்தால் அறியப்படாமல் போகலாம்' என்று எதிராளிகள் வாதிக்கக் கூடும். 'இந்த ஜன்மத்திலேயே ஏற்பட வேண்டும் என்னும் நியமம் இல்லை என்று மாத்ரமே சொல்லுகின்றீர்கள். ஒரு ஸமயத்தில் அது ஏற்பட்டாலும் ஏற்படலா மன்றோ? அப்பொழுதாவது அந்த அபூர்வத்தின் ஸுகத்தன்மை அநுபவத்தில் தெரிகின்றதோ? தெரியவில்லை யாதலால், அபூர்வமென்பது ஸுகரூபமன்று என்பது அநுபவ விருத்தமே' என்பது அதற்கு ஸமாதாநம்.

க்ருதிம்ப்ரதி ஶேஷித்வம் ...... இப்பொழுது 'க்ருதியின் உத்தேச்யம்' என்பதற்கு 'க்ருதிக்குச் சேஷியாக இருக்கும் தன்மை' என்று லக்ஷணம் சொல்ல ஆரம்பிக்கிறீர்கள். 'சேஷி' என்றால் என்ன வென்பதை நீங்கள் நிரூபிக்க அசக்தர்களாக இருக்கிற படியால், இதுவும் உபபந்நமாக மாட்டாது' என்பது இதற்கு ஸமாதாநம்.

ப்ரதிஸம்பந்தீ— பரஸ்பரம் ஸம்பந்தம் பெற்றுள்ள இரண்டு வஸ்துக்களைப் பரஸ்பரம் ப்ரதிஸம்பந்திகள் என்று சொல்வார்கள். யஜமானனும் வேலைக்காரனும் பரஸ்பரம் ப்ரதிஸம்பந்திகள். பிதாவும் புத்ரனும் அப்படியே. அதே மாதிரி க்ருதியும் கார்யமும் ப்ரதி ஸம்பந்திகள் என்று சொல்லப்படுகின்றது. க்ருதி என்பது ப்ரயத்நத்தையும் கார்யம் என்பது அந்த ப்ரயத்நத்தால் ஸாத்யமானதையும் குறிக்கின்றபடியால் அவை இரண்டும் பரஸ்பரம் ப்ரதி ஸம்பந்திகளாகக் கூடும். இவ்

ஏவம் ஸதி கார்யஸ்யைவ ஶேஷித்வமித்யுக்தம் பவதி; கார்யத்வமேவ விசார்யதே | 'பரோத்தேஶேந ப்ரவ்ருத்தக்ருதிவ்யாப்யத்வமேவ ஶேஷத்வம்' இதி வசநே கோऽயம் பரோத்தேஶோ நாம? கார்யமேவ ஹி விசார்யதே | 'உத்தேஶ்யத்வம் நாமேப்ஸிதஸாத்யத்வம்' இதி வசநே கிமிதமீப்ஸிதத்வம்? 'க்ருதிப்ரயோஜநத்வம்' இதி வசநே,

---

யமே சேஷி என்று சொன்னதாயிற்று. கார்யம் என்பதையே நாம் உபபாதிக்குமிடத்தில் 'எது கார்யமோ அது சேஷி' என்று சொல்வது ஒத்து வருமோ? 'மற்றொன்றை உத்தேசித்துச் செய்யப்படும் க்ருதியுடன் கூடவே எது எப்பொழுதும் நிலை பெற்று நிற்கின்றதோ அது அந்த மற்றொன்றுக்குச் சேஷம்' என்று சொல்லலாமோ வென்றால்; அதுவும் உபபந்நமாக மாட்டாது. ஏனென்றால், 'உத்தேசம் என்பதன் பொருளையன்றோ விசாரித்து வருகிறோம்? அந்தப் பொருளை விளக்குமிடத்தில் அந்தப் பதத்தையே ப்ரயோகம் செய்வது எப்படி உபபந்நமாகும்? 'உத்தேச்யம் என்பதால் நாம் அடைய இஷ்டப்படும் வஸ்துவை ஸாதித்துக் கொள்வதையே குறிக்கின்றோம்' என்றால், 'அடைய இஷ்டப்படுவது எது?' என்று கேட்கக்கூடும். 'க்ருதியின் ப்ரயோஜநமே அடைய இஷ்டப்படும் வஸ்து' என்று சொன்னால், ஒருவன் செய்யும் க்ருதியின்

விடத்தில் 'சேஷம்' என்றால் என்ன வென்று கேட்டதற்கு, 'கார்யத்திற்கு எது ப்ரதிஸம்பந்தியோ அது சேஷம்' என்று பதில் சொல்லப்பட்டது. 'சேஷி' என்றால் என்ன வென்னும் கேள்விக்கு 'சேஷனுக்கு எது ப்ரதிஸம்பந்தியோ அது சேஷி' என்பது உத்தரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. முதல் கேள்வியின் ஸமாதாந ப்ரகாரம் கார்யமும் சேஷனும் ப்ரதி ஸம்பந்திகளாகிற படியால், சேஷனுக்கு ப்ரதிஸம்பந்தி கார்யமே ஆகவேண்டும். ஆகையால் இரண்டாவது கேள்வியின் ஸமாதாநம் 'கார்யமே சேஷி' என்பதாயிற்று. 'கார்யம்' என்பதன் பொருளை விசாரிக்குமிடத்தில் 'அது சேஷி' என்று பதில் சொல்ல, 'சேஷி என்றால் என்ன?' என்று கேட்கும் பொழுது 'அது கார்யமே' என்று பதில் உரைப்பது சரியான ஸமாதாநமாக மாட்டாது என்பதே இவ்விடத்தில் விளக்கப்படுகின்றது. ['கார்யம்' என்பது க்ருதிக்கு உத்தேச்யமாக இருப்பது; க்ருதியின் உத்தேச்யம் என்பது க்ருதிசேஷி; க்ருதிசேஷி என்பது கார்யம் என்பதன்றோ இவர்களின் வாதம்?]

பரோத்தேஶேந ப்ரவ்ருத்தக்ருதிவ்யாப்யத்வம்—நாம் செய்யும் ப்ரயத்நமெல்லாம் அந்த ப்ரயத்நத்தால் உண்டாகும் 'கார்யம்' என்பதை உத்தேசித்தே என்பது தான் மீமாம்ஸகர்களுடைய கொள்கை. அதை இந்த வாக்யத்தால் சொல்லுகிறார்கள். 'மற்றொன்றை உத்தேசித்துச் செய்யப்படும் க்ருதியுடன் எப்பொழுதும் சேர்ந்திருக்க யோக்யதையை உடைத்தாயிருப்பதுதான் சேஷத்வம் என்பதன் பொருள்' என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். இப்படிச் சொல்வதும் அஸங்கதம். 'உத்தேசம்' என்பதன் அர்த்தத்தை விவரிக்குமிடத்தில் 'மற்றொன்றை உத்தேசித்து' என்று அந்த 'உத்தேசம்' என்னும் பதத்தையே ப்ரயோகித்து அதை

பாரார்த்²யஸ்ய க்ருத்யர்த்²யஸ்ய ... ப்ரயோஜநத்வேந ஹி க்ருதிப்ரயோஜநத்வம்; ஸ சேஷ்டவிஷய: க்ருத்யுத்பாத்³யத்வாத் இதி ஸம்யகே³வோக்தம் | அபி சைவ ஹி ஸர்வத்ர சேஷசேஷிபா⁴வ: ' பரக³தாதிசயாதா⁴நேச்ச²யா உபாதே³யத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ:, பர: சேஷீ' | ஸ்வர்க³ாத்³யுத்பத்தீச்ச²யா யாகா³தே³ருத்பத்தேஸ்ய சேஷதா

ப்ரயோஜநமென்பது அந்த க்ருதியைச் செய்யும்படி அவனை எது தூண்டுகிறதோ அது தான் என்றும், அது நம்மால் இஷ்டப்பட்டதாயும் நம்முடைய க்ருதியால் ஸாதிக்கத் தகுந்ததாயும் இருக்கும் வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்டதன்று என்றும் ஏற்கெனவே நிரூபித்திருக்கிறோம். சேஷ சேஷி பாவத்தின் சரியான லக்ஷணமென்னவென்றால் ' மற்றொரு வஸ்துவுக்கு ப்ரயோஜநத்தைச் செய்ய வேண்டுமென்னும் இச்சையினாலே எதன் ஸ்வரூபமானது தான் உள்ள காலமெல்லாம் அங்கீகரிக்கத் தகுந்ததாகவே இருக்கின்றதோ அது அந்த மற்றொரு வஸ்துவுக்குச் சேஷமானது; அந்த மற்றொரு வஸ்து சேஷி ' என்பது தான். யாகங்களும் அவைகளை உத்தேசித்துச் செய்யப்படும் ப்ரயத்நங்களும் பலத்தை உண்டுபண்ண வேண்டும் என்னும் இச்சையினாலே அங்கீ

விளக்குவது விளக்கமாகுமோ ? இந்த ஆக்ஷேபம் தான் இவ்விடத்திற் சொல்லப்படுகின்றது. இதைத் தவிர்த்து இந்த விவரணத்திற்கு மற்றுமொரு ஆக்ஷேபம் செய்யக் கூடும். இந்த விவரணத்தில் ' க்ருதியுடன் எப்பொழுதும் எது கூட இருக்கின்றதோ அது சேஷம் ' என்றுசொல்லி யிருக்கிறபடியால், க்ருதியும் சேஷமும் வெவ்வேறு என்பது ஏற்படுகின்றது. இவ்விடத்தில் க்ருதியே சேஷமென்று சொல்லவேண்டியது இஷ்டமாயிருக்கிறபடியால் அதற்கு இது விருத்தம் என்பது மற்றுமொரு ஆக்ஷேபம். இந்த ஆக்ஷேபம் ஸ்ரீ பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பரக³தாதிசய... இது தான் ஸ்ரீ பாஷ்யகாரரால் 'சேஷம்' என்பதற்குச் சொல்லப்படும் லக்ஷணம். இது பூர்வ மீமாம்ஸையில் ' சேஷ: பரார்த்²த்வாத்' [எது மற்றொன்றின் பொருட்டு இருக்கின்றதோ அது அந்த மற்றொன்றுக்குச் சேஷம்] என்று சொல்லப்பட்ட லக்ஷணத்தின் விவரணம். இதுவே சரியான லக்ஷணமாகுமென்றும் மீமாம்ஸகர்களால் சொல்லப்படும் கார்யம் இந்த லக்ஷணப்ரகாரம் க்ருதிக்குச் சேஷியாக மாட்டாது என்பதும் இவ்விடத்தில் விளக்கப்படுகின்றன. எந்த வஸ்துவின் ஸ்வரூபமானது தான் உள்ள காலமெல்லாம் மற்றொரு வஸ்துவுக்கு ப்ரயோஜநத்தைச் செய்யவேண்டு மென்னும் இச்சையினாலே அங்கீகரிக்கத் தகுந்ததாக ஆகின்றதோ, அது சேஷம்; எனவே 'மற்றொன்றின் ப்ரயோஜநமே எதன் பரம ப்ரயோஜநமோ அது சேஷன், மற்றொன்று சேஷி' என்று சொன்னதாயிற்று. ப்ராக்ருதத்தில் ஸ்வர்க்கமாகிற பலத்தின் உத்பத்தியை விரும்பியே க்ருதி செய்யப் படுகின்றது; அப்படி இருக்கிறபடியால், 'க்ருதியின் பரம ப்ரயோஜநமானது கார்யம் என்பதன் ப்ரயோஜநமே' என்று எப்படி சொல்லக் கூடும்? ஆகையால் க்ருதியைக் கார்யத்தின் சேஷமென்று சொல்வது ஸாத்யமில்லை.

நேஷ்டஸ்ய சேஷதா |

அபி ச "ஸ்வர்க³காமோ யஜேத" இத்யாதி³ஷு லகாரவாச்ய கர்த்ருவிசேஷஸமர்ப்பணபராணாம் ஸ்வர்க³காமாதி³பதா³நாம் நியோஜ்யவிசேஷஸமர்ப்பணபரத்வம் சப்³தா³நுசாஸநவிரு

லுள்ள விகுதியால் குறிக்கப்படும் கர்த்ரு ஸாமாந்யத்தில் அடங்கியுள்ள கர்த்ரு விசேஷங்களை ப்ரதிபாதிக்கின்றன வென்பதன்றோ சப்த சாஸ்த்ரம் படித்தவர்களின் கொள்கை ? அதற்கு விருத்தமாக அந்தப் பதங்கள் நியோஜ்ய விசேஷங்களை ப்ரதிபாதிக்கின்றனவென்று மீமாம்ஸகர்கள் எந்த ப்ரமாணத்தை அவலம்பித்து வாதிக்கிறார்

' போஜநத்தை அபேக்ஷிப்பவர்கள் தேவதத்தனுடைய வீட்டுக்குப் போகவேண்டும்' என்று ஒருவர் கட்டளையிட்டால், அந்தக் கட்டளை போஜநத்தை அபேக்ஷிப்பவர்களையே குறித்துச் செய்யப்படுகிறபடியால் எவர்கள் போஜநத்தை அபேக்ஷிக்கிறார்களோ [அதாவது--கார்யத்தில் ஸ்வகீயத்வ புத்தி செய்கிறார்களோ] அவர்கள் அதில் நியோஜ்யர்கள் (ஏவப்படுபவர்கள்) ஆவார்கள் ; போஜநத்தை அபேக்ஷியாதவர்கள் நியோஜ்யர்களாகார். அப்படி அபேக்ஷிப்பவர்களுள் எவரெவர் ' தேவதத்தனுடைய வீட்டுக்குப் போவதான வ்யாபாரத்தை நாம் செய்தல் வேண்டும் ' என்று நினைக்கிறார்களோ [அதாவது—ஸாதநமாகிற கர்மத்தில் ஸ்வகீயத்வ புத்தி செய்கிறார்களோ] அவர்கள் அதிகாரிக ளாவார்கள் ; அப்படி நினையாதவர்கள் அதிகாரிகளாகார். அந்த அதிகாரிகளுக்குள் எவரெவர் தேவதத்தனுடைய வீட்டுக்குப் போவதான வ்யாபாரத்தைச் செய்கிறார்களோ அவர்கள் கர்த்தாக்க ளாவார்கள் ; அந்த வ்யாபாரத்தைச் செய்யாதவர்கள் கர்த்தாக்க ளாகார். இதிலிருந்து நியோஜ்யனாயிருக்கும் தன்மை, அதிகாரியாக இருக்கும் தன்மை, கர்த்தாவாக இருக்கும் தன்மை ஆக மூன்று அவஸ்தைகள் தென்படுகின்றன. இப்பொழுது இந்தக் கட்டளை வாக்யத்தில் தென்படும் போதல் வேண்டும் ' என்னும் வினைச்சொல் இவைகளுள் எந்த அவஸ்தையை ப்ரதிபாதிக்கின்றது என்று விசாரிக்குங்கால், வேதாந்திகள், அது கர்த்தாவாக இருக்கும் தன்மையையே ப்ரதிபாதிக்கின்றதென்றும், மீமாம்ஸகர்கள் நியோஜ்யனாக இருக்கும் தன்மையையே ப்ரதிபாதிக்கின்றதென்றும் சொல்வார்கள். அதாவது--வேதாந்திகளின் விவரண ப்ரகாரம், 'க³ச்சே²த்' (போகவேண்டும்) என்னும் வினை பொதுவாக கர்த்தாவையும் ' போ⁴க்துகாம: ' (போஜநம் அபேக்ஷிப்பவன்) என்னும் பதம் ' போஜநத்தில் அபேக்ஷையுள்ள' என்னும் விசேஷ கர்த்தாவையும் குறிக்கின்றன. அம்மாதிரியே மீமாம்ஸகர்களுடைய மதத்தில் வினைச்சொல் நியோஜ்ய ஸாமாந்யத்தையும் மற்றொரு பதம் நியோஜ்ய விசேஷத்தையும் குறிக்கின்றன. இம்மாதிரியே ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க³காமோ யஜேத, [ஸ்வர்க்கத்தை அபேக்ஷிப்பவன் ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் செய்தல் வேண்டும்] என்னும் வேத வாக்யத்திலும் இவர்களுள் விவாதத்தைக் கண்டுகொள்க. இந்த விவாதமே இவ்விடத்தில் விசாரிக்கப் படுகின்றது.

ஜெயதூ, யாமாதிவிஶிஷ்டயாZநூதவபுக்ஷவாஜெயடூ। ஊவம் மஹாரயீநாதீநாஜவி வாரஷவிஶெஷாதிஸாயாரநெஷ்டியொ வாஜெயதூஜெவ ஷூராஏவாடூ। ஊவஜீஷ்ரமதாதிஸாயாநெஷ்டியொ வாஜெயதூஜெவ ஜெநநாவெதநாத்தகஸ்ய ந்தஸ்யாநிதஸ்ய வ ஸவக்ஸ்ய வஷ்டூநஃ ஷூராஏவஜிதி ஸவபுஜீஷ்ர ஸெஷஹஏதடூ। ஸவபுஸ்யெஷ்டாரஃ ஶெஷீதி "ஸவபுஸ்ய வஶீ" "ஸவக்ஷெஸ்ஶாநஃ" "பதிம் விஶ்வஸ்ய" இத்யாதெஸ்ருத்தூ। தஜ்ஜாக "க்ருதி ஸாய்யம் ப்ரயானம் யத்தூய பூஜியீயதெ" இத்யபவடுக்ஷஃ ஸூஷயா

கரிக்கப்படத் தகுந்தவைகளாக ஆகின்றன. யாகங்களை ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்னும் இச்சையினாலே மற்றவைகளும் உபாதேயங்களாகின்றன. ஆகையால் யாகங்கள் அந்தப் பலத்திற்குச் சேஷம். பிறப்பாலேயே மற்றவர்களுக்குத் தாஸர்களாக இருப்பவர்களும் இன்னும் அவரைப் போன்றவர்களும் தமது ஸ்வாமிகளாயிருக்கும் மநுஷ்யர்களின் ப்ரயோஜநத்தைச் செய்யவேண்டுமென்னும் இச்சையாலே உபாதேயங்களாயுள்ள ஸ்வரூபத்தை உடைத்தாயிருக்கிறார்கள்; ஆகையால் அந்த ஸ்வாமிகளைக் குறித்து அந்தத் தாஸர்கள் சேஷர்கள். இம்மாதிரியே, நித்யமாயிருக்கும் நித்ய விபூதி அநித்யமாயிருக்கும் லீலா விபூதி இவைகளில் தென்படும் சேதந வஸ்துக்கள் அசேதந வஸ்துக்கள் இவையெல்லாம் ஈச்வரனுடைய ப்ரயோஜநத்தைச் செய்யவேண்டுமென்னும் இச்சையினாலே உபாதேயமாகும் ஸ்வரூபத்தை உடைத்தாயிருக்கின்றன. ஸகல வஸ்துக்களும் ஈச்வரனுக்குச் சேஷங்கள் என்றும் ஸகலத்திற்கும் ஈச்வரன் சேஷி என்றும் 'ஸவஸ்ய வஶீ' 'ஸவக்ஷெஸ்ஶாநஃ' இவை முதலிய ச்ருதி வாக்யங்கள் சொல்லுகின்றன. ஆகையால், 'எந்த ப்ரதாந வஸ்துவானது க்ருதியால் ஸாதிக்கப் படுகின்றதோ அது கார்யம் என்று சொல்லப்படுகின்றது' என்னும் மீமாம்ஸகர்களின் வாக்யம் 'தம்முடைய கொள்கையில் எவ்வித தவறுதல்களும் இருக்கமாட்டா' என்னும் ஆக்ரஹத்தை உடையவர்களுடைய கோஷ்டியில் மாத்ரமே சோபிக்கும்.

ஸவி வ... நிற்க, 'ஸ்வமக்காமொயஜெத' என்பது போன்ற வாக்யங்களில் 'ஸ்வர்க்க காமன்' என்பது முதலான பதங்கள், 'யஜேத' என்னும் வினையி

ஹெஶாதுதி ... இவ்விடத்தில் ஒரு வைதிக த்ருஷ்டாந்தம், ஒரு லௌகிக த்ருஷ்டாந்தம், ஒரு உபநிஷத் விஷய த்ருஷ்டாந்தம் ஆக மூன்று த்ருஷ்டாந்தங்கள் கூறப்படுகின்றன. மஹாரயீந... இந்தப் பதம், பிறப்பினாலே அடிமையாக இருப்பவனைக் குறிக்கின்றது. 'கர்ப்ப தாஸன்' என்றும் அவனைச் சொல்வார்கள். அம்மாதிரியான தாஸர்களுக்கு மாத்ரமே, நாமிருக்கும் காலமெல்லாம் மற்றவர்களுடைய ப்ரயோஜநத்திற்காகவே இருக்கும் தன்மை ஸம்பவிக்கக்கூடும்.

ஸவி வ...... இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்கு நாம் முதலில் ஒரு த்ருஷ்டாந்தத்தை எடுத்துக் கொள்வோம்

ஶும் கௌநாவமஜெதெ 'ஸாயூஷூமடூ விஶிஷ்டஸ்ய ஷூமக்ஷாய நெ கத்ருத்தாநயொநவடதெ' இதி வெஶியொஜூத்தாநயொZ வி ந வடத இதி ஊடிஷ் மடூஸாய நதுநிஶ்யஃ, ஸ தடூ ஶாஷ்த்ர ஸிஜெ கத்ருத்தாநயெ க்ரியதாடூ। யதா 'ஜொதக்ஷகாஜொ ஜெவஜ

கள்?' 'ஸாதிக்கப்படவேண்டியதான ஸ்வர்க்கத்துடன் ஸம்பந்தப்பட்டிருக்கும் ஒருவன் ஸ்வர்க்கத்தைப் பெறுவதற்கு உபாயமென்று அறியப்படாமல் இருக்கும் யாக க்ரியையின் கர்த்ருத்வத்துடன் ஸம்பந்தம் பெற்றவனாக இருக்க மாட்டானன்றோ? ஆகையினால்தான் நியோஜ்யத்வத்துடன் ஸம்பந்தம் பெற்றிருக்கிறான் என்று நாங்கள் சொல்லுகின்றோம்' என்று சொன்னால், 'அப்படிப் பட்டவனுக்கு நியோஜ்யத்வத்துடன் ஸம்பந்தம் மாத்ரம் எப்படி நேரக்கூடும்?' என்று பதில் கேட்போம். 'அந்த ஸம்பந்தம் நேரவேண்டும் பொருட்டே ச்ருதிவாக்ய பலத்தை அவலம்பித்து கார்யத்திற்கு ஸ்வர்க்கத்தை ஸாதித்துக் கொடுக்கும் தன்மை நம்மால் நிச்சயிக்கப்பட்டு அது வழியாக நியோஜ்யத்வாந்வயம் ஒத்துக்கொள்ளப்படுகின்றது' என்று ஸமாதாநம் சொல்லும் பக்ஷத்தில், 'கர்த்ருத்வாந்வயத்தை ஸாதிப்பதற்கு அம்மாதிரியான நிச்சயத்தை நாங்களும் செய்கின்றோம்' என்பது அந்த ஸமாதாநத்திற்கு ப்ரத்யுத்தரமாகும். தவிரவும், இம்மாதிரி கர்த்ருத்வாந்வயத்தை ஸாதிப்பது உசப்த சாஸ்த்ரக் கொள்கைக்கு ஒத்திருப்பதால், யாகவிஷயமாக வேதாந்திகளாற் செய்யப்படும் ஸ்வர்க்க ஸாதநத்வ நிச்சயம் ஒரு அம்சத்தில் ஏற்றமுள்ளதே. இப்படி நிச்சயம் செய்வது சாஸ்த்ர

ஸாயூஷூமக்விஶிஷ்டஸ்ய... மீமாம்ஸகர்கள் கேட்பதாவது:- 'ஜ்யோதிஷ்டோம யாகம் ஸ்வர்க்கத்திற்கு ஸாதநம் என்பது அறியப்படாமல் இருக்கையில் ஸ்வர்க்கத்தை ஸாத்யமாக உடையவனுக்கு எப்படி அந்த யாக விஷயமான கர்த்ருத்வத்தை அந்வயிக்கலாம்?' என்பதுதான். வேதாந்திகள் கேட்கும் ப்ரதி ப்ரச்னமென்னவென்றால் கர்த்ருத்வம் அந்வயிக்கப் படாமற் போனால் நியோஜ்யத்வம் மாத்ரம் எப்படி அந்வயிக்கும்? என்பது தான். 'ஒரு பலத்தை விரும்புவோன் அந்தப் பலத்திற்கு ஸாதநமென்று அறியப்படாமல் இருக்கும் வ்யாபாரத்தில் ஏவப்பட மாட்டானாகையால், இந்த ஏவுதலைக் கொண்டே நாங்கள் எங்களுடைய கார்யத்திற்கு ஸ்வர்க்கத்தை ஸாதித்துக் கொடுக்கும் தன்மையை நிச்சயிக்கிறோம்' என்று மீமாஸ்கர்கள் ஸமாதாநம் சொன்னால், 'நாங்களும் அந்த ந்யாயத்தைக் கொண்டே யாகத்திற்கு ஸ்வர்க்க ஸாதநத்வத்தை நிச்சயித்துக் கொண்டு 'ஸ்வர்க்க காம' என்னும் பதத்திற்குக் கர்த்ரு விசேஷத்தை ப்ரதிபாதிக்கும் யோக்யதையை ஸ்தாபிக்கிறோம்' என்று வேதாந்திகள் பதில் சொல்லக்கூடுமன்றோ? அதாவது கார்யம் ஸ்வர்க்கத்திற்கு ஸாதநம் என்னும் நிச்சயம் இரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் வேண்டும் என்று சொன்னதாயிற்று. ஆகையால் இதைக் கொண்டு ஒரு கக்ஷி விஷயமாகவும் எவ்வித நிர்ணயமும் செய்ய முடியாது என்பது ஏற்பட்டது. ஆனால் வேதாந்திகள் சொல்வது போலவே

த்³ருஹம் க³ச்சே²த்' இத்யத்ர போ⁴ஜநகாமஸ்ய தே³வத³த்தக்³ருஹ க³மநே கர்த்ருத்வஶ்ரவணாதே³வ ப்ராக³ஜ்ஞாதமபி போ⁴ஜந ஸாத⁴நத்வம் தே³வத³த்தக்³ருஹக³மநஸ்யாவக³ம்யதே। ஏவமத்ராபி। ந க்ரியாந்தரம் ப்ரதி கர்த்ருதயா ஶ்ருதஸ்ய க்ரியாந்தரே கர்த்ருத்வாந்வயோ யுக்த:। "யஜேத" இதி யாக³கர்த்ருதயா ஶ்ருதஸ்யாபி ஸாத்⁴யே கர்த்ருத்வாந்வய: க்ரியதே।

ஸம்மதம் என்பதை ஒரு த்ருஷ்டாந்தத்தாலும் நாம் அறியலாம். 'புஜிக்க வேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்கள் தேவதத்தனுடைய வீட்டிற்குப் போதல் வேண்டும்' என்னும் வாக்யத்தில், புஜிக்கவேண்டுமென்னும் விருப்பமுள்ளவனுக்கு தேவதத்தனுடைய வீட்டுக்குப் போகவேண்டிய வ்யாபாரத்தில் கர்த்ருத்வம் கூறப்பட்டிருக்கிறபடியாலே, அந்த பலத்தைக் கொண்டு இதற்கு முன் அறியப்படாமல் இருந்த 'தேவதத்தன் வீட்டிற்குப் போகும் வ்யாபாரம் போஜநத்திற்கு ஸாதநம்' என்னும் அம்சத்தை நாம் நிச்சயிக்கிறோமன்றோ? அம்மாதிரியே ப்ரக்ருத விஷயத்திலும். நிற்க: ஒரு க்ரியையைக் குறித்து ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள கர்த்ருத்வத்தை மற்றொரு க்ரியையில் கொண்டுபோய் அந்வயிப்பது யுக்தமன்று. மீமாம்ஸகர்கள், 'யஜேத' என்னும் பதத்தாற் சொல்லப்படும் யாக க்ரியையைக் குறித்து ப்ரதிபாதிக்கப்படும் கர்த்ருத்வத்தை 'அறிகின்றது' என்னும் க்ரியையில் அந்வயித்தன்றோ நியோஜ்யத்வ ப்ரதிபாதகத்தை ஸாதிக்கிறார்கள்? அவர்களுடைய கொள்கைப்படி எவன் கார்யத்தில் ஸ்வகீயத்வ புத்தி செய்கின்றானோ அவனே நியோஜ்யனாகின்றான். அதாவது-' புத்தி

வையாகரணர்களும் சொல்லுகிறபடியால், மீமாம்ஸகர்கள் சொல்வது வையாகரணர்களின் சாஸ்த்ரமாகிற சப்த சாஸ்த்ரத்திற்கு விருத்தமாயிருக்கின்றது என்று மீமாம்ஸக மதத்திற்கு ஒரு தூர்ப்பலம் உண்டு என்றே ஒத்துக்கொள்ள வேண்டும்.

நக்ரியாந்தரம் ப்ரதி... இந்த வாக்யத்தால் மீமாம்ஸகர்களின் மதம் சப்த சாஸ்த்ரத்திற்கு எப்படி விருத்தமாகின்றது என்பது உபபாதிக்கப்படுகின்றது. சப்த சாஸ்த்ர ப்ரகாரம் ஒரு க்ரியையைக் குறித்து கர்த்தாவாகக் குறிக்கப்படுமவனை, அந்த க்ரியையை விட்டு மற்றொரு க்ரியைக்குக் கர்த்தாவாக எடுத்துக் கொள்வது சரியன்று. மீமாம்ஸகர்களின் மதம் அப்படிச் சரியல்லாதபடி கர்த்ருத்வாந்வயம் செய்கின்றது என்பது தான் விரோதத்திற்குக் காரணம். அது எப்படி யென்றால்: கீழ்க் குறிக்கப்பட்டுள்ள மூன்று அவஸ்தைகளுள் நியோஜ்யாவஸ்தை என்பதற்குக் கார்யத்தில் ஸ்வகீயத்வ புத்தி செய்கிறவன் என்பது பொருளாகையால், 'யஜேத' என்னும் பதத்தால் யாக க்ரியையின் கர்த்தாவாகக் குறிக்கப்படுகிறவனுக்கு யாக க்ரியையை விட்டு புத்தியின் கர்த்ருத்வம் கல்பிக்கப்பட்டதாகின்ற தன்றோ? ஆகையால் 'யஜேத'

ஸம்புடம் 22] FEBRUARY 1934 [ஸஞ்சிகை 8

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS

ஸ்ரீமுக ஸூ — தைமீ

PUBLISHED BY
SRI VAISHNAVA SIDDHANTA SABHA
MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸர்வமத வினு விடை:—[ஸ்ரீ. உப. வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி V. R. நரஸிம்ஹாசார்யர்] ... 223
2. தர்ம சாஸ்த்ரம்:—
[ப்ரஹ்ம ஸ்ரீ. சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர்] ... 231
3. தீண்டாமை:—[ஸ்ரீ அஹோபில மடத்து வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 236
4. ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்:—
[புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] 246
5. ஸ்ரீ வைஷ்ணவ விபூதி:— ... 248
6. ஸம்பாதகீயம்:— ... 254
7 ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி:— ... 1
8. திவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 17
9. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—
[வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர் ... 361

ஸ்ரீவேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[ஸ்ரீ பாஷ்ய காரரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ தாத்பர்ய தீபிகையை அநுஸரித்து ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட தமிழ் வ்யாக்யாநத்துடன் கூடியது. இப்பொழுது 370 பக்கம் வரை முடிந்திருக்கிறது. இன்னும் 20 அல்லது 30 பக்கங்களுடன் இந்த க்ரந்தம் முடிவு பெறும். இப்பொழுது இதை வாங்குகிறவர்களுக்கு இது குறைந்த விலையாகக் கொடுக்கப்படும்; பாக்கி ஸஞ்சிகைகள் ஒவ்வொரு மாஸத்திலும் அவை ப்ரசுரம் ஆனவுடன் அவர்களுக்குத் தவருது அனுப்பப்படும்] ... ... ரூ 2—0—0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ரூ. 0 6 0

(4) ஸ்ரீ வேதாந்த தீபிகை 19, 20, 21 வது ஸம்புடங்கள். ஸம்புடம் 1-க்கு ... ... ரூ. 3 0 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
கோட்டின் கார்டென்ஸ்,
மாம்பலம், தேனும்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

OFFICE OF THE ... 9-JAN 1935 MADRAS

ஸ்ரீ:

த்ரைவர்ணிகாநாம் தஸாவதாநம்
ஸ்ரீவிகாஸமனாஸவாஸம்வாஸம் உதயமேத |
ஸம்ஸாரஸங்கடஸாவத்தாநதாநேஷு
விஜயஸவேஸரதிரஸ்தூ தேஜநவதி ||

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம்பாதகர்:—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 22.] ஸ்ரீமுக வருஷ தைமீ [ஸஞ்சிகை 8.

ஸ்ரீ:

ஸர்வமத வினு விடை

வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி

V. R. நரஸிம்ஹாசார்யர் எழுதியது.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 7 பக்கம் 203)

பலராம்:—தம்பி! அப்படிப் படித்துவா. இனிச் சொல்லுகிறேன் கேள். இந்த ஆத்மாநந்தம் என்பதைத் தூரத் தள்ளி வைத்து விடு. மனிதர் அநுபவிக்க வேண்டிய புருஷார்த்தம் விஷயஸுகமொன்றே தானென்றும் வைத்துக்கொள். அப்போதும் மனிதர் ஒவ்வொருவரும் தாம் வேண்டும் வரைக்கும் அளவிற்கு விஞ்சி அதனை அநுபவிப்பதற்கு ஆதரவு கொண்டு ப்ரவ்ருத்திப்பாராகில் அது எங்குப் போய் முடியும்? அநர்த்தத்திலே தானே. அவ்வநர்த்தம் வாராமைக்காக நீ என்ன வகையைச் செய்ய நினைப்பாய்? அப்படி அந்யருக்குக் கிடைக்காமற் போகும்படி அளவுகடந்து ஒருவரும் அநுபவிக்கலாகாது. பக்கத்திலுள்ளவர்களும் பகிர்ந்துகொண்டிருக்கும்படி மிதமாகவேதான் ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும் என்று இட்டப்படுத்துவதைத் தானே சரியான உபாயமென்று கருது

15895

[illegible]ய: இனி இப்படி[illegible] மிதமாகவேதான் அநுபவிக்கிற தென்கிற உடன்பாட்டினபடி நடக்கிறதானல், ஆத்மலாபத்திற்கான மார்க்கத்திலும் நீ கூசாமற் செல்லலாம். ஏனெனில், அவ்வழி உனது பரிமிதமான விஷயாநுபவத்தைத் தடுக்கவில்லை; எல்லைக்கு மீறிச் செல்லுவதைத்தான் அது தடுக்கின்றது. ஒரு வரையை மீறிச் சென்றால் ஆத்ம லாபந்தான் கெடுமென்ப தில்லை; ஐஹிக ஸௌக்யமுந்தான் அழிந்து போகும். இவ்வுண்மையை யெண்ணித்தான் 'அநுபவியுங்கள்; ஆனல் பிறருக்கு விட்டுக் கொடுத்தே அநுபவியுங்கள்' என்று (1) ஒரு உபநிஷத்தும் உபதேசித்தது.

இது போலவே, இந்த்ரியங்களைத் தம் வசப்படுத்தி வைத்துக் கொண்டு விஷய போகங்களைக் கூடுமானவரை குறைத்து அநுபவித்தால் தான் தர்மமும் தழைத்தோங்கும்; பொருளுங் கைகூடி வரும். இவ்விரஹஸ்யத்தை நீதிநிபுண ரொருவர் அழகிய முறையிற் கூறுகிறார் பார். அவர் முதன் முதலில் தவத்தினல் தர்மத்தைப் பெறலா மென்றார்; அதன்மேல், தவமென்ற லென்ன வென்றொரு கேள்வி கேட்டுக்கொண்டு, இந்த்ரியங்களை ஜெயித்து நிற்பதே தவமாகு மென்றார். பிறகு 'இந்த்ரிய ஜெய மென்றதின் பொருளென்ன?' என்கிற கேள்வி யெழ, அதற்கு, (2) சாஸ்த்ரம் ஸம்மதியாத போகத்தைக் கனவிலும் நினைக்காம லொழிப்பதும், ஸம்மதித்ததையும் வரைகடந்து செல்லாமற் கூடுமானவரையிற் குறைத்து அநுபவிப்பதும் இந்த்ரிய ஜெயமாகு மென்றார். இப்படி லக்ஷணத்தைக் கூறியதோடு நிற்காமல், (3) அர்த்த சாஸ்த்ரத்தைப் படிப்பதையேனும் இந்த்ரிய ஜெயமென்று வைத்துக்கொள்ளலா மென்றும் ஒரு வார்த்தை சொன்னர். அதெப்படி? ஒரு புத்தகத்தைப் படிப்பது எப்படி இந்த்ரிய ஜெயமாகு மென்றொரு சங்கை தோன்றும். அர்த்த சாஸ்த்ரத்தைக் கற்பதினு லன்றோ மாந்தர்க்கு இந்த்ரியங்கள் நன்றாக வசப்படும்? எனவே இந்த்ரிய ஜெயத்திற்கு அர்த்த சாஸ்த்ரத்தைப் படிப்பது காரணமென்று ஏற்படவில்லையா?

---

(1) [illegible]
[[illegible] உபநிஷத்.]

(2) [illegible] ஜயः—

(3) [illegible]

(4) இனி, காரணத்தைக் கார்யமென்றே குறிப்பது 'தநமே [illegible]' என்பதுபோல இயல்பாகையால் அப்படிச் சொன்னே மென்று அதற்கு ஸமாதானத்தையும் கூறி முடித்தார். தம்பீ! இங்கு இதற்குமேலும் உனக்கொரு சங்கை தோன்றும். 'அர்த்த சாஸ்த்ரத்தைப் படிப்பது இந்த்ரிய ஜெயத்தைக் குறித்துக் காரணமென்றது தானெப்படி? இதற்கும் அதற்கு மென்ன ஸம்பந்த மிருக்கிறது ஒன்றிற் கொன்று கார்யகாரணங்க ளென்பதற்கு?' என்று தோன்றுகிறதல்லவா? இது விஷயத்தில் அந்த நீதி நிபுணர் கொண்டுள்ள கருத்தை விளக்குகின்றேன் கேள். தர்மார்த்த காம மோக்ஷங்கள் எனப்படுகிற நான்கு புருஷார்த்தங்களைப் பற்றியும், தர்மசாஸ்த்ரம் அர்த்த சாஸ்த்ரம் காம சாஸ்த்ரம் மோக்ஷ சாஸ்த்ரம் என்று நான்கு விதமான சாஸ்த்ரமுண்டு. அந்தந்த புருஷார்த்தத்தைப் பெறுவதற்கான உபாயத்தை விசேஷித்துக் கூறுகின்ற சாஸ்த்ரத்தை அந்தந்த சாஸ்த்ரமாக வழங்குகின்றோம். அதன்படி அர்த்த புருஷார்த்தத்தைப் பெறுவதற்கான உபாயத்தைக் காட்டுகிற சாஸ்த்ரமே அர்த்த சாஸ்த்ர மென்றாகிற தல்லவா? இவ்வர்த்த சாஸ்த்ரத்தின் மர்மத்தில் மிக்க நுட்பமான ஒரு ரஹஸ்யமுண்டு. அதென்னவெனில்: தர்ம விருத்தமான வழியில் ஸம்பாதிக்கிற பொருளானது அர்த்த மென்கிற புருஷார்த்தத்திலேயே சேராது; அது கேவலம் அநர்த்தமே தவிர வேறல்ல என்பதேதான். இதன் முடிவு என்னகிற தென்றால், ஒருவன் எத்துணைதான் நிபுணனுக விருந்தாலும், அவன் தனக்கென்று ஸம்பாதிக்கிற ஊதியமானது அவனுடைய மிகப் பரிமிதமான போகத்திற்கே பற்றும் பற்றாததாகத் தான் இருக்கும். அன்றிக்கு, அவன் நினைத்தபடிக் கெல்லாம் அநுபவிக்கக் கூடிய அளவிற்கு அது வளர்ந்து கிடந்தால், அவ்வளவைக் கொண்டே அப்பொருளை அதர்மார்ஜித மென்று கூசாமற் கூறிவிடலாம் என்பதிலேதான் இது முடிவடையும். ஆனல், 'புத்தி வித்தைகளிற் சிறந்த ஒருவர், பெரிய நீதிபதியின் பதவியி லமர்ந்து, மாத மொன்றிற்கு ஐயாயிரம் சம்பளம் பெற்று, இந்திரனுக்குள்ள போகத்தையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறார்' என்று வைத்துக்கொள்வோம். அங்கு அவருடைய ஆர்ஜநத்தில் 'அதர்ம ஸம்பந்த மென்ன விருக்கிறது? அப்பொருள் அவ்வளவும் தர்மார்ஜிதந்தானே' என்று நீ நினைப்பாய். இதற்கு அந்த நீதிகர்த்தாக்கள் சொல்லுவ தென்னவென்றால், 'இல்லை யில்லை; அது பெரும் த்ரோஹச் செயல்' என்பதுதான். ஒரு

---

(4) [illegible] ॥
[[illegible]]

குடும்பத்தில் அண்ணன் தம்பிகள் ஐந்தாறு பெயர்கள் இருப்பதாக
வைத்துக்கொள். அவர்களுள் மூத்தவன் மட்டும் உரிய வயது பெற்று
விட்டான். சரீர பலம் ஆள்கட்டு முதலிய அநுகூலங்கள் அவ
னுக்கு ஏராளமா யுண்டு. மற்றவர்களோ வெனில், வயது வராத சிறு
வர்கள்; முற் கூறிய பலம் ஒன்று மில்லாதவர்கள். மூத்தவன்
தனக்குள்ள பலத்தைக் கொண்டு சிறுவர்களான ஸஹோதரர்களை
அடக்கிவைத்து, அவர்களுக்கு வேண்டிய சரீரபோஷணை கல்வி கற்
பித்தல் முதலான முக்ய செலவிற்குக்கூடப் பொருள் கொடாமல்,
தகப்பன் தேடிவைத்த த்ரவியத்தை யெல்லாம் தன் கைவசத்தில்
வைத்துக்கொண்டு, மனம்போன படிக்கெல்லாம் தன்னுடைய போ
கத்திற்கு மட்டும் தாராளமாய்ச் செலவிடுகிறான். அது தர்மமா ?
த்ரோஹமா ? த்ரோஹந் தானே. அப்படியாகில் இதுவும் அதைப்
போன்ற ஒன்றுதான். அவன் சரீரபலம் ஆள்பலம் இவற்றை வைத்
துக்கொண்டு ஹடஞ் செய்கிறான். இவன் புத்தி பலம் வித்யா பலம்
இவற்றை வைத்துக்கொண்டு அந்யாயஞ் செய்கிறான். மொத்தத்தில்
இரண்டிற்கும் வழியில் சிறிதளவு ஏதோ பேதமுள்ள தென்றாலும்,
ஸஹோதர த்ரோஹ மென்னுமிடத்தில் இரண்டும் வாசியற்றது
தானென்பதில் ஸந்தேஹ மில்லையே.

கோபால்:—அண்ணா ! இவ்வுதாஹரணம் பொருத்தமுள்ள
தாகத் தோன்றவில்லையே. முதலாவது, அங்கு அப்பொருள் முழு
வதும் அந்த ஸஹோதரர்களைப் பெற்றவரான பிதா ஸம்பாதித்ததே
யன்றிப் புத்ரன் ஸம்பாதித்த தல்ல. இங்கோவெனில், இவர் (நீதிபதி)
தமது திறமையைக் கொண்டுதானே ஸம்பாதித்தது. மேலும்
அவர்களெல்லோரும் ஒரு மாதா பிதாக்களுக்குப் பிறந்த ஸஹோ
தரர்கள். இங்கு அப்படியல்லவே. அயலார் தானே. இனி இவ்
விரண்டையும் எப்படி ஒப்பிடலாம் ?

பலராம்:—தம்பீ ! நீ அது அதர்மமென்பதை ஆக்ஷேபிக்க வில்
லையே. த்ரோஹந் தானென்று ஒப்புக்கொள்கிறா யல்லவா ? இனி
இதுவும் அதேபோன்ற த்ரோஹந்தா னென்பதைத் தெளிவு படுத்து
கிறேன் பார்.

ஸர்வ ப்ராணிகளுக்கும் பிதாவான கர்த்தர், இப்பூமண்டலத்
தைத் தாமே படைத்து, இதனுள் தமது குமாரர்களான ஜீவர்களைக்
குடியேற்றுவாராய், அவர்களுடைய ஸுகவாழ்க்கைக்கு இன்றி
யமையாதனவான நீர் நிலம் தீ கால் ஆதிய பூதங்களையும் அவற்றின்
விகாரமான க்ருஹாராம க்ஷேத்ர வாபீ கூப தடாக ஸுவர்ண மணி

தந தாந்யாதி போக்ய வஸ்துக்களையும் முன்னதாகவே வேண்டு மள
விற்குக் கணக்கிட்டுச் சீராக ஸ்ருஷ்டித்து நிறைத்து வைத்து, பிறகு
ப்ராணி வர்க்கங்களையும் இந்த மங்கள க்ருஹத்தில் ப்ரவேசம்
செய்வித்து, இங்குள்ள போகங்களைப் பாங்காய்ப் பகிர்ந்துகொண்டு
ஆயிரங் காலம் ஸுகமாய்ப் புஜித்துக்கொண்டு வாழுங்களென்று
ஆசீர்வதித்து மறைந்தருளினார். ஆகவே, எக்காரணத்தினாலேனும்
இப்பொருள் எந்தக் பெருங்கையில் அதிகம் ஏறிக் குவிந்தாலும்
அதுவும் பித்ரு தநமேயன்றி அவனுடைய தல்ல. அப்படியிருக்க,
திரட்டுவதற்குத் திறனில்லாததனால் பொருளின்றித் தவிக்கிற பக்
கத்திலுள்ள ஸஹோதர ப்ரஜைக்கு அதைக் கொடுத்து உதவவேண்
டியது ஸம்பாதகருக்கு ந்யாயமும் கடமையுமாயிருக்க, அப்படிச்
செய்யாமல் வயிறு தாழிகளாகத் தாமே விழுங்கி விட்டுத் தம்பிமார்
களைத் தவிக்க விடுவது த்ரோஹமல்ல வென்றால் வேறென்ன ?
எனவே ஆனவரையில் ஸம்பாதிக்க வேண்டியது அவச்யந்தான்
ஆனாலும், அதற்காக அத்தனையுந் தானே அநுபவித்து ஒழித்து
விடுகிற தென்பது கூடாது. கூடுமானவரை, தனது போகத்தை
மட்டுப்படுத்திக்கொண்டு, தீநர்களான ஸஹோதர ப்ரஜைகளுக்கு
உதவுவது தான் தர்மம். இந்தப் பொதுவுடைமைத் தர்மத்தின்
தத்வத்தை ப்ருஹதாரண்யக உபநிஷத்து முதலான ஜ்ஞாந நூல்
களும் விளங்கப் போதித்திருக்கின்றன என்று கூடச் சில மேதாவி
கள் கருதுகின்றனர். தம்பீ ! அவற்றையெல்லா மிங்கு விவரிக்கிற
தென்றால் விரிவடையு மென்று விடுத்தேன்.

கோபால்:—அண்ணா ! பொதுவுடைமைக் கொள்கை என்பதும்
ஒரு தர்மமானால் எவருடைய பொருளிலும் எவருக்கும் பாத்ய
முண்டே. இனி ஒருவர் தாந்யத்தைத் திரட்டி ஆயிரக் கணக்காகச்
சேர் கட்டிவைத்திருக்க, வேறு சிலர் வயிற்றுக்குக் கூழில்லாமல்
வறுமையால் வருந்துவானேன் ? வேண்டியமட்டும் ஏராளமாக அள்
ளிக்கொண்டு செல்லலாமே. அள்ளிக் கொள்ளலாம் என்றாலோ,
அப்புறம் தன்னது பிறரது திருட்டுப் புரட்டு, என்கிற பேச்சுக் கெல்
லா மிடமேயில்லை யாதலின், உலகவ்யவஸ்தையே குலைந்து போகாதா?

பலராம்:—தம்பீ ! உடமையில் பாத்ய முண்டென்பதில் ஸந்
தேஹமேயில்லை தான். ஆனாலும் கடைமையையும் செய்தாக வேண்டு
மென்பதை மட்டும் மறந்து விடலாகாது. கடமையைச் செலுத்
தாதவர்கள் பாத்யத்தைக் கொண்டாடுவதற்கு அர்ஹரல்ல ரென்
பது நீதியின் ரஹஸ்யம். க்ஷேத்ரத்தை உழுது பயிரிட்டு உதவிய குடி

யானவர்கள், வாரமென்ற பெயரை வைத்து, சேருக்குப் போகு முன்னேகூட நெல்லைப் பிரித்துக்கொள்ள வில்லையா? அது அவர்களுக்குள்ள பாத்யத்தின்படி ஏற்பட்ட பங்குதானே? இதே ந்யாயந்தான் முதலாளி தொழிலாளி போன்ற எல்லா விஷயத்திலும் என்பதையும் உணரவேண்டும் என்று பொதுவுடைமைக் கொள்கையினர் இக்கேள்விக்கு லகுவாக ஒரு ஸமாதானத்தைக் கூறி விடுகின்றனர். தம்பீ! ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வெகு தூரம் வந்து விட்டோம். இனி உத்தேசமான இடத்திற்குச் செல்வோம். அலௌகிகமான ஆத்மலாபத்தை உத்தேசிக்காமல் இஹலோக வாழ்க்கையையே பெரிதென்று கருதுகிற (1) அர்த்த காமபரர்கள் கூட அவ்வர்த்த காமங்களையும் மாந்தர்கள் கூடுமான வரைக்கும் குறைத்தே அநுபவிப்பதாயிருந்தாலன்றி அநர்த்தமாய் முடியு மென்றும், ஆகவே இந்த்ரியங்களை அவை போம் வழியில் விட்டு விடாமல் தம்வசத்தில் வைத்துக்கொண்டு அநுமதிக்கப் பட்டிருக்கும் போகத்தைக் கூடக் குறைத்தே வைத்துக்கொண்டும், கூடாதென்று தடுக்கப்பட்டிருப்பதைக் கனவிலும் நினைக்காதபடி தள்ளிவைத்தும் வர்த்திக்கக்கடவரென்றும் நீதி நிபுணர்களும் வற்புறுத்துகின்றனர். இதனால் ஆத்ம லாபத்தை அபேக்ஷிக்காத விஷய ருசியுள்ளவரும் அவ்விஷய போகத்தை மிகவும் மட்டுப் படுத்தியேதான் ஸ்வீகரித்துக்கொள்ளவேண்டு மென்றதாகிறது. அத்யாத்ம சாஸ்த்ரமோவெனில், ஆத்ம லாபத்திற்கான மார்க்கத்தில் நடப்பவர்களான முமுக்ஷுக்களும் வேண்டுமானால் மிகப் பரிமிதமான ஸ்வல்ப அளவிற்கு விஷயத்திலும் ஸம்பந்தப்படலாம். அதனால் ஆத்மலாபம் அழிந்து விடாது என்று சற்றேனும் அநுமதிக்கிறது. இதனால் முமுக்ஷுக்கள் விஷயத்தை அடியோடு த்யஜித்தே தீரவேண்டு மென்கிற நிர்ப்பந்தமில்லை யென்றதாகிறது. ஆகவே, இனி அதை நம்பி இதையு மிழந்து விட்டால் ஒருகால்

---

(1) இங்கு அர்த்த மென்றது பொன் வெள்ளிகளினால் செய்த நாணயங்களை மட்டுமல்ல. மற்றென்ன வெனில்: மனிதர் இன்புறுவதற்கு ஸாதநமான புஷ்பம் சந்தனம் முத்து ரத்னம் புத்ரர் களத்ரம் முதலான எல்லாப் பொருளையுமேதான். இப்படியே காமமென்பதும் ஸ்த்ரீ புருஷர்களுக்குப் பரஸ்பரச் சேர்க்கையினால் உண்டாகும் ஒரு உணர்ச்சியை மட்டுமல்ல. மற்றுமென்னவெனில்: புத்ரரை மடிமீது வைத்து ஆநந்திப்பதும் மித்ரரைத் தழுவி ஸுகிப்பதும் இன்னும் மருக் சந்தந வஸ்த்ராபரணாதிகளினால் ஆநந்திப்பதும் இவை போன்ற எல்லாவற்றையுமேதான். எனவே போகத்திற்குரிய வஸ்துக்களை அர்த்தமென்றும், அவற்றின் போகத்தில் தோன்று முணர்வைக் காமமென்றும் சொல்லியதாயிற்று.

இரண்டு மில்லாமற் போய்விடுமோ வென்று நீ சங்கித்ததற்கு இடமில்லையன்றோ? எனவே, இவ்வேத சாஸ்த்ரமானது ப்ரமாண வகுப்பிற்குள் ப்ராதாந்யத்தைப் பெற்று விளங்குகிற தென்பது முற்றவும் பொருத்தமானதே யென்று தெளிவாயாக. தம்பீ! ஆளவந்தாரென்று புகழ்ப் பெயர் பெற்றவரான ஸ்ரீமத் யாமுநாசார்யர், இவ்விஷயத்தையெல்லாந் திரட்டி ஒரு சிறிய கதையாக வருணித்தருளியிருக்கிறார், அதைச் சொல்லுகிறேன் கேள்.

நகர வாஸிகளான சைவ நண்பர் சிலர் இருந்தனர். அவர்கள் மத்ஸ்யம் என்கிற ஜந்துவைக் கண்டது மில்லை கேட்டது மில்லை. ஒருபொழுது அவர்கள் அருகிலுள்ள ஒரு க்ராமத்திற்குப் போக வேண்டி வழி நடந்தார்கள். நடுவே ஒரு பெரிய ஏரி யிருக்கக் கண்டனர். அதன் வசீகரமான தோற்றத்தில் வியப்புற்றவர்களான அந்த நாகரிகர்கள் அவ்வேரி கரையில் சற்று நேரங் கூடி உட்கார்ந்து கொண்டு, அதன் ஜலஸம்ருத்தி முதலான சோபையில் மன மீடுபட்டு அவ்வழகைக் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் ஜலத்திற்குள் ஏதோவொன்று (மீன்) துள்ளிப் புரண்டு செல்லுகிறதுபோல அவர்கட்குத் தோன்றிற்று. அது இன்ன தென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவ்விளவெயில் வேளையில் அப்பொருள் பளீரென்று மின்னிக்கொண்டு சென்றதை மட்டும் நன்றாய்ப் பார்த்து விட்டார்கள். அது என்னவாயிருக்கு மென்று நெடு நேரம் ஆலோசித்தார்கள். 'இப்பொழுதும் நடு நடுவே அதுவேதானோ அது போன்ற வேறொன்றோ பளிச் பளிச்சென்று கண்ணிற் படுகின்றதே. ஆனால் ஊன்றிப் பார்க்கக் கூடியபடி நிலையாக நிற்காமல் அது ஒரு நொடிப் பொழுதில் மறைந்து விடுகிறதே. அது ஒருகால் ஏதேனுமொரு ப்ராணியா யிருக்குமோ? ஜலத்தில் ஸஞ்சரிப்பது அதன் ஸ்வபாவமோ? அல்லது ஜலமேதான் அப்படி யலைந்தபோது பொன் போன்ற இளவெயிலைத் தன்னுள் வாங்கிக்கொண்டு அப்படிப் பளீரென்று மின்னிற்றோ? அன்றி வேறேதேனுமா?' என்று புலவிதமாய் யோசித்துப் பார்த்தார்கள். ஒருவித முடிவிற்கும் வர முடியவில்லை. முன்னிலுங் குழப்ப மதிகமாகி விட்டது. சுற்றி முற்றப் பார்த்தார்கள். தற்செயலாய் அங்கொரு குடிசைவாயிலில் ஒருவன் (செம்படவன்) உட்கார்ந்திருக்கக் கண்டார்கள். அவனண்டை சென்று, 'ஐய! இப்படி யெங்களுக்குத் தோன்றி மறைகின்ற இப்பொருள் என்னவென்பதை விவரமாய்ச் சொல்' என்றார்கள். அது தான் மீனென்பது இறகொடுகூடிய ஒரு ப்ராணி யென்றானவன். 'ஆ! அப்படியு மொரு

ப்ராணியுண்டா ?" வென்று அவர்கள் சற்று மலேத்தார்கள். 'ஆகா உண்டு' என்று சொல்லி விட்டு, அவன் தன் பையிலிருந்து ஒன்றை வெளியி லெடுத்து 'இதோ பாருங்கள்' என்றுகையை நீட்டிக் காட்டினான். பார்த்தார்கள் அவர்கள். இப்போது அரைவாசி ஸம்சயந் தீர்ந்தது. 'ஆனாலும் அது இன்னும் ப்ரகாசமா யிருந்ததே. தென்றற் காற்றில் தேர்க்கொடி யாடுவதுபோல அழகாய் வளைந்து வளைந்து அசைந்து நீந்திச் சென்றதே!' என்று ஸந்தேஹப் பட்டார்கள். அவன் உடனே எழுந்து, அவர்கள் கையில் ஒரு வலையைக் கொடுத்து ஜலத்தில் வீசி யெறிந்து திருப்பி யிழுங்க ளென்றான். அவர்களும் அப்படியே செய்து பார்த்தனர். அதனுள் முன்பார்த்தது போன்ற ப்ராணியை அதன் முழு உருவத்தோடு கண்கூடாகக் கண்டு விட்டார்கள். இனி அவர்கட்கு அதைப்பற்றிய ஸம்சயமே தீர்ந்து விட்டது.

(1) அதுபோலவே நமது தேஹமாகிற ஏரிக்குள் அஹமஹமென்று சைதந்ய மயமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற இவ்வாத்மாவை இந்த ப்ரத்யக்ஷத்தினாலேயே முழுவது மறிந்து கொள்ள மாட்டாத யாம், அநுமாநத்தி லிறங்கி, அதுவும் நிலை கொடாமற் போகவே, ஆப்தவாக்யமான உபநிஷத்தின் உபதேசத்தை நாடுகின்றோம். அதிலிருந்து தத்வத்தை உள்ளபடி கேட்டுத் தெரிந்து கொள்கிறோ மென்றாலும், கேவலம் சொல்லிக் கேட்பதேயான அந்த சாப்த ஜ்ஞாந மாத்ரத்தால் பூர்ண த்ருப்தியைப் பெறாதவராய், அவ்வுபநிஷத்தின் உபதேசத்தின்படியே யோகத்தை யங்கீகரித்து, அதனுதவியால் சங்கா களகமற்ற ஆத்மாபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைப் பெற்று க்ருதார்த்தராகின்றோம்.

---

(1) [illegible]

[illegible]

தம்பி! இந்த வர்ணனையினால் அறியக்கிடக்கிற அர்த்தத்தின் ஸாரமென்ன? நாம் சும்மாவிருந்தாலும் இவ்வாத்ம ஸ்வரூபம் அரை குறையாகவேனுந் தோன்றியே தீருகின்றமையால், இதனை முற்றவும் நன்றாகத் தெரிந்து கொள்வதற்குச் சரியானபடி வழி தேடவேண்டு மென்பது தானே. இதனாலும், இவ்வாத்மா வென்பது சற்றேனுந் தோன்றாமல் ஒளிந்தே கிடக்கிறதென்று வைத்துக் கொண்டாலுங் கூட, அதைப்பற்றிய யதார்த்த ஜ்ஞாந மின்றி மாந்தர்க்குற்ற மஹா புருஷார்த்தம் ஸித்திப்பதற்கு வேறு வழியே யில்லை யாதலால், அவ்வறிவைத் தட்டியெழுப்பியாவது புகட்ட வேண்டியது அத்யவச்யமாகையாலும், மக்களுக்குத் தாயனைய இவ்வுபநிஷத் தேவி தம் மைந்தர்களான மாந்தர்களுக்கு ஆத்ம ஞானப் பாலமுதை அகங்குளிர ஊட்டி வளர்க்கின்றா ரென்க. தம்பி! வேத சாஸ்த்ரத்தைப்பற்றி முதன் முதலில் முக்யமாய்ச் சொல்ல வேண்டுமென்று யான் நினைத்த சில விஷயத்தைச் சொல்லி விட்டேன். இனி நீ வினவிய கேள்விகளுக்கு முறையே விடை கூறுகிறேன். அவற்றுள் முன்னதான இவ்வைதிக ஸித்தாந்தத்தின்படி ஜீவயதார்த்தத்தின் ஸ்வரூப ஸ்வபாவாதிக ளெப்படியென்ற கேள்விக்கே இப்போது விவரமாக விடை தருகின்றேன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

தர்ம சாஸ்த்ரம்

(தொடர்ச்சி, ஸஞ்சிகை 5 பக்கம் 138)

சிலர் தாம் ஆசாரமாக இருப்பதாக நினைத்துக்கொண்டு, தமது பக்கத்தில் வரும் அறிவில்லாத குழந்தை பசு முதலியவைகளைக் கூட கோபத்தினால் வெருட்டுவர். அப்படிச் செய்வது ஆசாரமாகாது. மாதவீயம் எனும் க்ரந்தத்தில் ஆசார சப்தத்தின் அர்த்தம்

"[illegible]"

[சிஷ்டர்களுக்குச் சம்மதமான தயை தாக்ஷிண்யம் முதலியவைகளுடன் கூடிய உயர்ந்த நடத்தையே ஆசாரமெனப்படும்] என்று கூறப்பட்டுள்ளது.

மஹாவீரனான ஸ்ரீராமனிடத்தில் ஹநுமான் லங்கையை வர்ணிக்குங்காலத்தில்,

“ அக்நிஹோத்ராஶ்ச வேதாஶ்ச ராக்ஷஸாநாம் க்ருஹே க்ருஹே ”

[ராக்ஷஸர்களின் ஒவ்வொரு வீடுகளிலும் அக்நியின் உபாஸநமும் வேதங்களும் நடைபெறுகின்றன] என்றார். இப்படி ஆரம்பித்த ஹநுமான், பரம தர்மிஷ்டனான ஸ்ரீராகவன் ராக்ஷஸர்களை வதம் செய்யமாட்டார் என்று பயங்கொண்டு,

“தயா ஸத்யம் ச ஶௌசம் ச ராக்ஷஸாநாம் ந வித்யதே ॥

[தயை ஸத்யம் சரீர சுத்தி மநஸ் சுத்தி இவைகள் ராக்ஷஸர்களுக்கு இல்லை.] என்று உடனே அங்கிருந்த பெரிய தோஷத்தையும் கூறினார். இதனால் ராக்ஷஸர்களிடத்தில் எவ்வளவு தர்மங்கள் இருந்தபோதிலும், அவர்களிடம் ஆசாரம் இல்லாமையால், அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை என்று தெரிகிறது. இவ் விஷயத்தையே மநுவும்,

“ அநப்யாஸேந வேதாநாமாசாரஸ்ய ச வர்ஜநாத் ।
ஆலஸ்யாதந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி ॥”

[ப்ராம்ஹணர்கள் வேதங்களைக் கற்காததனாலும் ஆசாரத்தை விட்டதாலும் தமக்குச்சக்தி இருக்கும் பொழுது அவச்யம் செய்யவேண்டிய கார்யத்தில் உத்ஸாஹம் இல்லாததாலும் (அதாவது: ஆலஸ்யமாயிருப்பதாலும்,) கெட்ட வஸ்துக்களைப் புஜிப்பதனாலும், யமன் அவர்களைக் கொல்வதற்கு இச்சிக்கிறான்] என்கிறார். “ ப்ராஹ்மணர்கள் ” என்று குறிப்பட்டதால், அந்யர்கள், வேதம் ஆசாரம் முதலியவைகள் அற்றவர்களா யிருந்து நீண்டகாலம் ஆயுள் அடைந்திருப்பதால் சாஸ்த்ரம் சொல்லியது தவறல்ல. முற்காலத்தில் மஹர்ஷிகள் நல்ல ஆசாரத்தை அநுஷ்டித்து வந்ததனாலேயே நீண்டகாலம் த்ருடமாக வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது, ப்ராஹ்மணர்களில் சிலர் ஆசாரம் முதலியன இல்லாமலே நீண்டகாலம் வாழ்ந்து வந்தாலும், அவர்கள் த்ருட காத்ரம் ஆரோக்யம் மநஸ் ஸந்தோஷம் இவை அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆனால் ஆசாரம் முதலிய நன்னடத்தைகள் உள்ள சில ஸாதுக்களுக்கும் கஷ்டங்கள் ஸம்பவிக்கின்றனவே என்று கேட்கலாம். அவ்வாறு அவர்கள் கஷ்டப்படுவதாக நமக்குத் தோற்றினாலும், ஸத் கார்யம் செய்வதில் உள்ள உத்ஸாஹத்தினால், அவர்களுக்குக் கஷ்டத்தினால் ஏற்படும் துக்கம் தெரிகிறதில்லை யென்பதே அதற்குத் தக்க ஸமாதாநம். ஆகவே மஹான்கள் செய்யும் கார்யமே ஸதாசாரமாகும். இவ்விஷயம் ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும்,

“ ஸதாசாரவதா பும்ஸா ஜிதௌ லோகாவுபாவபி ।
ஸாதவஃ க்ஷீணதோஷாஃ ஸச்சப்தஃ ஸாதுவாசகஃ ॥
தேஷாமாசரணம் யத்து ஸதாசாரஸ் ஸ உச்யதே ॥”

[நல்ல ஆசாரத்தைச் செய்கின்ற மனிதர்களால் இஹ பர லோகங்கள் இரண்டும் ஜயிக்கப்பட்டு விட்டன. அவர்கள் தோஷ மற்றவர்களாகவும் ஸாதுக்களாகவும் ஆகின்றனர்] என்று கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் சிலர், நமது முன்னோர்கள் செய்து வந்த ஆசாரத்துக்கு விருத்தமாகத் தமக்குத் தோன்றினவாறு ஆசாரத்தைக் கல்பிக் கின்றார்களே ! இது என்ன பேதமை !

“யஸ்மிந் தேஶே ய ஆசாரஃ பாரம்பர்யக்ரமாகதஃ ।
ஶ்ருதிஸ்ம்ருத்யவிரோதேந ஸதாசாரஸ் ஸ உச்யதே ॥”

[எந்தத் தேசத்தில் எந்த ஆசாரமானது முன்னோர்கள் நாள் முதல் வேதம் ஸ்ம்ருதி இவைகளுக்கு விரோத மில்லாமல் வருகின்றதோ, அதுவே ஸதாசாரம்] என்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் ஸ்ம்ருதி இவைகளுக்கு விரோத மில்லாதது ஸதாசார மென்று கூறியதால், அவைகளுக்கு விருததமான ஆசாரம் சில பெரியோரிடம் இருக்கும் பக்ஷத்தில் அதைக் கூசாமல் அவர்கள் மாற்றிக்கொள்ளவேண்டும். பெரியோரிடத்தில் தோஷங்கள் இருக்குமோ வெனில் இருக்கலாமெனறு வேதம் கூறுகிறது. வேதத்தைச் சிஷ்யனுக்கு முழுதும் உபதேசித்து, அவனை வீட்டிற்கு அனுப்பும் காலத்தில், குரு சில உபதேசங்களைச் செய்து அனுப்ப வேண்டுமென்று வேதம் கூறுமிடத்தில், ஸத்யம் முதலியவைகளைக் கைக்கொள்ளும்படி உபதேசித்து,

“ யாந்யநவத்யாநி கர்மாணி । தாநி ஸேவிதவ்யாநி ।
நோ இதராணி । யாந்யஸ்மாகஂ ஸுசரிதாநி । தாநி
த்வயோபாஸ்யாநி । நோ இதராணி ।

[வேத சாஸ்த்ரங்களால் எந்தக்கர்மாக்கள் தோஷமற்றவை யென்று கூறப்பட்டிருக்கின்றனவோ, அவைகளைச் செய்யவேண்டும். அப்படி யில்லாதவைகளைச் செய்யக்கூடாது. குருக்களான எங்களிடத்தில் எந்த நல்ல நடத்தைகள் இருக்கின்றனவோ, அவைகளைச் செய்யவேண்டும். கெட்ட கார்யங்கள் எங்களிடம் இருந்தால், அவைகளைச் செய்யக் கூடாது] என்றும் கூறுகிறது. பெரியோர்களுக்கு ஜந்மாந்தரீயமான பாப வசத்தால் வேத விருத்தமான கர்மாக்கள் இருக்கலாம். தம்மிடமுள்ள தோஷங்களைத்தாமே சொல்வதால் தான் அவர்கள் பெரியோர் எனப்படுகின்றனர். இப்போதுள்ள நாகரிகர்களிற் சிலர், தாம் ஏதோ காரணத்தால், தெரிந்தோ தெரியாமலோ, தமது வாழ்க்கையில் தப்பிதமான கார்யத்தைச் செய்துவிட்டு, அதை நல்லதென்று ஸ்தாபிக்கவும் பார்க்கிறார்கள். அன்றியும், உலகமெங்கும் அதையே செய்யும்படியும் தூண்டுகிறார்கள். அவர்கள் பெரியோராவது எங்ஙனம் ?

ஆபஸ்தம்பரும்

“𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌧𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 𑌸𑌾𑌹𑌸𑌂 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇। 𑌤𑌦𑌨𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌃 𑌸𑍀𑌦𑌤𑍍𑌯𑌵𑌰𑌃।”

[முற்காலத்துப் பெரியோர்கள் பிடிவாதத்தால் தர்மத்துக்கு மாறாகச் சிலவற்றைச் செய்துவந்தனர். அவர்களுக்கு அதிகமான தேஜஸ் இருந்தமையால் தோஷங்கள் அவர்களைப் பாதிக்கவில்லை. அதைப் பார்த்துத் தேஜஸ் இல்லாத கீழ்ப்பட்டவன் அவர்கள் செய்தவற்றைச் செய்வானே யாகில், அவன் நாசமடைந்து விடுகிறான்] என்று சொல்லுகிறார். அவ்வாறே மநுவும், பெரியாரிடம் தோஷம் தங்காதென்கிறார்.

“𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌾𑌨𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 ।
𑌦𑍋𑌷𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌨 𑌦𑍋𑌷𑌾𑌯 𑌵𑌹𑍍𑌨𑍇𑌰𑌿𑌵 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍॥”

[முற்காலத்துப் பெரியோர்களுடைய சரீரங்கள் இந்த்ரியங்கள் முதலியவை தேஜோமயமாகவே இருந்தமையால், அவர்கள் தோஷ ஸம்பந்த மற்றவர்). உலகில் மிக்க பலவானான ஒருவன் மேல் பந்து எறியப்பட்டால், அது அவனுக்கு வ்யதையைக் கொடுப்பதில்லை. பல மில்லாத ஒருவன்மேல் அப்பந்து விழுமாகில், அவன் அவ்வடி

தாங்காமல் மயங்கி விழுவான். அதுபோல, சக்தி ரூபமான தேஜஸ்ஸுள்ள ஒருவனுக்குத் தோஷத்தால் ஏற்பட்ட பாபம் ஒன்றும் செய்ய முடியாது. அந்தத் தேஜஸ்ஸில்லாதவன் தவறான கார்யத்தைச் செய்வானே யாகில், தோஷத்தின் பயனான பாபத்தை அநுபவிக்கிறான்.

ஸ்ரீமத் பாகவதத்தில், சுகாசார்யாள் பரீக்ஷித்துக்கு, ஸ்ரீ கோபாலன் கோபிகைகளுடன் ராஸக்ரீடை அநுக்ரஹித்த சரித்ரத்தைச் சொல்லுங் காலத்தில், மஹாராஜாவானவர் சுகரைப் பார்த்து ‘ஸ்வாமிந்! ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா, தர்மத்தை ஸ்தாபித்து அதர்மத்தை அழிப்பதற்கு அவதாரம் செய்தவரன்றோ ? அப்படிப்பட்ட ஈச்வரன் பிறர் மனைவிகளான கோபிகளைத் தொட்டது அதர்மந்தானே. அதன் கருத்தைச் சொல்லவேண்டும்’ என்று ப்ரார்த்தித்தார். அதற்குச் சுகர் பதில் அளிக்கிறார்:—

“𑌧𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌾𑌹𑌸𑌮𑍍 ।
𑌤𑍇𑌜𑍀𑌯𑌸𑌾𑌂 𑌨 𑌦𑍋𑌷𑌾𑌯 𑌵𑌹𑍍𑌨𑍇𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍁𑌜𑍋 𑌯𑌥𑌾 ॥
𑌨𑍈𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌜𑍍𑌜𑌾𑌤𑍁 𑌮𑌨𑌸𑌾𑌪𑌿 𑌹𑍍𑌯𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍𑌮𑍌𑌢𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌽𑌬𑍍𑌧𑌿𑌜𑌂 𑌵𑌿𑌷𑌮𑍍 ॥
𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌚𑌃 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑌥𑍈𑌵𑌾𑌚𑌰𑌿𑌤𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌵𑌚𑍋𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥
𑌕𑍁𑌶𑌲𑌾𑌚𑌰𑌿𑌤𑍇𑌨𑍈𑌷𑌾𑌮𑌿𑌹 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍇𑌣 𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑍋 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥”

[தேஹாபிமாந மற்ற பெரியோர்கள், சில தர்மத்துக்கு மாறாக நடந்திருப்பதைக் கண்டிருக்கிறோம். தேஜஸ்விகளான அவர்களுக்கு அது தோஷமாகாது. எப்படி நெருப்பானது எல்லா வஸ்துக்களையும் தஹித்துவிடுமோ, அப்படியே அவர்களிடத்துள்ள தோஷமும் எரிந்துவிடும். அப்படி அவர்கள் செய்த கார்யத்தை, சக்தியற்ற மனிதன் மனத்தினால் கூட நினைக்கக் கூடாது. மூடத்தனத்தினால் அப்படி ஒருவன் செய்வானாகில், பரம சிவன் விஷத்தைச் சாப்பிட்டமாதிரி நானும் விஷயத்தைச் சாப்பிடுவேன் என்று சொல்வதையொக்கும். அதாவது அவன் நாசமடைந்து விடுவான். ஈச்வரர்களுடைய வார்த்தையையே நமது அநுஷ்டானத்திற்கு ப்ரமாண

மாகக் கொள்ளவேண்டும். அவர்களுடைய சில ஆசாரங்களையும் வார்த்தையுடன் கூடிய செய்கையையும் புத்திமான்கள் அநுஷ்டிக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல கார்யம் செய்வதனாலும் அடைய வேண்டிய நன்மை ஒன்றுமில்லை; கெட்ட கார்யம் செய்வதனாலும் அடையவேண்டிய தீமை ஒன்றுமில்லை. ஏனென்றால், அவர்கள் அஹங்கார மற்றவர்களாகையால், அவர்களுக்கு இரண்டின் ஸம்பந்தமும் இல்லை. ஸ்ரீ க்ருஷ்ணன் கோபிகைகளுக்கும் அவர்கள் பதிகளுக்கும் மற்றுமுள்ள எல்லோருக்கும், புத்தி முதலிய வற்றிற்கு ஸாக்ஷியாக உள்ளே இருப்பவன்; வெளியில் தொட்டதால் தோஷமுள்ளவனாக ஆகமாட்டான்] என்று பதில் சொன்னார்.

சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர்

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

தீண்டாமை

[ஸ்ரீ அஹோபில மடத்து வித்வத் புத்தங்கோட்டகம்
[ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.

தத்காலம் தீண்டாமையை ஒழித்துவிட ப்ரயத்நப்படுகிறவர்களுட் சிலர், தீண்டாமையை ஒழித்து விடுவது சாஸ்த்ர ஸித்தமென்று சொல்லுகிற ஸநாதநிகளை ஏமாற்றிவிடும் அபிப்ராயத்தினால் ப்ரஹ்ம ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்களால் எழுதப்பட்ட "சிவார்க்கமணி தீபிகை என்னும் க்ரந்தத்திலுள்ள

"[illegible]"

இத்யாதியான ச்ருதி வாக்யமானது தீண்டாத ஜாதியாருடன் மற்றை ஜாதி ஜநங்கள் எல்லாரும் இஷ்டப்படி கலந்துகொள்ள வேண்டுமென்று விதித்திருப்பதால் அப்படி எல்லாரும் ஒருவரோடொருவர் கலந்துகொள்வது சாஸ்த்ர ஸம்மத விஷயமென்று ஆங்காங்கு உபந்யஸித்து சாஸ்த்ர தாத்பர்ய மறியாதவர்களை மோஹிக்கச் செய்கிறார்கள். ஸ்ரீ பகவத் கீதை முதல் அத்யாயத்தில்

"ஸங்கரோ நரகாயைவ",

"பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதக க்ரியா:"

[கலக்கக் கூடாத ஜாதியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டால் அப்படிக் கலந்து கொண்டவர்கள் நரகத்திற்கே போய் ஹிம்ஸைகளை அநுபவிக்க வேண்டும். இப்படிக் கலந்து கொள்ளுகிறவர்கள் செய்யும் ச்ராத்தம் முதலிய கர்மங்கள் பயனில்லாமல் வீணாகப் போய் விடுகின்றன] என்று சொல்லப் பட்டிருக்கிறது. அன்றியும் ஸ்வர்க்க லோகத்தில் ஸுகத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் இந்தப் பாபிகளுடைய பித்ருக்களுங் கூட, ஸாங்கர்யத்தினால் அந்த ஸுகங்களை இழந்து கீழே விழுந்து விடுகிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஜாதிக் கலப்பு கொடிய பாபமாகச் சொல்லப் பட்டிருப்பதாலும், எல்லா மஹர்ஷிகளும் சண்டாள ஸஹவாஸாதிகளைக் கொடிய பாபமாகவே எழுதிவைத் திருப்பதாலும் ,இவ் விபரீதமான உபதேசத்தைக் கேட்டுச் சாஸ்த்ரம் அறியாதவர்கள் மஹா நரகத்திற்கு ஆளாகாதபடி செய்வதே மஹத்தான புண்ய கார்ய மாகையினால், இந்த ச்ருதியின் வாஸ்தவமான அர்த்தத்தைச் சாஸ்த்ர ஸம்மதமான முறையில் தெரிவிக்கிறோம்.

இந்த ச்ருதி வாக்யமானது இந்த உலகத்தில் தத்காலம் படிக்கப்படும் வேதத்தில் ஓரிடத்திலும் காணப் படாததனாலும், தீக்ஷிதருக்கு முன்பும் பின்பு முள்ள ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யர் ஆநந்த தீர்த்தாசார்யர் முதலான மதாசார்ய க்ரந்தங்களிலும் இது காணப் படாததனாலும் இதற்கு முன் பின் ப்ரகரணம் தெரியாததனால்

1. இது இன்ன அபிப்ராயத்தினால் இப்படிச் சொல்லியிருக்கிறதென்று நம்மால் நிச்சயிக்க முடியாததனால் இதை எழுதின தீக்ஷிதருடைய அபிப்ராயத்தைக் கொண்டும்,

2. மற்றும் ஸந்தேஹிக்கப்பட்ட ச்ருதிவாக்யங்களின் அர்த்தம் இன்னது தான் என்று நிர்ணயிப்பதற்காகவே ஏற்பட்ட பூர்வ மீமாம்ஸை என்கிற சாஸ்த்ரத்தைக் கொண்டும்

3. "[illegible]
[illegible]"

என்கிற மநு ஸ்ம்ருதிவாக்யத்தின் படியே வேதங்களின் வ்யாக்யாந ரூபங்களான இதிஹாஸ புராணங்களைக் கொண்டும்தான் நாம் இதனுடைய அபிப்பிராயம் இன்னதென்பதை நிச்சயிக்க வேண்டும். இம் மூன்று காரணங்களுக்குள் முதலாவதான தீக்ஷிதருடைய அபிப்பிராயத்தை விசாரிப்போம்.

உலகில், க்ரந்தம் எழுதுவோர், தமக்கு இஷ்டமான ஓர் அர்த்த விசேஷத்தை எழுதி, அதை மற்றவர்களும் ப்ராமாணிகமான அர்த்தமென்று அங்கீகரிப்பதற்காகத் தாம் எழுதின அர்த்தத்தைச் சொல்லுகிற ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களை அங்கு எழுதுவது வழக்கம். அந்த முறையில் தீக்ஷிதரும் சிவார்க்கமணி தீபிகையில்,

"அத ஏவ ஶிவஶப்தஸ்ய ஸக்ருதுச்சாரணேந ஸகல துரித க்ஷய:"

என்கிற வாக்யத்தினால் "ஶிவ" என்னும் சப்தமானது ஒரு தடவை சொல்லப்பட்ட மாத்ரத்தினால் ஸர்வ பாபத்தையும் போக்கி விடுகிறதென்றும் சொல்லி, இந்த விஷயத்தில் ப்ரமாணமாகவே "அத ஏவ" என்கிற இந்த ச்ருதியையும்,

"யத் த்வ்யக்ஷரம் நாம கிரேரிதம் ந்ருணாம்
ஸக்ருத் ப்ரஸங்காதகமாசு ஹந்தி தத்"

என்கிற புராண வாக்யத்தையும் இங்கு எழுதியிருக்கிறார். தீக்ஷிதருடைய ப்ரதிஜ்ஞா வாக்யத்தினால் சிவநாமம் சொன்னவனுக்கு ஸர்வ பாபங்களும் போய் விடுகின்றன என்னும் அர்த்தமே தான் வ்யக்தமாக ஏற்படுகிறது. மேல் இந்த விஷயத்துக்கு ப்ரமாணமாகக் காட்டின புராண வாக்யமும் அதே அர்த்தத்தைச் சொல்லுகிறபடியால் அது ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்ட அர்த்தத்தில் ப்ரமாணமாகலாம். இவ்விரண்டு வாக்யங்களுக்கும் நடுவிலிருக்கிற இந்த ச்ருதி வாக்யமும் இவருடைய ப்ரதிஜ்ஞாதார்த்தத்துக்கு ப்ரமாணமாக அவராலேயே காட்டப்பட்டதாக இருப்பதால், இந்த ச்ருதிக்கும் சிவநாமம் பாபத்தைப் போக்கிவிடுகிறதென்னும் அர்த்தத்திலே தான் தாத்பர்யம் சொல்லவேண்டுமே யல்லது சண்டாளனோடு ஸஹவாஸத்தை விதிப்பதில் இதற்குத் தாத்பர்யமென்று சொன்னால், இது முன்பின் வாக்யங்களுக்குப் பொருந்தாதாகையினால் அஸங்கதமாகும்.

ஆனால் இந்த ச்ருதி வாக்யத்திலிருக்கும் சப்தங்களுக்கு ஸ்வாரஸ்யஸித்தமான 'சிவ' என்று சொன்ன மனிதன் சண்டாளனானாலும் அவனோடு பேசவேண்டும், அவனோடு வஸிக்க வேண்டும், அவனோடு சாப்பிடவேண்டுமென்கிற அர்த்தம் தீக்ஷிதருக்கு இஷ்டமானதல்ல. இந்த ச்ருதியி லிருக்கிற சப்தங்களினால் சொல்லப்படாத 'சிவநாமோச்சாரணம் பாபத்தைப் போக்கிவிடும் என்கிற அர்த்தந்தான் இந்த ச்ருதிக்குத் தாத்பர்யம்' என்பதே தீக்ஷிதருடைய அபிப்ராயமென்பதை அவரை நேரில் கண்டு கேட்டு அறிந்து கொள்ளமுடியாத நாம் எப்படி நிச்சயிக்கக்கூடுமென்று கேட்கலாம். தீக்ஷிதர் இந்த ச்ருதிக்குச் சப்த ஸ்வாரஸ்ய ஸித்தமான அர்த்தத்தை அங்கீகரித்திருந்தால் அது இங்கிருக்கும் முன்பின் ப்ரகரணத்திற்குப் பொருந்தாதாகையினாலும், தாம் ப்ரதிஜ்ஞை பண்ணின அர்த்தத்திற்கு அநுகுணமில்லாத அர்த்தத்தைச் சொல்லுகிற ச்ருதியை அவர் இங்கு ப்ரமாணமாக எழுதினாரென்பது அநுசிதமாகையினாலும், சப்தத்தினால் சொல்லப்படும் அர்த்தமானது ப்ரகரணத்திற்குப் பொருந்தாத பக்ஷத்தில் வ்யங்க்யமான அர்த்தத்தையே சப்தத்திற்கு அங்கீகரிப்பது "விஷம் புங்க்ஷ்வ" என்பது முதலிய இடங்களில் ப்ரஸித்தமாகையினாலும், இந்த ச்ருதியின் முன்பின் ப்ரகரணம் தெரிந்த அவர், அதை இங்கு உபயோகப்படுத்தியிருப்பதால், ஷை ச்ருதியானது வேதத்திலும் 'சிவநாமம் பாபங்களைப் போக்கிவிடும்' என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்திலேயே தான் படிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையினால்: தீக்ஷிதரின் அபிப்ராயத்தைப் பற்றின வரையில் இந்த ச்ருதியின் அர்த்தமானது, 'சிவநாமம் பாபங்களைப் போக்குகிறதென்று நாம மஹிமையை ப்ரசம்ஸிப்பது தான்' என்று நாம் நிச்சயிக்கிறோம்.

இப்படி இந்த ச்ருதியை எழுதின தீக்ஷிதரின் அபிப்ராயப்படி, இந்த ச்ருதி, 'சண்டாளர்களோடு மற்றவர்கள் ஸர்வ ஸஹவாஸத்தை விதிக்க வந்ததல்ல; சிவநாமத்தை ப்ரசம்ஸிக்க வந்தது; ஆகையினால் தீண்டாதவர்களோடு ஸஹவாஸம் செய்வதற்கு இது ப்ரமாணமாகாது' என்று முடிந்தது.

நிற்க: இரண்டாவது ப்ரகரணமாகக் கீழே குறிப்பிடப்பட்ட பூர்வ மீமாம்ஸையைக்கொண்டு இந்த ச்ருதியின் அர்த்தத்தை விசாரிப்போம்.

ஒருவனுக்குத் தெரியாத விஷயத்தைத் தெரிவிப்பதும், ஒரு கார்யத்தில் ப்ரவர்த்திக்காதவனை அதில் ப்ரவர்த்திக்கச் செய்வதும்

விதி எனப்படும். பூர்வ மீமாம்ஸையில் லிங் லோட் தவ்ய என்னும் ப்ரத்யய முள்ள வாக்யங்கள் அர்த்த விசேஷத்தை விதிக்கிறதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. மேற் கூறிய ப்ரத்யயங்களையுடைய வாக்யங்களில் யச்சப்த மிருந்தாலும், அல்லது 'வா' என்னும் பத மிருந்தாலும், அந்த வாக்யமானது ஓரர்த்தத்தையும் விதிக்க யோக்யதையுடைய தல்ல. இந்த விஷயம் பூர்வ மீமாம்ஸை அத். 2' பா .2. அதி. 3-ல் பாட்ட தீபிகையில்,

"ய ஏவம் வித்வாந் பௌர்ணமாஸீம் யஜதே"

என்கிற வாக்யமானது கர்ம விதாயகமாகக் கூடுமோ வென்று சங்கித்துக்கொண்டு ஸமாதாநம் சொல்லுமிடத்தில்,

"ததாபி, வித்வத்வாக்யேந கர்மவிதி: யஜ்ஞாயுதீவ ந விதி
ஶக்தி ப்ராப்திவத்தேந விதிவந்நஸ்ய வர்ணத்வேந ஸாதாரண:"

என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இதற்குப் பாதகமாக 'யத்ராஶ்ரேய' இத்யாதி ஸ்தலங்களில் யச்சப்த மிருக்கும் பொழுதே அங்கு விதாயகத்வம் சொல்லியிருப்ப துண்டு. அங்கு ஸர்வதா அப்ராப்த விஷயமாகையினால் அங்கு விதி சொல்லப்படவேண்டு மென்று இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் சொல்லப்பட்டிருப்பதால் இதற்கு விரோத மில்லை. ப்ரக்ருதத்தில்:

"அபி வா யஶ்சாண்டால: ஶிவ இதி வாசம்
வதேத் தேந ஸஹ ஸம்வதேத் தேந
ஸஹ ஸம்வஸேத் தேந ஸஹ ஸம்புஞ்ஜீத"

என்று இந்த வாக்யத்தில்

"தேந ஸஹ ஸம்வதேத்"

முதலான மூன்றுக்குள் ஒன்று விதாயகம். 'அபிவா' என்னும் கீழ் வாக்யமானது, இந்த 'தேந' என்கிற தச்சப்தத்தின் அர்த்தத்தைத் தெரிவிக்க வந்ததாகையால் இதற்குச் சேஷமானது; அது விதாயக மாகாது. தச்சப்த கடிதமான மூன்று வாக்யங்களுக்குள் ஏதோ ஒன்று தான் விதாயக மாகலாம். இல்லாவிட்டால் வாக்ய பேத ப்ரஸங்கம் வரும். அது எப்படியானாலும் 'தேந' என்கிற தச்சப்தத்தினால் சொல்லப்படுகிற,

"அபி வா யஶ்சாண்டால:"

என்னும் வாக்யத்தில், ய: என்கிற யச்சப்த மிருப்பதாலும், இதர ராக ப்ராப்தமாய் அப்ராப்த விஷயமல்ல வாகையாலும் இந்த வாக்யம் விதாயக மாகமாட்டாது.

அத். 10, பா. 8, ஜர்த்திலயவாக்வதிகரணத்தில் 'வா' சப்த மிருப்பதால் இந்த வாக்யம் விதாயகமாக மாட்டாதென்று சொல்லியிருப்பதாலும், இங்கு "அபி வா" என்று 'வா' சப்தம் படிக்கப் பட்டிருப்பதாலும், இந்த வாக்யம் தீண்டாதவர்களோடு ஸஹவாஸத்தையாவது மற்றும் எந்த விஷயத்தையாவது விதிப்பதற்கு யோக்யமானதல்ல. ஆகையால் இந்த வாக்யம் தீண்டாதவர்களோடு ஸஹவாஸத்தை விதிக்கிற தென்று சிலர் சொல்வது மீமாம்ஸா சாஸ்த்ரத்துக்கு விருத்த மென்பது நிச்சயம். ஆகவே இந்த ச்ருதியானது சிவ நாமத்தை ப்ரசம்ஸிக்கிற அர்த்தவாத மாகிறது. ஸம்வாத ஸஹவாஸ ஸஹபோஜநங்களுக்கு அநர்ஹனான மனிதன் கூடச் சிவநாமத்தைச் சொன்ன மாத்ரத்தினால் அவைகளுக்கு யோக்ய னாகிறான் என்பது இதன் பொருள். இதுபோன்ற அர்த்த வாதங்களை,

"சண்டாலோ'பி வ்ருத்தஸ்தம் தம் தேவா ப்ராஹ்மணம் விது: ।
ப்ராஹ்மணோ'பி ய: பூஜாம் நாஸ்தி தம் தேவா: ஶூத்ரம் விது: ॥"

"அபிவா சாதாம் ஹமேத்ய நமேத்ய தேவதாரிகாம்"

"ஶதம் ஶிவோ த்ருஷ்ட்வா ஶதம் கோ ஶதஸஹஸ்ரகம் ।
ஶதம் ஸஹஸ்ர ஸம்ப்ராபாநம் ஏகாதஶ்ய ஶிவபோஜநம் ॥"

முதலிய இடங்களில் ப்ரஸித்தமாகக் காணலாம். இவ் வசனங்களிலிருக்கும் சப்தங்களை மட்டும் கவனித்து, அர்த்தங்களை உள்ளபடி ஆதரித்து விட்டால், ஒழுங்காக இருக்கும் சண்டாளனுக்கு ப்ராஹ்மணன் பெண் கொடுத்துக் கொள்வதும் தாயைப் புணர்வதும் கோமாம்ஸம் தின்பதும் ப்ரஹ்மஹத்யை செய்வதும் கள் குடிப்பதும் ப்ராஹ்மணனுக்குத் தர்மமாகவே முடியுமன்றோ? இவை யெல்லாம் ஸர்வ சாஸ்த்ர நிஷித்த மாகையினால், இவைகளை யெல்லாம் அர்த்த வாதங்களென்று சாஸ்த்ரங்களில் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையினால் கேவலம் விதி சப்தங்கள் இருப்பனவற்றை மாத்ரம் கொண்டு, அஸம்பாவிதமான அர்த்தத்தை விதிக்க சாஸ்த்ரம் இடம் கொடுப்பதில்லை. ஆகையால் இந்த வாக்யத்தில் ய: என்றும் வா என்றும் இரண்டு விதி ப்ரதிபந்தகங்கள் இருப்பதால், இது ஓர்த்தத்தையும் விதிக்கமாட்டா தென்பது தான் சாஸ்த்ர தாத்பர்யம்.

நிற்க: இந்த வாக்யத்தை, ஓர் அர்த்தத்தை விதிப்பதற்கு யோக்யதை உள்ளதாகவே நாம் ஒப்புக்கொண்டாலும், இந்த வாக்யம் தீண்டாத ஜாதியரோடு ப்ராஹ்மணன் முதலான ஜாதிகள் ஸஹவாஸத்தைச் செய்ய வேண்டுமென்கிற அர்த்தத்தை விதிக்க முடியாதென்பதையும் வ்யக்தமாகக் காட்டுகிறோம். வேதத்திலிருக்கும் சப்தங்களுக்குள் இம்மாதிரியான சப்தங்களுக்கு இன்னபடிதான் அர்த்தம் செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற்கென்றே ஏற்பட்டது மீமாம்ஸா சாஸ்த்ரம். அந்தச் சாஸ்த்ரத்தில் விதி வாக்யங்களை மூன்று விதங்களாகவே அங்கீகரித்திருக்கிறார்கள். அவையாவன:— அபூர்வவிதி, நியமவிதி, பரிஸங்க்யை விதி என்பன. இவற்றுள்: அபூர்வ விதியாவது

‘ விதிரத்யந்தமப்ராப்தௌ ’

என்கிறபடியே வேறு எந்தக் காரணத்தாலாவது ப்ராப்தமல்லாத விஷயத்தை விதிப்பது.

‘ வ்ரீஹீந் ப்ரோக்ஷதி ’

[நெல்லை ஜலத்தினால் ப்ரோக்ஷிக்க வேண்டும்]. யாகத்தில் புரோடாசத்திற்கு வேண்டிய மாவுக்காக அரிசி வேண்டுமானால், அந்த அரிசிக்காக வேண்டிய நெல்லை முதலில் ப்ரோக்ஷணம் பண்ண வேண்டுமென்று இந்த வாக்யம் விதிக்கிறது. இதை இந்த வாக்யம் விதிக்காவிட்டால், நெல்லை ஜலத்தினால் ப்ரோக்ஷித்துத் தான் பிறகு குற்றவேண்டுமென்பது ஒருவருக்கும் வேறு காரணத்தினால் தெரிந்துகொள்ள முடியாது. ஆகையால் இது அப்ராப்தமான விஷயத்தை விதிப்பதால் இதற்கு அபூர்வவிதி என்று பெயர். ப்ரக்ருதத்தில் சண்டாளனோடு ஸஹவாஸத்தை விதிக்கிறதாக நம்மால் உத்தேசிக்கப்படுகிற இந்த ‘அபிவா’ என்கிற வாக்யமானது இந்த அபூர்வவிதியாகமாட்டாது. ஏனென்றால், உலகத்தில் ஒருவன் மற்றொருவனோடு அர்த்தம் காமம் முதலிய காரணங்களினால் ஸஹவாஸத்தை விரும்புவது ஸம்பாவிதமாகையினால் இது அத்யந்தம் அப்ராப்த விஷயமாகாதல்லவா? தேச க்ஷேமம் என்கிற காரணத்தினால் அன்றோ தற்காலம் நமது நாகரிகர் தீண்டாத ஸஹவாஸத்தை விரும்பிப் போருவது? ஆகையினால் இது ராக ப்ராப்தமாகையினால் அபூர்வ விதியல்ல. இப்படி அபூர்வ விதி ஆகாவிட்டாலும்,

‘ நியம: பாக்ஷிகே ஸதி ’

என்கிறபடியே உலக்கையினாலும், யந்த்ரம் முதலிய வேறு உபாயத்தினாலும் அரிசியாக்கக் கூடிய நெல்லை,

‘ வ்ரீஹீநவஹந்தி ’

உலக்கையினாலேயே குற்றி அரிசியாக்க வேண்டுமென்று விதிப்பது போல, சிவ நாமம் சொன்ன சண்டாளனோடு போஜநாந்தமான ஸஹவாஸத்தைப் பண்ணியே தீரவேண்டுமென்று இந்த வாக்யம் விதிக்கக் கூடாதா என்று சங்கிக்கலாம். இது ஸம்பாவிதமல்ல. இந்த ச்ருதியில் “ யச்சிவேத்யுச்சரேத் ” என்று சண்டாளனானாலும் எவனாவது ஒரு மனிதன் ‘ சிவ ’ என்று சொன்னால் அவனோடு இன்னான் ஸஹவாஸத்தைச் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லாததனால் எல்லா மனிதர்களுக்கும் அவனோடு ஸஹவாஸத்தைச் செய்ய வேண்டுமென்று சொன்னதாக முடிந்தது. தவிர: இங்கு பலம் சொல்லப்படாததனால் இது நித்ய விதியாகவும் முடியும். ஆகவே, சிவ நாமம் சொன்ன சண்டாள பர்யந்தமான ஸர்வ மனிதர்களோடு ஸர்வ மனிதர்களும் போஜநாந்தமான ஸஹவாஸத்தைப் பண்ணியே தீரவேண்டுமென்று விதித்ததாகிறபடியால், அந்ய ஸாபேக்ஷமான இந்தக் கார்யத்தை ஒருவனாலும் செய்யமுடியாதாகையால், அசக்யமான கார்யத்தைச் சாஸ்த்ரம் விதிக்கக் கூடாது. நியமவிதியில் அயோக்ய வ்யவச்சேதமே ப்ரயோஜநமாகையால் சிவநாமம் சொன்ன சண்டாள பர்யந்த எல்லா மனிதரோடும் மற்றும் எல்லா மனிதர்களும் போஜநாந்த ஸஹவாஸத்தைப் பண்ணியே தீரவேண்டுமென்று அர்த்தமாகுமேயல்லது, இஷ்டமிருந்தால் பண்ணலாமென்று அர்த்தம் சொல்ல முடியாது. ஷை ஸஹவாஸத்தைப் பண்ணாத பொழுது ஸர்வ மனிதர்களுக்கும் ப்ராயச்சித்தம் பண்ண வேண்டிவரும். ஆகையால் ஒரு நாளும் ஒருவனாலும் செய்ய முடியாத கார்யத்தைச் சாஸ்த்ரம் விதிக்கக் கூடாது. இப்படி ஒரு விதி ஸம்பவித்தாலும்,

“அஸ்வர்க்யம் லோகவித்விஷ்டம் தர்மமப்யாசரேந்ந து”

என்கிறபடியே பண்டித லோக வித்விஷ்டமான இக் கார்யம் அநுஷ்டிக்கத் தகுந்தது மல்ல. ஆகையினால் இது நியம விதியாகாது.

“தத்ர சாந்யத்ர ச ப்ராப்தௌ பரிஸங்க்யா விதீயதே”

என்கிறபடியே இது பரிஸங்க்யா விதியாகலாமென்பதும் சரியல்ல. அப்பொழுது,

“ பஞ்ச பஞ்சநகா பக்ஷ்யா: ”

என்கிற இடத்தில் பஞ்சேதர பஞ்சநக பக்ஷணத்தை நிஷேதிப்பது போல் ‘சிவ’ என்று சொல்லாதவனோடு ஸஹவாஸம் செய்யக் கூடா

தென்று சென்னதாக முடியுமே யல்லது, 'சிவ' என்று சொன்ன சண்டாள பர்யந்த மனிதனோடு ஸஹவாஸத்தைச் செய்ய வேண்டு மென்று இந்த வாக்யம் விதித்ததாகாது. இதனால் நமது நாகரிகர் களுக்கு அபேக்ஷிதமான சண்டாள ஸஹவாஸத்திற்கு அநுகூலம் ஒன்று மில்லை. ஆகையினால் மீமாம்ஸா சாஸ்த்ரத்தை அநுஸரித்து இந்த ச்ருதியின் அர்த்தத்தை விசாரித்துப் பார்த்தால், இந்த வாக்யத்தில் ய: வா என்னும் சப்தங்கள் இருப்பதால் இந்த வாக்யம் ஓரர்த்தத்திற்கும் விதாயகமாகா தென்பது முக்ய மென்றும், அப்படியே விதாயகமாக ஒப்புக் கொண்டாலும் கீழே குறிப்பிடப் பட்ட ஒரு விதியிலும் சேராததனாலும், இது தீண்டாதவர்களோடு ஸஹவாஸத்தை விதிக்க யோக்ய மல்லவென்று நிச்சயிக்கப்படுகிறது.

“இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்”

என்கிற மநுவின்படியே, நமக்கு ஸந்தேஹிக்கக் கூடிய வேத வாக்யத்தின் அர்த்தத்தை ஸர்வஜ்ஞர்களான மஹர்ஷிகளின் அபிப்ராயத்தைக் கொண்டு தீர்மானிக்க வேண்டியதே உசிதமாகையால், இந்த விஷயத்தில் மஹர்ஷிகளினால் சொல்லப்படும் இதிஹாஸ புராணம் தர்ம சாஸ்த்ரங்களின் அர்த்தத்தை விசாரித்துப் பார்க்க வேண்டியது அவச்யமாகும்.

இந்த விஷயத்தில் தர்ம சாஸ்த்ரங்களும் இதிஹாஸங்களும் புராணங்களும் சண்டாளர்களோடு மற்றவர்கள் ஒரு விதமான ஸஹவாஸத்தையும் செய்யக்கூடா தென்றும், அப்படிச் செய்தால் ப்ராயச்சித்தங்களை ஸஹவாஸத்துக்குத் தக்கபடி செய்து கொள்ள வேண்டுமென்றும், ஆங்காங்கு விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால், நமது மஹர்ஷிகளின் அபிப்ராயப்படி இந்த ச்ருதிக்குச் சண்டாளர்களோடு ஸஹவாஸத்தைச் செய்யலா மென்பது அர்த்த மல்லவென்பதும் வ்யக்த மாகிறது.

ஆகையால், இந்த ச்ருதியை எழுதின தீக்ஷிதர் அபிப்ராயப் படிக்கும், ச்ருதிக்கு அர்த்தம் எழுதுகிற மீமாம்ஸா சாஸ்த்ரப் படிக்கும், ச்ருதிகளுக்கு வ்யாக்யாநமான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களை எழுதின ஸர்வஜ்ஞர்களான மஹர்ஷிகளின் அபிப்ராயப் படிக்கும், இந்த ச்ருதியானது தீண்டாத ஜாதியர்களோடு மற்றவர்கள் ஸஹவாஸம் செய்வதற்கு ப்ரமாணமாகா தென்பதை வ்யக்தமாகக் காட்டினோம். மற்றும் இந்த விஷயத்தின் விஸ்தாரத்தை

இதற்கென்று எழுதப்பட்டுள்ள க்ரந்தத்தில் பரக்கக் காணலாம். மஹர்ஷிகளின் அபிப்ராயமான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களின் விஷயங்கள் விஸ்தாரமாகக் காட்டப்படவேண்டிய தாகையினால் அவற்றைத் தனித்து எழுதுகிறோம்.

நிற்க. இந்த ச்ருதியானது சிவநாமம் சொன்ன சண்டாளனோடு ஸஹவாஸத்தைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறதாகவே வைத்துக்கொண்டாலும், அத்ரி ஸ்ம்ருதி முதலிய தர்ம சாஸ்த்ரங்களில்,

“[illegible]
[illegible]”
(370 ச்லோ)

என்றும்,

“[illegible]
[illegible]”
(380 ச்லோ)

என்றும், ப்ராஹ்மண ஜாதியிலேயே கெட்டுப்போயிருப்பவனுக்குச் சண்டாளன் என்று பெயரிட்டிருப்பதாலும், ஜாதி சண்டாளனோடு ஸஹவாஸத்தைத் தர்ம சாஸ்த்ரங்களில் நிஷேதித்திருப்பதால், நிஷேதிக்கப்பட்ட விஷயத்தில் விதி சாஸ்த்ரமானது ப்ரவர்த்திக்கா தாதலால் இங்குச் சொல்லப்பட்ட கர்ம சண்டாளன் சிவ நாமத்தைச் சொன்னால் அது அவனுடைய பாபங்களுக்கு ப்ராயச்சித்தமாகி அதனால் சுத்தனான அவனோடு மற்றைப் பந்துக்களுக்கு ஸஹவாஸத்தை விதிக்கிற தென்கை ஸம்பாவிதமாகலாம். இது, சிவநாம மஹிமையை எழுதின ப்ரகரணத்தில் இந்த ச்ருதியை எழுதின தீக்ஷிதர் அபிப்ராயத்துக்கு மிகவும் பொருத்தமானது. சிவ நாமம் சொன்ன மாத்ரத்தினால் ஜாதி சண்டாளனுக்குச் சண்டாள ஜாதி போய் உயர்ந்த ஜாதி வந்துவிடுவதால், அவனோடு மற்ற உயர்ந்த ஜாதி மனிதன் ஸஹவாஸம் செய்யலாமென்று இந்த ச்ருதிக்கு அபிப்ராயமென்று சொல்வது சரியல்ல.

பாரதத்தில், உமா மஹேச்வர ஸம்வாதத்தில், 'ஒரு மனிதனுக்கு ஒரே ஜந்மத்தில் பிறந்த ஜாதிபோய் வேறு ஜாதி உண்டாகக் கூடுமோ?' என்று பார்வதி பரமசிவனைக் கேட்டதற்கு, 'ஒரு மனிதனுக்கு ஒரே ஜந்மத்தில் எவ்வளவு தவம் புரிந்தாலும் பிறந்த ஜாதி போய் வேறு ஜாதி உண்டாகாது' என்று பரமசிவன் பதில் சொல்லி,

விச்வாமித்திராதிகளுடைய ஜாதி வேறுபாட்டுக்குக் காரணத்தையும் அங்கே விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால், சிவ நாமம் சொன்னதைக் கொண்டு தீண்டாதவனுக்கு ஜாதி மாறாது. இதனால்,

"தீக்ஷாப்ரவேசமாத்ரேண ப்ராஹ்மணோ பவதி க்ஷணாத்"

என்கிற காலாம்ருத வசநமும் அர்த்தவாத மென்று சொல்லப்பட்டதாகிறது. இந்த விஷயத்தைச் சிவார்க்கமணி தீபிகையில் பாசுபதாதிகரணத்தில் அப்பய்ய தீக்ஷிதர், "லாகுட பாசுபத காபாலிக காளமுக தந்த்ரங்கள் வேத விருத்தங்கள்; ஆகையால் வேதங்களை ஆதரிப்பவர்களுக்கு அவை ப்ராமணங்களாக மாட்டா" என்று எழுதி யிருக்கிறார். மற்றும் சிலர், தீண்டாத ஜாதிகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் பண்ணிவிட்டால் அவர்களுக்குத் தீண்டாத ஜாதி போய்விடுகிற தென்று சொல்வதும் பாரதாதிகளுக்கு விருத்தம். இது அசாஸ்த்ரீய மென்பதை ஆளவந்தார் ஆகம ப்ராமாண்யத்தில் பரக்க நிரூபித்திருக்கிறார். வராக புராண ப்ரஸித்தமான நம்பாடுவானுடைய அநுஷ்டாநத்திற்கும் இது விருத்த மென்பதை அங்குக் காணலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

ஸ்ரீ தேசிக திவ்யஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்

[ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்,
ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தாந பண்டிதர்]

சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டுள்ள வ்யாஸத்தில் விட்டுப்போன ஒரு அம்சம் இவ்விடத்தில் எழுதப்படுகின்றது. 'அஹிர்புத்ந்ய' என்னும் சப்தத்தில் ரேபம் ('ர' என்னும் எழுத்து) எப்படி வந்திருக்கின்றது என்பதை விசாரித்தல் வேண்டும். பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளுள் ஒன்றாகிய இந்தப் பெயர்கொண்ட ஸம்ஹிதை 'அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை' என்றே எல்லாராலும் வ்யவஹரிக்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீதேசிகனுடைய ஸுதர்சநாஷ்டகத்திலும்,

"ஸஜந அஹிர்புத்ந்யோ ரக்ஷித"

என்று ரேபாந்தமாகவே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்விதம் ப்ரயோகங்கள் இருப்பதால், இங்கு 'ஸு' என்னும் ப்ரத்யயத்திற்கு 'அலுக்' வந்திருக்க வேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். வ்யாகரண சாஸ்த்ரத்தில் இவ்விடத்தில் அலுக்கை விதிக்கிற ஸூத்ரமில்லாததால், அப்படி நினைப்பது சரியன்று. அலுக் வராவிட்டால் கீழே குறிக்கப்பட்டுள்ள ப்ரயோகங்களில் ரேபம் எப்படி வந்திருக்கின்றது என்று சிலர் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு இரண்டு விதமாக ஸமாதானம் சொல்லக்கூடும்.

(1) ஸ்ரீஸஹஸ்ர நாமத்தில் "அஹஸ்ஸம்வர்த்தகோ வஹ்நிரநில:" என்னும் ஒரே திருநாமத்தில் "அஹர்" என்று ரேபத்துடன் எப்படி ப்ரயோகம் ஏற்பட்டிருக்கலாம் என்பதைச் சங்கித்துக் கொண்டு, ஸ்ரீபட்டர், தமது பாஷ்யத்தில், 'அஹர்' என்று ரேபாந்தமான அவ்யயம் ஸ்வராதிகணத்தில் படிக்கப்பட்டதாகச் சொல்லவேண்டும் என்று பாஷித்திருக்கிறார். அது போலவே, 'அஹிர்' என்னும் ரேபாந்தமான சப்தமும் ப்ருஷோதராதி முதலான கணங்களில் படிக்கப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

(2) 'சப்த கல்ப த்ருமம்' என்னும் க்ரந்தத்தில் பின் வருமாறு ஒரு பங்க்தி காணப்படுகின்றது.

'அஹிர்ப்ருத்ந்யோ ருத்ர:, ஏகாதசருத்ராந்தர்கதருத்ரவிசேஷ: 'அஹேர்புத்நஸ்ச அஹிர்புத்ந்ய:' இதி ஹரிவம்சே'

இதில் 'அஹி' சப்தம் ரேபாந்தமில்லாமல் இகாராந்தமாகவே படிக்கப்பட்டு ஹரிவம்ச ப்ரயோகமும் அதற்கு ப்ரமாணமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. நிற்க, வாமந சிவராம ஆப்தே என்பவரால் எழுதப்பட்டுள்ள டிக்ஷனரியிலும் இந்தச் சப்தமானது 'அஹிர்புத்ந:' 'அஹிர்ப்ருத்ந்ய:' 'அஹிர்புத்ந்ய:' 'அஹிர்புத்ந்ய:' என்று நாலு விதமாக ப்ரயோகிக்கப்படுவதாய் எழுதப்பட்டிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது இந்தச் சப்தம் கீழ்க்கூறியுள்ள ப்ரயோகங்களில், பூர்வம் இகாராந்தமாகவே ப்ரயோகம் செய்யப்பட்டு பச்சாத் எழுத்து மாறி ரேபாந்தமாகப் பாடம் வந்திருக்கின்றது என்றும் சொல்லலாம்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையை நாகர லிபியில் இயஸாடிகல் ஸொஸைடிக்காரர்கள் அச்சுப் பதிப்பித்திருக்கிறார்கள். அந்தப் பதிப்புக்கு வித்வாந் ஸ்ரீ. உப. ராமாநுஜாசார்யர் ஒரு உபோத்காதம் எழுதி யிருக்கிறார். அந்த உபோத்காதத்தில்

‘‘அஹிரேவ பு³த்⁴நியோஜாயத’’

‘‘அஹயே பு³த்⁴நியாய ப்ரோஷ்ட²பதே³ப்⁴ய:’’

என்று இரண்டு வாக்யங்கள் உதாஹரிக்கப் பட்டிருக்கின்றன. அவ்விடத்திலும் ‘அஹி’ சப்தம் இகாராந்தமாகவே காணப்படுகிறபடியால், ‘அஹிர்’ என்கிற பாடம் உரு மாறியதென்றே ஸ்ரீ. உப. ராமாநுஜாசார்யரும் அபிப்ராயப்படுகிறதாக அறிகின்றோம்.

இவைகளைத் தவிர்த்து வேறு எவ்வித ஸமாதாநம் சொன்னாலும், ‘அலுக்’ வந்திருப்பதாகச் சொல்வதற்கு ஒருவித ப்ரமாணமுமில்லையாகையால், ‘அஹி: பு³த்⁴ந்ய:’ என்பதும் ‘ விஶ்வே தே³வா:’ என்பதும் ஸமாஸம் என்னும் பெயரை அடையாத தனித் தனி சப்தங்களென்றே முடிகிறபடியினால், ஸ்ரீதேசிகனுக்கு இங்கு அலுக் வந்திருப்பதாக ப்ரமமுண்டாக ப்ரஸக்தியே இல்லை.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ விபூதி

(1)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்³ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி வைபவம்

[1379—1459]

இந்த ஸ்வாமியின் திருவவதாரம் கல்யப்தம் 4480-வதான ஸித்தார்த்தி வர்ஷம் புரட்டாசி மாஸம் சுக்ல பக்ஷம் பஞ்சமி ஜயேஷ்டா நக்ஷத்ரம் கூடின வியாழக்கிழமை தநுர் லக்நத்தில். மேல் நாட்டில் திருநாராயண புரத்தில் கடாம்பி கேசவாசாரியர் என்னும் திரு நாமத்துடன் ஒரு ஸ்ரீவைஷ்ணவாக்ரேஸரர் எழுந்தருளி இருந்தார். அவருடைய திருக்குமாரராக இந்த ஸ்வாமி அவதரித்தார். ஜநிக்கும் காலத்திலேயே இந்தக் குழந்தையினிடம் பல உத்தம லக்ஷணங்கள் விசேஷமாய் விளங்கி யிருந்ததைப் பார்த்து எல்லாரும் ஆச்சர்யப்பட்டார்கள். யதாக்ரமம் உபநயநம் நடந்து பிறகு வேதாத்யயநமும்

அவருக்கு ஸமக்ரமாகச் செய்விக்கப் பட்டது; கேசவாசார்யரே பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்வித்து திவ்ய ப்ரபந்தங்களையும் ஓதுவித்தார். அப்பொழுது ஸ்ரீ காஞ்சியில் நடாதூர் அம்மாள் பௌத்ராகிய கடிகாசதம் அம்மாள் என்று ப்ரஸித்தரான ஸ்ரீ வரத விஷ்ணுவாசார்யா என்பவர் வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார். அவரைக்கொண்டு ஸம்ப்ரதாய க்ரந்தங்களைத் தமது குமாரருக்கு அதிகரிப்பிக்க வேண்டுமென்று எண்ணி கேசவாசார்யர் குமாரரை அவ்விடம் அனுப்ப, ஸ்ரீ வரத விஷ்ணுவாசார்யரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அவரை அங்கீகரித்து ஸகல தர்சந க்ரந்தங்களையும் ஸகல ரஹஸ்யார்த்தங்களையும் அவருக்கு ப்ரஸாதித்தருளினர். ஆசார்யன் ப்ரஸாதித்த அர்த்தங்களை யெல்லாம் கசடற க்ரஹித்து இவர் பூர்ண ஜ்ஞாநத்துடனும் நிர்துஷ்டமான அநுஷ்டாநத்துடனும் எழுந்தருளி யிருந்த நாளில், ஒருதிநம் இரவில் ஸ்ரீ அஹோபில மிருந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்தருளினதாகவும் தம்மை அஹோபிலத்துக்கு வரும்படி நியமித்ததாகவும் ஸ்வப்நம் காணவே, அந்த ஸ்வப்நத்தைப் பகவானுடைய நியமநமென்றே க்ரஹித்து, மறுநாள் காலையில் அந்த ஸ்வப்நத்தை ஆசார்யனிடத்தில் விண்ணப்பம்செய்து விட்டு அவருடைய நியமநத்தைப் பெற்றுக்கொண்டு அஹோபிலம் சென்றார். அவ்விடத்தில் பகவத் ஸந்நிதிக்குப் போய் பகவானை மங்களாசாஸநம் செய்து கொண்டிருக்கையில், பகவான் ஒரு ஸந்யாஸி ரூபியாய் எழுந்தருளி இவருக்கு ப்ரேஷ மந்த்ரோபதேச பூர்வகமாக ஸந்யாஸம் செய்வித்து ‘ஸ்ரீ சடகோப ஜீயர்’ என்று தாஸ்ய நாமமுமிட்டு, தம்மிடத்திலிருந்த திருவாழி திருச்சங்குகளை அவரிடம் கொடுத்து, ‘‘நீர் நம்மை ஆராதித்துக் கொண்டு ப்ரதி க்ராமம் ப்ரதி நகரம் ஸஞ்சரித்து ஆச்ரிதர்களுக் கெல்லாம் உஜ்ஜீவநோபாயங்களைச் செய்துகொண்டு ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி நிர்வஹித்து வாரும்’’ என்று நியமித்தருளினர். இம்மாதிரி அவர் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தது அவருடைய 20-வது திரு நக்ஷத்ரத்தில் என்று தெரிகின்றது.

பின்பு அந்த அஹோபில ஸந்நிதியில் எழுந்தருளி யிருந்த மூன்று மூர்த்திகளுள் லக்ஷ்மியால் அலங்க்ருதமாயிருக்கும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மூர்த்தியை ப்ரார்த்தித்து எழுந்தருளப் பண்ணி அதனை விசேஷித்த வைபவத்துடன் ஆராதித்துக் கொண்டு வருகையில், அவ்விடத்திலிருந்த ஸந்நிதி நிர்வாஹகர்களுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி ஸந்நிதி அதிகார மனைத்தையும் தாமே அங்கீகரிக்கும்படி ஸம்பவித்தது. அப்படி அவ்விடத்தில் ஸ்வல்ப காலம் எழுந்தருளி யிருந்து, பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டு லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஒரு திருப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வாத்ய கோஷங்களுடன் பாண்ட்ய நாடு சென்று திரு நகரியில் ஆழ்வாரை ஸேவிக்க எழுந்தருளவே, அவ்விடத்தில் ஆழ்வார் எழுந்தருளி யிருந்த ஸ்தாநத்தில் வேறு ஒரு தேவதை இருப்பதைப் பார்த்து மிகவும் துக்கித்து, அந்த இடத்திலேயே ஆழ்வாரையே த்யாநித்துக் கொண்டுக் கண்ணும் கண்ணீருமாக ஸ்வல்ப காலம் நின்று கொண்டிருக்கையில் யாத்ருச்சிகமாக அந்தத் தேசத்தின் அதிபதி அவ்விடம் வந்தார். அவரிடம் இவர் தமது தாபத்தின் காரணத்தைத் தெரிவித்தார். தேசாதிபதி

யும் உடனே அதைப் பற்றி விசாரித்து, மதாந்தரஸ்தர்கள் ஆழ்வாரை அப்புறப்படுத்தி யிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, ஜீயருடன் ஆழ்வாரை மறைத்து வைக்கப்பட்டிருக்கு மிடம் சென்று ஆழ்வாரைச் சுனையிலிருந்து எழுந்தருளப் பண்ணின வளவில், ஜீயர் இரண்டு கைகளாலும் ஆழ்வாரை அணைத்து 'லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வேதம் தமிழ் செய்தநீர் நம் ஆழ்வாரன்றோ!' என்று அழைத்து ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் யதா ஸ்தானம் ப்ரதிஷ்டாபநம் செய்தார். ஆழ்வாரும் தாம் திருக்கையிற் கொண்டிருந்த ஹம்ஸ முத்ரையை ஜீயருக்கு ப்ரஸாதித்து 'ஆதிவண் சடகோப ஜீயர்' என்னும் திரு நாமத்தையும் தந்தருளி, 'ஸ்ரீ சடகோப ஸ்ரீ' என்று ஸ்ரீமுகம் முதலானவைகளில் எழுதிடும் படியாயும் நியமித்தருளினர். அங்கு ஜீயர் ஸ்வல்பகாலம் எழுந்தருளி இருந்து ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனை அவ்விடத்தில் திரு ப்ரதிஷ்டை செய்து நம்மாழ்வாருடனே தேசிகனுக்குத் திருப்புறப் பாட்டையும் செய்வித்து அளவற்ற வைபவத்துடன் உத்ஸவத்தைக் கண்டருளப் பண்ணினர்.

பிறகு வடதேச யாத்ரையாய் ஜீயர் எழுந்தருளவே அப்பொழுது விஜய நகர சக்ரவர்த்தியாயிருந்த முகுந்த தேவராயன் என்பவன் அவருடைய திருவடிகளை ஆச்ரயித்தான். அவனால் ஆராதிக்கப் பட்டவராய் கொஞ்ச காலம் அவ்விடம் எழுந்தருளி யிருந்து பின்பு அவ்விடமிருந்து புறப்பட்டு புருஷோத்தமத்திற்கு எழுந்தருளி அவ்விடத்தில் அநேக மதாந்தர வித்வான்களுடன் வாதம் செய்தருளி ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தி அங்கே ஆழ்வார் எம்பெருமானருடைய ஸந்நிதிகளையும் திரு ப்ரதிஷ்டை செய்தார். பிறகு கர்னாடக ஸம்ஸ்தாநம் சென்று அந்தத் தேசத்து அரசனாலும் ஆச்ரயிக்கப்பட்டு அவனாலே பஹுமாநமாக ஸத்கரிக்கப்பட்டார்.

இவ்விதம் ஸித்தாந்தத்தைப் பரவச் செய்து கொண்டு வரும் காலத்தில் ஜீயருடைய ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்தைப் பார்த்து விஸ்மயிக்காதவர் இல்லை. ஸிம்ஹாஸநாதிபதிகளின் திருவம்சத்தார்களுள் பலர் அவருடைய திருவடியை ஆச்ரயித்தார்கள். ப்ரஸித்தரான மணற்பாக்கம் தோழப்பர் என்னும் வித்வானும் ஜீயரை அப்பொழுது ஆச்ரயித்தார்; ஜீயருடைய நியமநத்தின் பேரிலேயே அந்த வித்வான் ஆசௌச சதகம் முதலான எட்டு தர்ம சாஸ்த்ரங்களைச் செய்து ஜீயரால் 'வைதிக ஸார்வ பௌமர்' என்னும் திருநாமமும் ப்ரஸாதிக்கப் பெற்றார்.

இவ்வாறு ஜீயர், ஆதியில் தமக்கு அழகிய சிங்கர் செய்தருளிய நியமநப்ரகாரம் தேசம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து, ஸம்ப்ரதாய க்ரந்தங்களையெல்லாம் ஆச்ரிதர்களுக்கு உபதேசித்து, அவர்களை திருவிலச்சினை முதலான ஹித வ்யாபாரங்களால் உபகரித்துக் கொண்டு அறுபது சாதுர் மாஸ்யம் ஆஸ்தாநத்தில் எழுந்தருளி யிருந்தார்.

இவர் செய்தருளிய கைங்கர்யங்களுள் முக்யமானவை:—(1) திருநகரியில் நம்மாழ்வார் திரு ப்ரதிஷ்டை, (2) திருமலைக்கு ஸோபாநம் (3) காஞ்சியில் பேருளாளன் ஸந்நிதியில் நூற்றுக்கால் மண்டபமும் வாஹந மண்டபமும், (4) தூப்புலில் நிகமாந்த மஹா தேசிகனுக்குத் தனிக்கோயிலும், (5) திரு நாராயணபுரத்தில் கோபுர நிர்மாணமும் தேசிகனுடைய திரு ப்ரதிஷ்டையும், (6) திரு நகரியிலும் திரு நாராயண புரத்திலும் மடங்களுமாம். திரு நாராயண புரத்தில் திருக்கல்யாணி தீரத்தில் இவருடைய ப்ருந்தாவநம்.

---

(2)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ கலியன் ராமனுஜ ஸ்வாமியின் வைபவம்

[1877—1933]

இந்த மஹாந் ஈச்வர ஸம்வத்ஸரத்தில் சித்திரை மீ அச்வநீ நக்ஷத்ரத்தில் (14-4-1877) வானமாமலை திவ்ய தேசத்தில் உத்தமமான ஒரு ஸ்ரீவைஷ்ணவ திருக்குலத்தில் அவதரித்தருளினர். ஜாயமாந கடாக்ஷ விசேஷத்தாலே ஜ்ஞாந ஸம்பத்தெல்லாம் பெருகி, உசிதமான காலம் வந்தவுடன், தத்காலம் ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சடகோபராமாநுஜ ஸ்வாமியின் திருவடிகளை ஆச்ரயித்து அவராலே அநுக்ரஹிக்கப்பட்டவராய் சாஸ்த்ரங்களில் விசேஷித்தப் பாண்டித்யத்தைப் பெற்று, பிறகு ஸ்ரீ பட்டர் பிரான் ஸ்வாமி ஸந்நிதியில் உபய வேதாந்தங்களையும் அதிகரித்து, அந்த ஸ்வாமி காலத்திற்குப் பிறகு அவரால் நியமிக்கப் பெற்றவராய் தமது 28-வது திரு நக்ஷத்ரத்திலேயே உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து அந்தத் திவ்ய ஸிம்ஹாஸநத்தையே அலங்கரித்தருளினர். ஒரு வருஷ காலம் அவ்விடம் எழுந்தருளியிருந்து, பிறகு யாத்ரை உபக்ரமித்து, கோயில் திருமலைப் பெருமாள் கோயில் முதலான திவ்ய தேசங்களை மங்களாசாஸநம் செய்து, ஸ்ரீ ஜகந்நாதம் வரை எழுந்தருளி மூன்று வர்ஷ காலத்திற்குப் பிறகுத் திரும்ப வானமாமலைக்கு எழுந்தருளினர். இது அவர் செய்தருளிய முதல் யாத்ரை.

பிறகு சில காலம் ஸ்ரீ மடத்திலேயே உபய வேதாந்த ப்ரவசநம் நடைபெற்று வந்தது. அதற்குப் பிறகு உத்தர திவ்யதேசங்களை மங்களாசாஸநம் செய்யக் கருதிக் கணக்கற்ற அடியார்களுடன் கூட வண்பரிசாரம் வாட்டாறு வழியாக அநந்தசயநம் எழுந்தருளி, அங்கு மஹாராஜனாலும் அவ்விடத்திய பக்த ஜநங்களாலும் விசேஷமாக உபசரிக்கப் பெற்று, அங்கு நின்று புறப்பட்டு மலைநாட்டுத் திருப்பதிகளனைத்தையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு, திருநாராயணபுரம் சென்று அங்கிருந்து கிஷ்கிந்தை மால்யவான் மலைகளுக்கு எழுந்தருளி, பிறகு ஹைதராபாத் மார்க்கமாய் பஞ்சவடீ எழுந்தருளி, அங்கிருந்து பம்பாய்க்கு ஸமீபத்தில் இருக்கும் ஸட் கோபர் என்னும்

இடத்திற்கு எழுந்தருளி அப்பொழுது நேர்ந்த சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை அவ்விடத்திலேயே முடித்துக் கொண்டு, அங்கிருந்து இந்தூர் உஜ்ஜயினி மார்க்கமாகப் புஷ்கரம் பரதப்பூர் முதலிய ஸ்தலங்களை அலங்கரித்து, பிறகு ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளினார். பிறகு வடமதுரை கோகுலம் கோவர்த்தனம் முதலிய திவ்ய தேசங்களை ஸேவித்துக்கொண்டு, அங்கிருந்து ஹரித்வாரம் ஹ்ருஷீகேசம் மார்க்கமாக பதரிகாச்ரமத்தை அடைந்தார். அங்கே சில காலம் பகவத் குணாநுபவம் செய்த பிறகு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு நைமிசாரண்யம் எழுந்தருளி, சித்ரகூடம் ரீவா தேசம் அலஹாபாத் காசிமார்க்கமாகத் திருவயோத்திக்கு எழுந்தருளினார். திருவயோத்தியிலிருந்து மிதிலாபுரி ஸத்வா ஸம்ஸ்தானம் மார்க்கமாய் பாடலீபுரம் எழுந்தருளி, அங்கே அப்பொழுது நடைபெறவிருந்த சதுஸ்ஸம்ப்ரதாய மஹாஸபையில் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து, ஹிந்தி பாஷையில் அத்யத்புதமாக உபந்யாஸங்களைச் செய்தருளினார். அங்கு ஸந்நிஹிதர்களாயிருந்த மஹாராஜர்கள் மஹாவித்வான்களெல்லாரும் அந்த உபந்யாஸங்களைக் கேட்டு மிகவும் ஆநந்தித்தார்கள். பிறகு அந்த ஸபை முடிந்த பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டு ராணிகஞ்ஜ் மார்க்கமாக ஸ்ரீ ஜகந்நாதம் பொப்பிலி விஜயநகரம் பித்தாபுரம் இவ்விடங்களுக்குப் போய், பிறகு ஸ்ரீகூர்மம் ஸிம்ஹாசலம் வழியாகத் திருப்பதிக்கு எழுந்தருளினார். அங்கே திருவேங்கடமுடையானை மங்களாசாஸநம் செய்து, பிறகு ஸ்ரீபெரும்பூதூர் மார்க்கமாக ஸ்ரீரங்கம் எழுந்தருளி அரங்கனை ஸேவித்து, பிறகு திருமாலிருஞ் சோலை ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளி அவ்விடத்தில் ப்ரதம தீர்த்தம் பரிவட்டம் மாலை முதலிய மர்யாதைகளால் புரஸ்கரிக்கப் பெற்று, அங்கிருந்து மறுபடியும் வானமாமலை எழுந்தருளினார். இது இரண்டாவது யாத்ரை.

இந்த யாத்ரை நடை பெறுவதற்கு ஐந்து வர்ஷ காலத்திற்கு அதிகமாகவே சென்றது. இதில், ரீவா இந்தூர் ஸத்வா முதலிய மஹாராஜர்களுடைய ஸம்ஸ்தானங்களில் ஸ்ரீ ஸ்வாமி ஸத்கரிக்கப் பட்டதும், பம்பாய் பாட்னா கான்பூர் ஹைதராபாத் முதலிய நகரங்களில் நடைபெற்ற பத்தந ப்ரவேசம் முதலான மஹோத்ஸவங்களும் வாசாம் அகோசரங்கள். வானமாமலைக்கு எழுந்தருளின பிறகு பத்து ஸம்வத்ஸரம் அவ்விடத்திலேயே உபய வேதாந்த காலக்ஷேபாதிகளால் அங்கிருந்த ஆச்ரிதர்களை அநுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவித்தது.

பிறகு மூன்றும் தடவையாக விஜய யாத்ரா ப்ரஸ்தானத்தை உபக்ரமித்து ஸ்ரீ வில்லிபுத்தூர் மாலிருஞ்சோலை மார்க்கமாய்த் திருப்புல்லாணி எழுந்தருளி அங்கு திருவணையை ஸேவித்து விட்டு, பிறகு திருக்கோட்டியூர் திருமய்யம் புதுக்கோட்டை மார்க்கமாய் ராஜ மன்னார் ஸந்நிதிக்கு எழுந்தருளி அதற்கு ஸமீபத்திலிருக்கும் சேரங்குளம் என்னும் க்ராமத்தில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை முடித்து, அங்கிருந்து குருகைக் காவலப்பன் ஸந்நிதி மார்க்கமாக ஸ்ரீமுஷ்ணம் எழுந்தருளி, பிறகு திருக்கோயிலூர் நாயனாரையும் முதலாழ்வார்களையும் ஸேவித்துக்கொண்டு திருமலை மார்க்கமாகத் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினார். அவ்விடத்தில் பல மாஸங்கள் எழுந்

தருளியிருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்களை அநுக்ரஹித்த விஷயம் இந்நகர வாஸிகளான ஆஸ்திகரெல்லாருக்கும் இன்னும் ஞாபகத்தில் இருக்கலாம். பிறகு கூடூர் நெல்லூர் மார்க்கமாய் நூஜ்வீட் ஸம்ஸ்தானம் எழுந்தருளி; பிறகு ராஜமஹேந்த்ரம் பஜவாடா ஹைதராபாத் ஸிகந்தராபாத் வளப்பருத்தி முதலான இடங்களில் பக்தர்களை அநுக்ரஹித்துக்கொண்டு, அங்கிருந்து மைஸூர் சேர்ந்து, பிறகு சேலம் நாமக்கல் மார்க்கமாகத் திருவரங்கம் பெரிய கோயில் எழுந்தருளி, அங்கிருந்து திரும்ப வானமாமலை எழுந்தருளினார். இது மூன்றாவது யாத்ரையின் வைபவம். இவ்விதம் மஹா ப்ரபாவத்துடன் வெகு காலம் எழுந்தருளி யிருந்து, ஸ்ரீ முக வர்ஷம் ஆவணி மாஸம் க்ருஷ்ணபக்ஷ ஷஷ்டி திநம் [10-9-1933] அபிஜித் காலத்தில் இம்மஹாந் திருநாட்டை அலங்கரிக்கும்படி நேர்ந்தது. இந்த விபூதியை அலங்கரித்து எழுந்தருளியிருந்த 56 ஸம்வத்ஸரங்களுள் சற்றேறக்குறையப் பாதிகாலம் 28 ஸம்வத்ஸரம் உத்தமாச்ரம ஸ்வீகார பூர்வகமாக ஸ்ரீ ராமாநுஜ தர்சந ஸ்தாபநத்திலேயே விநியோகம் அடைந்தது.

இந்த மஹாந் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸ்ரீ மடத்திற்காக வாங்கப் பட்டுள்ள க்ராமங்கள் மூன்று லக்ஷ ரூபாய் மதிப்புள்ளவை; மடத்திற்காக ஆச்ரிதர்களால் ஸமர்பிக்கப்பட்டுள்ள த்ரவ்யங்களும் ஏராளமே. உள்ளூரிலும் வெளி திவ்ய தேசங்களிலும் ஸ்ரீ ஸ்வாமி செய்தருளின கைங்கர்யங்களும் பலவென்று தெரிய வருகின்றன. இவையெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ விபூதியின் ஸம்ருத்தி ஸூசகங்களே.

(3)

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சீ ப்ரதி வாதி பயங்கரம் ஜகத்குரு ஸ்ரீமதநந்தாசார்யருடைய ஷஷ்டயப்த பூர்த்தி மஹோத்ஸவம்

[ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கராசார்ய திவ்ய ஸிம்ஹாஸநத்தை அலங்கரித்து வரும் ஜகத்குரு ஸ்ரீமதநந்தாசார்ய தேசிகேந்த்ரர்களுடைய ஷஷ்டயப்த பூர்த்தி மஹோத்ஸவம், நிகழும் மாசி மீ 14உ ஞாயிற்றுக்கிழமை திநம் ஆரம்பித்து 23உ வரை ஸ்ரீ காஞ்சீ நகரத்தில் ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கர மடத்தில் நடைபெறுகிறதென்றும், அந்தப் பத்து திநங்களிலும் ப்ரதிதிநம் ஆழ்வாராசார்யர்களின் திவ்ய ஸூக்திகளின் பாராயணங்களும் வித்வதுபந்யாஸங்களும் செய்யப்படுமென்றும் நாம் கேட்டு மிகவும் ஆநந்திக்கின்றோம். அந்த உத்ஸவ காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் எழுந்தருள வேணுமென்று ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஆஹ்வாந பத்ரிகை வாயிலாக எல்லாரையும் ப்ரார்த்திப்பதுடன், அந்தப் பத்ரிகையில் ஒன்றை நமக்கு அனுப்பி அதைத் தீபிகையில் ப்ரசுரம் செய்ய வேணுமென்றும் நியமித்திருக்கிறார். அந்தப் பத்ரிகையை நாம் க்ருதஜ்ஞதையுடன் அங்கீகரித்து, அதன் ஸங்க்ரஹத்தை நமது ஸஹ்ருதயர்களுக்குத் தெரிவிக்குமாறு இதில் ப்ரசுரம் செய்கின்றோம்.]

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible] [25-2-34 6-3-34] [illegible]

ஸ்ரீரங்கம்,
12—2—34. [illegible]

ஸத் சூத்ர தர்மம்:—இது புத்தகக்கோட்டம் வித்வான் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் க்ரந்தம். இதில் நான்காவது வர்ணத்தார்களால் தினந்தோறும் அநுஷ்டிக்கப்பட வேண்டியவையாக மஹர்ஷிகளால் சொல்லப்பட்டுள்ள தர்மங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு, எல்லாருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 2. தபால் சார்ஜு வேறு. "திருச்சி ஜில்லா, எலமனூர் போஸ்டு, திருப்பளாத்துறை, ஸ்ரீ. உ.வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்" என்னும் விலாஸத்திற்கு எழுதி இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

[illegible]

[illegible]

ஸம்பாதகரின் குறிப்புகள்

மஹாத்மா காந்தியும் ஹரிஜனங்களும்

மஹாத்மா காந்தியின் தக்ஷிண தேச ஸஞ்சாரம் முடிந்தது. துர்ப்பிக்ஷத்தால் மஹாஜனங்கள் மஹத்தான கஷ்டங்களை அநுபவித்துக்கொண்டிருக்கும் இந்த க்ஷாம காலத்தில், மஹாத்மா லக்ஷக்கணக்காக த்ரவ்யம் சேர்த்துக் கொண்டு வடக்கு திக்கு நோக்கிப் போய்விட்டார். அவர் ருஜு ஸ்வபாவமுள்ளவர் என்பதையாவது அவருக்கு அளவற்ற பூததயை உண்டு என்பதையாவது நாம் மறக்கவில்லை; தாம் ஸம்பாதித்திருக்கும் த்ரவ்யத்தைக் கொண்டு எளிய ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே அவருடைய எண்ணமாக இருக்கலாம். எது எப்படி இருந்த போதிலும், அவர் செய்யும் கார்யம் தோஷ துஷ்டமாக இருப்பதால், அவரை நிரபராதி என்று சொல்வதற்கு நமக்குத் தைர்யம் வரவில்லை.

முதலில், அவர், ஹரிஜனங்கள் என்று இப்பொழுது வ்யவஹரிக்கப்பட்டுவரும் ஜந்ம சண்டாளர்களுக்குத் தீண்டாமை விலக்க வேண்டுமென்றும், அவர்கள் வர்ணாச்ரம தர்மத்தார்களுடன் கூட ஸமமாகவே தேவாலய ப்ரவேசம் செய்ய அநுமதி கொடுக்கப்பட வேண்டுமென்றும் நிர்ப்பந்திப்பது, தீவ்ரமாக ஆக்ஷேபிக்கத் தகுந்ததான கார்யம். வர்ணாச்ரம தர்மத்தார்கள், தமது ரக்ஷகனான பகவானால் த்ரிகாலஜ்ஞானிகளான மஹர்ஷிகளைக்கொண்டு ப்ரவ்ருத்திக்கப்பட்டுள்ள சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்; அந்த மஹர்ஷிகளால் விதிக்கப்பட்டுள்ள விதிகள் குலையாதிருக்கும் வரை மாத்ரம் ஜகத் க்ஷேமத்துடன் நிலைபெற்று நிற்கும் என்று நம்புகிறவர்கள். அந்த விதிகள், ஜந்ம சண்டாளர்கள் தீண்டாதவர்களென்றும் அவர்களுடன் ஸமமாக தேவாலய ப்ரவேசம் செய்வது கூடாதென்றும் விதிக்கும் பக்ஷத்தில், அந்த விதிகளை அவர்கள் எவ்விதத்தில் அநாதரிக்கக் கூடும்? 'அம்மாதிரியான விதிகள் புத்திக்கும் ந்யாயத்திற்கும் விருத்தங்களாக இருக்கிறபடியால் அவை அநாதரிக்கத் தகுந்தவைகளே' என்பதே மஹாத்மாவின் வாதமாக இருக்கலாம். அந்த வாதம் புத்திசாலிகள் ஒத்துக்கொள்ளத் தகுந்ததாக மாட்டாது என்பதை நாம் நிரூபிப்போம்.

புத்தியை மாத்ரம் கைப்பற்றி ஒருவனும் உலக வாழ்க்கையை நிர்ணயிக்க ப்ரவ்ருத்திக்க மாட்டான். அப்படி ப்ரவ்ருத்தித்தால்

அந்த ப்ரவ்ருத்தி அளவற்ற குழப்பத்திற்கும் பயத்திற்கும் காரணமாகுமே தவிர, உலகம் நிலை பெற்று நிற்பதற்கு ஒருபொழுதும் காரணமாக மாட்டாது என்பது வ்யக்தம். ஆகையால் இதைப் பற்றி நாம் நிரூபிக்கவேண்டியது அதிகமாக ஒன்றுமில்லை. சாஸ்த்ரம் ந்யாயத்திற்கு ஒத்ததில்லை என்று சொல்வதும் பரிஹஸிக்கத் தகுந்த வார்த்தையே. இது ந்யாயம் இது அபந்யாயம் என்பதை நாம் சாஸ்த்ரத்தைக் கொண்டே அன்றோ நிர்ணயித்தல் வேண்டும்? அப்படி இருக்கையில் சாஸ்த்ரம் சொல்வது ந்யாயத்திற்கு விருத்தமாக இருக்கின்றது என்று வாதிப்பது எவ்விதத்தில் ஸங்கதமாகும்? வஸ்து ஸ்திதி என்னவென்றால், ஜகத்தை ஸ்ருஷ்டித்த பகவான், அதன் க்ஷேமத்தைக் கருதி மஹர்ஷிகளைக் கொண்டு 'இது செய்யத் தகுந்தது, இது செய்யத் தகாதது' என்பதை விளக்கும் சாஸ்த்ரங்களை ப்ரவ்ருத்திப்பித்திருக்கிறான் என்பது தான். ஆகையால் ந்யாயாபந்யாயங்களையும் தர்மாதர்மங்களையும் புண்யாபுண்யங்களையும் நாம் சாஸ்த்ரங்களைக் கொண்டு சிக்ஷித்துக் கொள்ளுதல் வேண்டுமே தவிர, சாஸ்த்ரங்களைச் சாராத ந்யாயா பந்யாயங்கள் சில இருக்கின்றன வென்றும் அவைகளைக் கொண்டு சாஸ்த்ரங்களை நாம் சிக்ஷித்தல் வேண்டு மென்றும் சொல்வது சரியாக மாட்டாது,

"[illegible]"

என்பது பெரியோர்களுடைய ஸூக்தி. நிற்க, நமக்கு ப்ரியமாக இருக்கும் அம்சத்தில் சாஸ்த்ரத்தை ப்ரமாணமாக ஒத்துக்கொண்டு, அப்ரியமான அம்சத்தில் அதை நிராகரிப்பதும் ருஜு ஸ்வபாவத்திற்கு விருத்த மாதலால், மஹாத்மா காந்தி சாஸ்த்ரத்திற்கு விருத்தமாகத் தீண்டாமையை விலக்க வேண்டு மென்று வாதிப்பதும் மஹா ஜநங்களுக்கு அம்மாதிரியான உபதேசத்தைச் செய்வதும் மஹத்தான அபராதம் ஆகும் என்றே நாம் சொல்வோம்.

இரண்டாவது: அவர் பணம் வஸூல் செய்வதில் இறங்கி விட்டாரே என்று நாம் மிகவும் சோகிக்கிறோம். இதுவரை நாம் அவரிடம் செய்திருந்த கௌரவ புத்தி முழுவதும் அவர் நிஸ்ப்ருஹராக இருந்தார் என்பதனாலேயே. இப்பொழுதும் அவர் தமது சொந்த உபயோகத்திற்காக த்ரவ்யத்தை ஸம்பாதிக்க வில்லை என்பது உண்மையேயாயினும், த்ரவ்ய ஸம்பாதநத்தில் ப்ரவ்ருத்தித்து விட்டார் என்பதே அவருடைய மஹிமையைக் குறைத்து விட்டது என்றே நாம் க்ரஹிக்கிறோம். 'சொந்த உபயோகமுண்டு' என்பது மாத்ரம் த்ரவ்ய ஸம்பாதநத்திலுள்ள தோஷத்திற்கு நியாமகமன்று; த்ரவ்ய ஸம்பந்தமே தோஷாவஹம்' என்பது நம்முடைய த்ருடமான அபிப்ராயம். த்ரவ்யம் ஸம்பாதிப்பதில் ஒருவன் இறங்கிவிட்டால், அவனுக்கு, த்ரவ்யத்தால் உபகரிப்பவனிடத்தில் ஒரு வித ப்ரீதியும் உபகரியாதவனிடத்தில் ஒரு வித அப்ரீதியும் பரவசமாகவே உண்டாகின்றது. அந்த ப்ரீத்ய ப்ரீதிகளின் வழியாக மற்றைத் தோஷங்களும் கொஞ்சம் கொஞ்சமாக அவனிடம் ஆவிர்ப்பவிக்கின்றன. இது லோகாநுபவம். மஹாத்மா காந்தியும் ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றவரே. அவரிடத்தில் மாத்ரம் அந்தத் தோஷம் எப்படி ஆவிர்ப்பவியாமல் இருக்கும்? துர்ப்பிக்ஷத்தால ஜநங்கள் அநுபவிக்கும் கஷ்டத்தை அறியாமல் தம்மிடம் வந்த ஸ்திரீ பால வ்ருத்தர்க ளெல்லாரையும் அவரவர்கள் தம் தம் தேஹத்தில் பூண்டிருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கொடுக்கும்படி அவர் எவ்வித கூச்சமு மின்றிக்கே நிர்ப்பந்தித்துக் கேட்டார் என்பதே அவரிடத்தில் தோஷங்கள் ப்ரவஹித்து நின்றன என்பதை நன்கு காண்பிக்கின்றது. கநக மென்றால் கண்ணை மூடுபவர்களன்றோ மஹான்கள்? 'இதையும் கொடு, அதையுங் கொடு' என்று கேட்குமவர்களிடம் மஹாத்மத்தன்மை எவ்விதத்தில் ஒட்டும்?

மஹாத்மா, 'சாஸ்த்ரத்தை நம்புகிறவர்களுள் நாமும் ஒருவர்' என்று சொல்லிக் கொள்ளுகிறபடியால் நாம் இவ்வளவு தூரம் இதைப் பற்றி எழுதத் துணிந்தோம். ஜாதிநியமங்களைப் பற்றி நமது சாஸ்த்ரம் சொல்வதை அவர் கொஞ்சம் கவனித்தல் வேண்டும்.

"[illegible]
[illegible]"

[பகவத் ப்ரீதியை அடைய விரும்புகிறவன் இந்த லோகத்தில் இருக்கும் காலமெல்லாம் ஆஹாரம் முதலியவைகளில் நியமங்களுடன் இருப்பது போல வர்ணாச்ரம தர்மங்களுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.]

"[illegible] |
[illegible]"

[ஆனால், பகவத் பக்தன் விஷயத்தில், ஜாதி ப்ரயுக்தமாக அவனை நாம் ஒருபொழுதும் தாழ நினைக்கக் கூடாது. அப்படித் தாழ நினைப்பதற்காக அவனுக்கும் நமக்குமுள்ள ஜாதி வ்யத்யாஸத்தை நாம் அநுஸந்தாநம் செய்தால், அது நமக்கு அநர்த்தத்தையே விளைவிக்கும்; அவன் விஷயத்தில் ஜாதி வ்யத்யாஸத்தைப் பாவிப்ப தெல்லாம் சாஸ்த்ர வ்யவஸ்தை ப்ரகாரம் அநுஷ்டாநாதிகளை நடத்திக் கொள்வதற்காக மாத்ரம் இருத்தல் வேண்டும். அப்பொழுது அது எவ்வித அநர்த்தத்தையும் விளைவிக்க மாட்டாது.] இதிலிருந்து நாம் மற்றவர்களைத் தாழ நினைக்க வேண்டும் என்பது நமது சாஸ்த்ரம் செய்த மஹர்ஷிகளின் கருத்தன்று என்பதை வ்யக்தமாக அறியலாம். சிற்சில வ்யவஸ்தைகளுக்குக் கட்டுப்பட்டு நாம் நமது நடவடிக்கைகளைப் பாது காத்து வரவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். அந்த வ்யவஸ்தைகளின் ஆந்தர அபிப்ராயம்

அந்த வ்யவஸ்தைகளைச் செய்யும் நமது ரக்ஷகர்களுக்கே தெரியும்; நமக்கு அது புலப்பட மாட்டாது. இதுதான் ரஹஸ்யம்.

*   *   *   *   *

பல ஸுஹ்ருத்துக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, நாம் நமது தீபிகையில் இந்த மாஸத்திய ஸஞ்சிகை முதல் சில புதிய விஷயங்களை மாஸம் தவறாமல் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். முதலில் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம் எங்கும் பரவவேண்டும் என்னும் எண்ணத்துடன் பகவதாஜ்ஞையை முன்னிட்டு ஆங்காங்கு ஸ்தாபிக்கப் பட்டுள்ள ஆசார்ய ஸ்தானங்களின் மஹிமையும் விபூதியும் பல பெயருக்கு உள்ளபடி தெரியாமலே அப்ரகாசிதங்களாக இருக்கின்றன. அவையெல்லாம் ஆஸ்திகர்களாயுள்ள நமது ஸுஹ்ருத்துக்களுக்கு ப்ரகாசிப்பிக்கப் படவேண்டும் என்பது மிகவும் முக்யங்களான விஷயங்களுள் ஒன்று. அதை உத்தேசித்து அந்தந்த ஆஸ்தான அதிபதிகளெல்லோருக்கும் நாம் இந்தத் தீபிகை வாயிலாகவும் வேறு விதமாகவும் விண்ணப்பப் பத்திரிகைகளை அனுப்பி யிருக்கிறோம். அவர்கள் அவ்வவ் விடங்களிலுள்ள மநுஷ்யர்களைக் கொண்டு ஒவ்வொரு மாஸத்திலும் அந்தந்த ஸந்நிதிகளில் நடைபெறும் க்ரந்த காலக்ஷேபங்களைப் பற்றியும் நித்யோத்ஸவாதிகளைப் பற்றியும் ஸங்க்ரஹமாக அறிக்கைகளை அனுப்ப நியமிக்க வேணு மென்பது நம்முடைய ப்ரார்த்தனை. அந்த ப்ரார்த்தனையை அவர்கள் க்ருபையுடன் தலைக்கட்டி வைக்கும் பக்ஷத்தில், அது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்திக்கு அநுரூபமாக இருப்பதுடன், அநேக ஆஸ்திகர்களுக்கு மிகவும் உபகாரகமாகவும் இருக்கும் என்பது நமது நம்பிக்கை. இரண்டாவது, நமது ஆசார்யர்கள் அநுக்ரஹித்துள்ள பகவத் ஸ்தோத்ர ரூபங்களான திவ்ய ஸூக்திகளுக்கு எளிய தமிழ் நடையில் வ்யாக்யானம் ஒன்றைத் தீபிகை வாயிலாக வெளியிடவேண்டும் என்பதும் நமது உத்தேசம். அதற்காக ஸ்ரீ கூரேசனுடைய பஞ்ச ஸ்தவத்திலுள்ள ஸ்ரீ ஸ்துதியை முதல் முதலாக உபக்ரமித்திருக்கிறோம். அவருடைய ஐந்து ஸ்தவங்களை முடித்த பிறகு, ஸ்ரீ பட்டர் முதலிய மற்றை ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளை எடுத்துக்கொள்ளலா மென்பது நம்முடைய எண்ணம். இந்த எண்ணங்களெல்லாம் த்ருப்திகரமாக முடிவு பெறுவது நமது ஸுஹ்ருத்துக்களின் ஸஹாயத்தைச் சார்ந்து நிற்கின்றதாதலால், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் அபிமானம் வைத்திருக்கும் ஆஸ்திகர்களெல்லாரும் தீபிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து, தம் தம்மால் இயன்ற வரையில் த்ரவ்ய ஸஹாயம் செய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

(ஓரக் குறிப்பு: தீபிகையின் அபிவ்ருத்தி)

உரைத்தலுங் கொணர்ந்தத்தச்ச னொலிகட லுலகையெல்லாம்
பரப்பியோர் புறத்தின்மற்றைத் தட்டிலப் பதியைத்தானே
நிரப்பலும் விதேகனன்ட நிகராறு மழிசைநிற்க
வரைக்குலத் துடனேமற்ற வையக மெழுந்ததம்மா. 29

கண்டதை முனிவரெல்லாங் களிப்பொடு வியந்துபோற்றிக்
கொண்டினி யிதுவேநன்ம கீசார மெனவேநான்கு
துண்டனைத் தொழுதுமீண்டத் தொல்பதி யணுகினாளுங்
கொண்டலார் வண்ணன்றன்னைக் குறித்திருந் தவத்திலார்ந்தார். 30

அவர்களி லொருவனுய பார்க்கவ னரியையுள்ளப்
பவர்நிறப் பதுமத்தூடே பதிந்திட விளக்கிவையத்
தெவர்களு மிறும்பூதெய்தக் கால்சரு கிவற்றையுண்டு
தவர்களுக் கரசேயென்னத் தகுமென வொழுகினானால். 31

பாம்பொடு பயிலும்பஞ்சா னனத்தொடு கரியும்பாயும்
வேங்கையி னுடனேமானும் விருப்பொடு பயிலுமந்த
மேம்படு முனிவனேற்கும் மிருமணம் விரவப்பூக்கும்
பூம்பொழி லிடையிலந்தப் புனிதனின் றகைமைதன்னால். 32

ஆயிரம் விழியோனந்த வருந்தவன் றவத்தின்மிக்க
தாயவெய் யொளியைநோக்கித் தன்பத மலைக்குமிந்தத்
தூயவெந் தவமென்றெண்ணிக் குலைத்திட வதனைத்தோகை
யாயவங் கலுழுமோர்பெண் ணரசியை யழைத்துச் சொல்வான். 33

பங்கயத் திடையிரண்டு செங்கயல் பயில்வதொப்ப
வங்கலுழ் வதனமாதே யம்புவி வதனமென்னப்
பொங்குறு மழிசையூடு பொருவருந் தவயோகத்திற்
றங்குபார்க் கவன்றனென்னைத் தடுத்திடங் கெழுகவென்றான். 34

மொழிவது செவியுற்றந்த முருந்துறழ் முறுவன்மாதுங்
கொழுமலர்க் கணையோன்வெய்ய பூங்கழை குழைத்துப்பின்ன
ரெழுதர வெழுந்துவிண்ணி னின்றுமவ் விருடிவாழும்
பழுதறு பழுவத்தூடு மின்னெனப் பொலிந்துநின்றாள். 35

காலமும் வயந்தமாகிக் கானக முழுதுமாலை
மாலையாய்த் தழைத்துயர்ந்த மரங்களும் பழுப்புநீத்துக்
கோலமார் பசியசெய்ய குழைதளிர் மலிந்துநாறு
மாலுறு மணங்கள்வீசும் மலர்சினை குழையப்பூத்த. 36

வயந்தநா யகனைக்கண்டிவ் வாறலர்ந் திலகுசோலை
யியைந்தநா யகனைக்கண்டோர் துடியிடை யிழைத்தபூவார்
நயந்திடு புதியகூறை நன்குடுத் தணிகள்பூண்டு
செயந்தரப் பொலிவதொக்குஞ் செறிகுழன் மலர்கள்சேர்த்தி. 37

மாதவிமலர்க் குள்ளாடி மணம்புதி துடனின்சேவல்
போதரப் பூத்தமாவின் பொழிலிடம் பிரிந்துசாம்பும்
ஆதர முடையபேடைக் குயிலதை யகற்றுமூடி
மேதகு புதியவாசை மனைவியான் மேவுகென்றே. 38

தும்பிகண் மதுவையுண்டு துணையுட னினிதுபாடும்
வம்புலாம் பொழிலினூடே வளர்முருக் கின்றதோடு
தம்புகழ் நாசியொக்கு மென்றதைத் தமதுமூக்கின்
வெம்பியே கறிக்கும்பைந்தார்ப் பசுங்கிளித் திரள்கள்வீழ்ந்தே. 39

வந்தவள் கரியகூந்தன் முகிலென மருண்டுவாசக்
கொந்தலர் பொழிலின்மஞ்ஞைக் குலநடம் புரியக்கீதம்
விந்தையி னளிகள்பாட வேங்கையின் முழக்கமென்னும்
முந்துறு முழவமார்ப்ப முல்லைமான் முறுவல்பூக்கும். 40

தாதவிழ் தருவின்மாலைத் தையலு மினையபோழ்தத்
தோதருந் தவசிமுன்ன ருலவிட வவனுநோக்கி
யீதென முகிலினின்று மிறங்கிய கொடிமின்னென்று
மாதுரு வெடுத்தென்மாடு நடைபயில் வதனைமானும். 41

சேகுயர் கனகத்தாலிச் சேயிழை யுருவமுற்று
மாகியங் கலுழ்வதென்ப தொன்றல வியப்பிவ்வாட்டி
யோகியு மருளற்கொத்த வுறுப்பெலா மொளிரும்வண்ணம்
வாகைநுண் கலையையீங்கு வகையுற வுடுத்ததென்னோ. 42

என்றவன் கலங்குமாறவ் வேந்திழை தெரியலோடுந்
துன்றிருங் கூந்தல்சோரத் துணைக்கரும் புருவவில்லை
நன்றுற வளைத்துநீல நயனவே லவன்றன்போராக்
குன்றெனுங் குணமுங்குன்றப் போழ்ந்திடக் குறித்துவிட்டாள். 43

அன்னது தவசிநெஞ்சிற் பாயுமு னனங்கன்றென்ற
லின்னிசைக் குயில்களாதி பரிகரத் துடனேயென்று
கன்னலின் றனுவைவாங்கிக் காரளி யொழுங்காநாணின்
மன்னிய வுரத்தின்விட்ட மலர்க்கணை நுழைந்தமாதோ. 44

நுழைந்ததும் படிவத்தோனு நோன்பினைத் துறந்துமுன்னம்
விழைந்துமே னகையின்வஞ்ச மயற்குழி விழுந்தான்போலக்
குழைந்தக மவண்மேற்காதல் கொண்டவ ளுடனேகூடி
யிழைந்தனன் கணமுநீங்கா தகங்களித் திருந்தான்மன்னோ. 45

பாலொடு கலந்தநீரிற் பண்ணவ னொழுகுநாளி
லாலிளந் தளிர்போலந்த வரம்பையி னகடுவீங்கி
நாலிரண் டிரண்டுதிங்க ணடந்தபி னுற்பந்தன்னான்
மேலுறப் பிணித்தபிண்ட மொன்றினை மெலிந்துபெற்றாள். 46

பெற்றபி னதனையன்னாள் வைத்தொரு பிரப்பந்தூற்றில்
விற்றரு விமானமூர்ந்து விண்ணுல கெழுந்தபின்னர்
நற்றவன் விரதம்போய தெனநனி நலிந்துதேறி
மற்றொரு வனத்திற்சென்று தவநெறி மணந்துநின்றான். 47

முன்னொரு மூவர்வந்த வாண்டுதைம் மகத்திற்றோன்று
மன்னதோர் பிண்டந்தன்னைப் போழ்ந்துமா லழலுமாழி
தன்னொளி யுருவந்தாங்கி மழிசைமன் னுதயமானான்
பொன்னிகர் கலுழனண்டம் போழ்ந்துமுன் னுதித்தபோலும். 48

பிறந்திடு குழவியாழ்வான் பான்முலை பெறுதலின்றிக்
கறந்திடு கறவைநீப்பக் கதறிளங் கன்றேபோலச்
சிறந்திடு தொனியிற்சால வாற்றலுந் திருமாதோடு
முறைந்திடு மழிசைதன்னி லுவணகே தனனுந்தோன்றி. 49

கருணையா மிரதமூறுங் கடைக்கணிப் பெனுந்தீம்பாலைப்
பருகுமா றளித்தேசெய்ய பறவையி னெழுந்தபின்னர்க்
கருடவா கனனீத்த கடுமையை நினைந்துநெஞ்ச
முருகியஞ் சனையின்செல்வ னுறழ்ந்துரத் தழுதானன்றே. 50

வேறு

அங்கி ரும்பிரம் பறுப்பவ ரனுகியச் சிசுவைச்
சங்கை கொண்டுகண் ணுறுகையி லவரிலோர் சதுரந்
தங்கு வோன்றிரு வாளனென் றொருபெயர் தரித்தோன்
பொங்கி யுள்ளமப் புலவனைக் கரங்களி லெடுத்தான். 51

சென்று தங்குரம் பையினிடம் பங்கயச் செல்வி
யென்ற தன்மனைக் கிழத்தியி னெழிற்கரத் தளிக்க

வின்றி நாமகப் பேற்றினை யினைவது தேர்ந்தே
நன்று நாரண னளித்தன னமக்கெனக் களித்தாள். 52

உச்சி மோந்தகங் குழைந்தக டுளைந்துதா னீன்ற
பச்சை யங்குழந் தையினிடம் பரிந்திடும் பாங்கி
னிச்சை யாலெடுத் தெழிலுறு மார்புட னணைக்கக்
கச்சை யங்குயத் தமுதமுங் கான்றது கடுகி. 53

ஒழுகு மின்பய முதவவு மருந்திடா தொன்று
மழுகை யின்றியு மசைவது மின்றியு மரியின்
கெழுவு தண்ணருட் பயந்தனைப் பருகியே கிளர்ந்து
வழுவ ருந்திரு வறிவொடு வளர்ந்தனன் மாதோ. 54

இன்ன வாறுமைத் திராவரு ணியையியைக் திவனும்
மன்னு காலையி லத்திரு மழிசையி லுறைவோன்
உன்னு நீதிய னுழவர்தங் குலத்தினி லுதித்தோன்
அன்ன செய்திதன் செவியுற வதிசயித் தாங்கே. 55

கன்று கொண்டபின் கறந்திடு கறவையி னமுதஞ்
சென்று கொண்டவன் மழிசையான் பெறலருஞ் செல்வி
னின்று கொண்டுகண் புளகுட னிமிர்தர மகிழ்ந்து
நன்று கொண்டவர் நாண்மல ரடிசிரந் தொழுது. 56

விந்தை யாயவ தரித்திடு மெந்தையே வினையேன்
றந்த விந்தத்தெள் ளமுதினை யமுதுசெய் கென்று
சிந்தை யோடவன் பரவிட வவனருள் செய்தே
யந்த நற்சுவை யமிழ்தினை யமுதுசெய் தனனால். 57

எச்ச மின்றியே மூப்பினிற் பெருகிய விவனும்
நிச்ச மன்புடன் மனைவியு நியமமுஞ் செறிய
வைச்ச தீஞ்சுவைப் பயந்தனை வாய்மடுத் தாழ்வான்
மெச்ச யாவருஞ் செழித்தனன் மெலிவறப் பரிவின். 58

ஏரின் வாழ்பவ னிவ்வண நிகழ்த்திட வொருகா
லார வுண்டபின் மிகுந்திடு மமுதையவ் வாழ்வா
னீரி துண்ணுமி னெனவருள் புரிந்தன னியமஞ்
சாரு மத்திருத் தம்பதி தனையழைத் தருகே. 59

பத்தி யாலவர் பவித்திரத் துடன்பரு கியதுஞ்
சத்தி யாலதின் றளர்தரு முதுமையுந் தணந்து
சித்தி யாதயெள வனமது செறிந்தெழில் பெருகும்
வித்தி யாதரி மிதுனமா மெனவிளங் கினரால். 60

பின்ப வன்றன தில்லவ ளொடுமுதம் பெருகி
யன்பு கூர்ந்தொழு கமயமோர் தினந்தனி லாழ்வா
னின்பு கூர்ந்தருள் பயமது பருகிய வியைபால்
தன்க ருங்குழன் மனைவியுந் தரித்தனள் கருவை. 61

திங்க ளொன்பதுந் தீர்ந்தபின் மதியினிற் றெரிவை
பொங்கு ஞானியாம் புதல்வனை யுயிர்த்துமுன் பொருவி
லெங்கு மஞ்சுறுஞ் சிலைக்கர விதுரனை யீன்ற
கொங்கு வார்குழற் கொம்பனை யெனவொளி கூர்ந்தாள். 62

கண்ட வன்மகப் பேற்றினைக் களிக்கடன் மூழ்கி
யெண்டி சைக்கணு மிசைபெறுங் கணிகண னென்னுந்
தண்ட மிழ்ப்பெயர் சாத்தினன் வளர்ந்திடத் தக்க
*வண்டி லெண்ணருங் கலைகளு மறிவுற வமைத்தான். 63

கற்று யாவையுங் கருத்துறக் கணிகணன் கலையிற்
சொற்ற நன்னெறி யொழுகியே சுருதியோர் பரவும்
நற்ற வந்தனக் குறையுளா மழிசைமன் னளினப்
பொற்றி ருப்பதப் பணிவிடை புரிந்தனன் போந்தான். 64

பத்தி சாரனும் பாலமு தருந்தலு மொருவி
முத்தர் வாழெது கிரியவன் முளரியின் பதத்தை
வைத்த வன்றிருக் கருணையாம் வழிதரு மமுதை
நித்த முண்டக நிறைவுறச் செழித்தன னெறியால். 65

போத மூர்த்தியா யின்னணம் பெருகினும் புனிதன்
சாதி பெற்றிடுந் தொழில்கொடு தரையினர் மருளப்
பேத கப்பிரம் பறுத்ததின் முறம்பல பின்னி
யாத ரத்துட னனைவருங் கொளவிலை படுத்தே. 66

மாச டைந்திடுங் குரம்பையுண் மகிழ்ந்துறை தரினுந்
தேச மெங்கணுந் தெளிவுறுந் தனதொளி பரப்பி

---

* அறுபத்து நான்கு கலைகள்.

வீசு வெங்கதிர்க் கடவுளால் வெளியிரு ளகலி
னாசு தங்கக விருளொழிந் தகலவீற் றிருந்தான். 67

வேடர் வைகுறுஞ் சேரியும் பின்பவன் விடுத்துக்
காடெ டூந்தவ னுயிர்ப்பினைக் காண்கொணு தடைத்துப்
பாடு றுந்தன தகந்தனைப் புகலெலன விளக்கி
நாட ருந்திரு நாரணன் றனையுதி ளிறவி. 68

நூலி ரண்டியோ கந்தனை நணுகியப் பெருமான்
காலி ரண்டெனுங் கமலமா மலர்க்கடைப் பற்றிப்
பாலி ரண்டினும் பசையற வொருவியே யைந்தி
னேலி ரண்டுனு ருண்டினை யிவ்வணங் கழித்தான். 69

வேறு.

பின்பொன்ரு டொன்றுவ்வாப் பிணங்குபல
சமயுங்கள் பேசுந் தன்மை
னன்காயத் துணிந்துலுக சாக்கியகா
பிலசமண முதல நாடும்
வன்பாய புறச்சமயத் தொடுசைவம்
வைசெடிகம் பாட்ட மன்றி
யின்பறுமா யாவாத முதலறியாச்
சமயத்து மிழிந்து மன்னே. 70

அந்தந்த மதங்களிலும் மவரவரா
யாசரித்தே யனைத்துந் தேர்ந்து
மெந்தெந்த விதத்தினுமோர் பயனின்றிக்
களைந்தவற்றை யிறைவ னுண்மை
யிந்திந்த விழிசமயத் துழலுபவர்க்
கொருபோது மெட்டா தென்று
சொந்தந்த மதத்தினரை நீத்தவற்றை
யோன்மையுற மொன்றே யென்று. 71

இவ்வண்ண மொருநாறுண் டிச்சமயக்
குட்டைகளைக் குழப்பி யேறி
யுய்வண்ணம் வைணவமே யல்லாதொன்
றில்லையென வுணர்ந்து தேறி

யவ்வண்ண வெழிற்கலச வாரிதியி
லாடியய னானார்க் கீசன்
செவ்வண்ணத் திருமகளார் மார்பனையே
பரம்பொருளென் றறிந்து தேர்ந்தான். 72

ஆழ்வானும் வேதாந்த விழுப்பொருளின்
மேலிலகு மரிய சோதி
வாழ்வாக வறிவுறவே வாமனனு
மதுகொண்டு மயர்வை யென்றும்
போழ்வாளின் மதியருளித் தனதான்ம
சொரூபமதைப் புலப்ப டுத்தித்
தாழ்வாரே கண்டறியுந் தன்னரிய
ஞானதி களையுந் தேற்றி. 73

காமற்குத் தந்தையென்று கழறுவதை
நிண்ணயிக்குங் கண்ட கண்க
ளேமமுறும் பெயர்வரிசா யெழிலார்ந்த
திருவுருவு மிலகுஞ் சோதித்
தூமணிகள் பலநிரைத்த முடிமுதலாத்
தொகைபெறுபல் பணியுந் தொன்மை
யாமவுணர் குலங்களையு மயிலார்ந்த
வைம்படையு மடையே தோன்ற. 74

ஒருகணமு மகலாமே தயையுருவா
யுரத்தெழுந்த வலர்மேன் மாது
மிருபுறமு மிணைந்துறையும் பூநீளை
யெனுமெழில்சேர் நாய்ச்சி மாரு
முருகிமன மெம்பெருமா னியைபொன்றே
தாரகமாய்ச் சூழ்ந்தே யுய்யும்
பெருகரிய ஞானியனந் தன்முதலாம்
பரிசனத்தின் பெருமை தானும். 75

இன்னுமுன வானந்த மயமாயுஞ்
சத்துவமா யிணைந்து முன்னே
தன்னொருமா நித்தியவி பூதியையுந்
தாங்காணத் துலக்கி மற்றும்
பன்னரிய கால்பகுதி புருடனு
மாய்நிகழும் பண்டந் தானீ

மன்னுமொரு முத்தொழிலு மன்னுதிரு
விளையாட்டு மறிவித் தானல். 76
பொறிகாலுந் திகிரிகொடு வெங்கரவைப்
போழ்ந்துகரி புரந்த மாலின்
நெறியாலே தெருட்டியிடத் தெருண்டவனு
நிலைதுளங்கா வுளத்தோ டென்று
மறியாத பேரின்பப் பரவையினை
யாழ்ந்தரியே யளிகள் பாடும்
வெறியாருந் துளவமுடி வித்தகனே
யுனதருளால் வினைபோ யுய்ந்தேன். 77
சாக்கியமுங் காபிலமுஞ் சங்கரனு
ராக்கியதுஞ் சமணந் தானும்
நோக்கியுழன் றொருபயனு நுகராது
விழற்கிறைத்த விதமே நொந்து
பாக்கியமும் பண்டுளதா லுனதரிய
பங்கயத்தாள் படிந்த வெற்குப்
பார்க்கவரி தென்னுளதென் றவனடியைப்
பணிந்துபர வசமாய் நின்றான். 78
அம்புதமா ரின்பொழில்சூழ் திருமழிசை
யானிந்த வடைவே தேர்ந்து
நம்பெருமாள் திருவடியை யொருநொடியு
மறவாமே நவின்று நாவா
லம்புமலர் மல்கருங்க சேந்திரபுட்
கரணியிருங் கரையி லார்ந்தே
யும்பர்தொழும் பரிசுடனே யோகியிறை
யாகிமகிழ்ந் துறைந்தா னங்கே. 79

வேறு

சங்கர பரிபவம்

ஆங்கம் மேலோ னுறைபோழ்தி
லரனு ரஞ்சொன் மலைகளும்
பாங்கர் படிய வம்பரத்திற்
படருங் காலை யவர்நீழல்
தாங்க லாகா தெனவொதுங்க
வியந்து கண்டத் தம்பதிக
ளோங்கு மூர்த்தி தனைநிறுத்த
வுமையா ளீசற் கீதுரைப்பாள். 80

[Grantha script text]

செய்வது' என்னும் க்ரியையில் கர்த்ருத்வம் கல்பிக்கப்படுகின்றது. அதுதான் நியோஜ்யத்வம் என்பதை 'நியோஜ்ய: ஸ ச' இத்யாதியான அவர்களுடைய வாக்யமே விளக்குகின்றது. 'அப்படி புத்தியில் கர்த்ருத்வாந்வயம் செய்வது யாகம் செய்பவன் தன்மைக்கு ஒத்திருக்கிறபடியால் நாங்கள் சொல்வது அயுக்தமன்று' என்று அவர்கள் வாதிப்பதும் ஸாத்யமாக மாட்டாது. ஏனென்றால், 'தேவதத்தன் சமையல் செய்யவேண்டும்' என்று ஒரு கட்டளை பிறந்தால், அப்பொழுது சமையல் செய்வதைக் குறித்துக் கர்த்தாவாகக் கூறப்பட்டுள்ள தேவதத்தனுக்கு, 'சமையல் செய்யும் பொருட்டுஅவன் புறப்பட்டுப் போவதும் அவனாற் செய்யப்படவேண்டிய சமையலுக்கு ஒத்திருக்கின்றது' என்னும் காரணத்தைக் கொண்டு அவன் போகும் வ்யாபாரத்தைக் குறித்து கர்த்ருத்வம் கல்பிப்பது யுக்தமாக மாட்டாதன்றோ?

என்னும் க்ரியை நியோஜ்யனை ப்ரதிபாதிக்கின்றது என்று சொல்வது சப்த சாஸ்த்ர விருத்தம்.

[Grantha script text]... 'அப்படிப் புத்தியில் கர்த்ருத்வம் செய்வது யாகத்தில் கர்த்ருத்வம் சொல்வதற்குத் துல்யமே; ஏனென்றால் அப்படிச் செய்யும் தன்மையானது யாகம் செய்யும் தன்மைக்கு அநுகுணமன்றோ? ஆகையால் வேறு க்ரியாந்வய மில்லை' என்று மீமாம்ஸகர்கள் வாதிக்கலாம். அப்படி வாதிப்பது சரியன்று என்பது மேல்கூறப்படும் த்ருஷ்டாந்தத்தால் விளங்கும்.

'க்ருதிக்கு உத்தேச்யம் கார்யம்' என்று மீமாம்ஸகர்கள் சொன்னது இவ்வளவால் நிராகரிக்கப்பட்டது. 'உத்தேச்யம்' என்னும் பதத்தின் பொருள் என்னவென்று கேட்டதற்கு அவர்கள் பலவிதமாக் ஸமாதாநம் சொன்னார்கள். முதலில் 'எதை அதிகரித்து க்ருதி இருக்கிறதோ அது க்ருதியின் உத்தேச்யம்' என்றும், பிறகு 'ப்ரேரகத்வம் க்ருத்யுத்தேச்யம்' என்றும், பிறகு 'க்ருதியைக் குறித்துச் சேஷியாக இருப்பது க்ருத்யுத்தேச்யத்வம்' என்றும் சொன்னார்கள். இவையெல்லாம் நிராகரிக்கப்பட்டன. இவ்விதம் இவைகளை நிராகரித்ததாலேயே 'ஸ்வத: இஷ்டமாயிருப்பதே உத்தேச்யத்வம்' என்பதும் 'க்ருதியின் பல விசேஷமே க்ருத்யுத்தேச்யம்' என்பதும் அர்த்தத்தாலே நிராகரிக்கப்பட்டன. கார்யத்தை அநுபந்திதிருக்கும் அர்த்தமும் தூஷிக்கப்பட்டது. இதுதான் இவ்வளவாற் சொல்லப்பட்ட விஷயம்.

[illegible]

[illegible]

கிம் வ...' லிங் முதலான சப்தங்கள் ஸ்தாயியான [காலாந்தரத்திலும் இருக்கக் கூடியதான] அபூர்வம் என்பதைச் சொல்லுகின்றன ' என்று எதற்காக நீங்கள் வாதிக்கிறீர்கள் ? 'அப்படிச் சொல்லாவிட்டால் ' ஸ்வர்க்க காம ' என்னும் பதம் அவ்விடத்தில் சேர்த்துப் படிக்கப்பட்டிருப்பதானது ஒத்துவர மாட்டாது ' என்று ஸமாதாநம் சொன்னால், ' எப்படி ஒத்துவர மாட்டாது ?' என்று நாங்கள் கேட்போம். 'ஸ்வர்க்க காமன் என்று சொல்லப்படுமவன் ஸ்வர்க்கத்தை ஸாதித்துக்கொள்ளவேண்டு மென்னும் விருப்பத்தை உடையவனன்றோ? அப்படிப்பட்ட ஸ்வர்க்க காமனுக்கு, ஒருக்ஷண காலம் மாத்ர மிருந்து உடனே நாசமடையும் யாகம் முதலிய க்ரியைகள், காலாந்தரத்தில் உண்டாகப் போகும் ஸ்வர்க்கத்தை ஸாதித்துக் கொடுப்பதில் எப்படி சக்தங்களாகும் ?' என்று ஸமாதாநம் சொல்லும் பக்ஷத்தில், அது ' அவர்கள் வேத ஸித்தாந்தம் இன்னது என்பதை அறியாதவர்கள்' என்பதையே விளக்குகின்றது என்றுசொல்ல வேண்டும். ' பரமேச்வரனும் பகவானுமா யிருக்கும் நாராயணன் ஸகல கர்மங்களாலும் ஆராதிக்கப்பட்டவனாய் அப்படி ஆராதிக்குமவர்களுக்கு அவரவர்களால் இச்சிக்கப்படும் பலத்தைக் கொடுக்கிறான் ' என்பதன்றோ வேத மறிந்தவர்கள் சொல்லும் வார்த்தை? வேத மறிந்தவர்களுள் மிகச் சிறந்தவரான த்ரமிடாசார்யர்களும், ' பலம் தமக்குக் கிடைக்கவேண்டு மென்றன்றோ கர்மம் செய்யுமவர்கள் பரமாத்மாவை அந்தந்தக் கர்மங்களால் ஆராதிக்கிறார்கள் ? அந்தப் பரமாத்மா அந்த ஆராதநத்தால் த்ருப்தி அடைந்தவனாய் அவர்கள் அபேக்ஷிக்கும் பலத்தைக் கொடுப்பதற்குச் சக்தனே. சாஸ்த்ரம் சொல்வது இது தான் ' என்றே சொல்லியிருக்கிறார்கள். இதன் அர்த்த மென்ன

க்ஷணத்வம்ஸிநீ—கர்மங்களெல்லாம், எந்தக் காலத்தில் அவை அநுஷ்டிக்கப்படுகின்றனவோ அந்தக் காலத்தில் மாத்ரம் இருக்குமவை. அடுத்த க்ஷணத்தில் அவை நசித்து விடுகின்றன. அவை ஏதாவது ஒரு பலத்தைக் கொடுப்பதானால், தாம் இருக்கும் பொழுதே அந்தப் பலத்தை அவை கொடுக்கக்கூடுமே ஒழிய, தாம் நாசமடைந்த பிறகு கொடுக்கும் என்று சொல்வது ஒத்து வரமாட்டாது. யாகம் ஒரு கர்மம்; அது அநுஷ்டிக்கப்படும் காலத்தில் மாத்ரம் அதற்கு இருப்பு உண்டு. ஸ்வர்க்கமோ காலாந்தரத்தில் உண்டாகத்தகுந்தது. அதை அந்தக் கர்மம் எப்படி ஸாதித்துக் கொடுக்கும் ? இது தான் சங்கை. இந்தச் சங்கையை நிவ்ருத்தித்துக் கொள்வதற்காகவே, மீமாம்ஸகர்கள், 'யாகத்தால் அபூர்வமென்று ஒன்று உண்டாகின்றது; அது, யாகம் நாசம் அடைந்த பிறகும் நின்று ஸ்வர்க்கமாகிற பலத்தைக் கொடுக்கின்றது' என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[illegible]

வென்றால், லோகத்தில் இந்த்ரன் முதலிய தேவதைகளை உத்தேசித்து யாகம் தாநம் ஹோமம் முதலிய கர்மங்களைச் செய்பவர்களெல்லோரும் ஒரு பலத்தை விரும்பியே அந்த இந்த்ரன் முதலிய தேவதைகளின் வாயிலாய் அந்த இந்த்ரன் முதலிய சப்தங்களால் குறிக்கப்படுகிறவும் ஸகலத்திற்கும் அந்தர்யாமியுமாக இருக்கிற பரமாத்மாவாகிற பகவான் வாஸுதேவனையே ஆராதிக்க இச்சிக்கிறார்கள். அந்த வாஸுதேவன் அந்தந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவனாய்க் கொண்டு அப்படி ஆராதிக்குமவர்களின் இஷ்டங்களெல்லா வற்றையும் நிறைவேற்றுகிறான்' என்பதுதான். வேதமும் '[illegible]' இத்யாதியான வாக்யத்தில் இதையே சொல்லுகின்றது. '[illegible]' என்பதால், ச்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டுள்ள ஸகல கர்மங்களும் சொல்லப்படுகின்றன. '[illegible]' என்பதற்கு, ' இந்த்ரன் அக்நி வருணன் முதலிய ஸகல தேவதைகளின் ஸம்பந்தம் பெற்றவையாகத் தோன்றும் அந்தக் கர்மங்களை யெல்லாம், அந்தந்தத் தேவதைகளுக்கு அந்தராத்மாவாக இருக்

[illegible] — இவ்விதம் அந்வயம் செய்து கொள்ளவேண்டும். இந்த வாக்யம் த்ரமிட பாஷ்யத்திலுள்ள '[illegible]' என்னும் பதத்தின் பொருளை விவரிக்கின்றது. '[illegible]'— இந்தப் பதம், 'பகவான் எல்லாவற்றுக்கும் அந்தராத்மா' என்பதற்கு ப்ரமாணத்தைக் குறிக்கின்றது. '[illegible]' [எல்லாவிடத்திலும் இவன் வஸிக்கிறான்] என்னும் காரணத்தாலன்றோ பகவான் 'வாஸுதேவன்' என்று சொல்லப்படுகிறான் ?

[illegible]—இந்த வேத வாக்யத்தின் அந்வயமாவது-' [illegible] ' | '[illegible]' என்பது ச்ருதியில் விஹிதமாயுள்ள யாகம் முதலிய கர்மங்களையும், '[illegible]' என்பது ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டுள்ள குளம் வெட்டுவது முதலிய கர்மங்களையும் குறிக்கின்றன. '[illegible]' என்பதால் இறந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் நடைபெறும் கர்மங்களெல்லாம் சொல்லப்படுகின்றன. '[illegible]' என்பது 'சில கர்மங்கள் அக்நியைத் தேவதையாகவும், மற்றும் சில

பரமபுருஷ: ஸ்வயமேவ ஸ்வீகரோதி । ‘ஸர்வஸ்ய நாபி:’— ப்ராஹ்மணக்ஷத்ரியாதிஸர்வவர்ணபூர்ணஸ்ய ஸர்வஸ்ய தாரக:, தேஷாம் கர்மபிராராதிதஸ்தத்திஷ்டபலப்ரதாநேந ஸர்வதாநாம தாரக இதி நாபிரித்யுக்த: । அக்நிவாயுப்ரப்ருதிதேவதாநாமாத்மதயா நிர்த்திஷ்டஸ்ஸர்வாபாஸ்யைவேத்யாஹ “ததேவாக்நிஸ்தத்வாயு: ஸ்தத்ஸூர்யஸ்தது சந்த்ரமா:” இதி । யதோக்தம் பகவதா —

“யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயார்ச்சிதுமிச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥

கும் பரம புருஷனே ஸ்வயமாகவே அங்கீகரிக்கிறான்’ என்பது கருத்து. ‘ஸர்வஸ்ய நாபி:’ என்றால், ‘ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் முதலிய அநேக ஜாதிகளால் நிறைந்துள்ள இந்த லோகத்திற்குத் தாரகன்’ என்று சொன்னதாயிற்று. அந்தந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவனைக் கொண்டு பகவான் அவரவர்களின் இஷ்ட பலங்களைக் கொடுத்து ஜகத்தைத் தாங்கி வருகிறபடியால் அவன் ‘நாபி:’ என்று சொல்லப்படுகின்றான். ‘ததேவாக்நி:’ என்பது முதலான வாக்யங்களால், ‘அப்படி அக்நி வாயு முதலிய தேவதைகளுக்கெல்லாம் அந்தராத்மாவாக இருக்கும் பகவானே அந்தந்தச் சப்தங்களெல்லாவற்றாலும் குறிக்கப்படுகின்றான்’ என்பது விளக்கப்படுகின்றது. பகவத் கீதையிலும் ஸ்ரீ பகவான், “யோ யோ யாம் யாம் தநும் பக்த:” என்பது முதலிய ச்லோகங்களால் இந்த அர்த்தத்தையே சொல்லியிருக்

இந்த்ரனைத் தேவதையாகவும், இவ்வாறு பல தேவதைகளின் ஸம்பந்தத்தை அந்தக் கர்மங்கள் பெற்று நிற்கிறபடியால் அவை பஹுவாக இருக்கின்றன’ என்பதைச் சொல்லுகின்றது. இந்தக் கர்மங்களெல்லாவற்றையும் பரம புருஷனே ஸ்வயமே ஸ்வீகரிக்கிறான்; அதாவது- இந்தக் கர்மங்கள் பற்பல தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படுமவையாகத் தோன்றின போதிலும், உண்மையில் அவை பரம புருஷனொருவனையே தேவதையாகக் கொண்டவை என்று சொன்னதாயிற்று. ஸர்வஸ்ய நாபி:—குடம் எப்படி சக்ரத்திற்குத் தாரகமோ, அப்படிப் பரமபுருஷன் ஜகத்திற்குத் தாரகன். இஷ்டப்பட்ட பலத்தைக் கொடுக்குமவன் பரம புருஷனே ஆகிறபடியால் அவனே தாரகன் என்று சொல்லப்படுகிறான்.

ததேவாக்நி:...‘பல தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மங்கள் எவ்விதத்தில் பரம புருஷன் ஒருவனையே தேவதையாக உடைத்தாயிருக்கின்றனவென்று சொல்லக் கூடும்?’ என்பதை இந்த உத்தரார்த்தம் விளக்குகின்றது. ‘அக்நி வாயு சந்த்ரன் இவ்வாறு சொல்லப்படுமவர்களெல்லாரும் அந்தப் பரம புருஷனேயன்றோ?’ என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். அதாவது-அந்தத் தேவதைகளெல்லாருக்கும் அவன் அந்தராத்மாவாக இருக்கிறபடியால், அவர்களெல்லாரும் அவனே என்று சொல்லப்படுகிறார்கள். இப்படிச் சொல்வதற்குச் சரீராத்ம பாவமே நிபந்தநம் என்று சொன்னதாயிற்று.

யோ யோ யாம் யாம்—இந்த ச்லோகங்கள் பகவத் கீதையில் ஏழாவது அத்யாயத்தில் 21, 22-வது ச்லோகங்கள். இவைகளின் பொருளாவது-‘சிலர் வேறு தேவதை

ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதநமீஹதே ।
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥”

‘யாம் யாம் தநும்’ இதி-இந்த்ராதிதேவதாவிசேஷாஸ்தத்தஜ்ஜயார்ச்சயிதவ்யஸ்ய ஸர்வஸ்ய தநவ: சரீராணீத்யர்த்த: ।
“அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச” இத்யாதி । ‘ப்ரபுரேவ ச’ இதி ஸர்வபலாநாம் ப்ரதாதேத்யர்த்த: । யதா ச ஸ்ரீவிஷ்ணுபுராணே
“யஜ்ஞைஸ்த்வமிஜ்யஸே நித்யம் ஸர்வதேவமயாச்யுத”
“யை: ஸ்வதர்மபரைர்நாத நரைராராதிதோ பவாந் ।
தே தரந்த்யகிலாமேதாம் மாயாமாத்மவிமுக்தயே ॥”

கிறான். இவ்விடத்தில் ‘தநும்’ என்பது கவனிக்கத்தக்கது. ‘தநு’ என்பதற்கு ‘சரீரம்’ என்பது பொருள். ‘இந்த்ரன் முதலிய தேவதைகளெல்லோரும் தம் தமக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பகவானுக்குச் சரீரங்களே’ என்பது இதனால் விளங்குகின்றது. “அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச” என்பதிலுள்ள ‘ப்ரபு:’ என்னும் சப்தமும் ‘பலத்தைக் கொடுப்பவனும் அவனே’ என்பதைச் சொல்லுகின்றது. ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும், “யஜ்ஞைஸ்த்வமிஜ்யஸே” என்பது முதலான ச்லோகங்களில், இந்த அர்த்தத்

களை ச்ரத்தையுடன் ஆராதித்த போதிலும், அந்தத் தேவதைகளெல்லாம் என்னுடைய சரீரங்களாகிற படியால், அவர்கள் உண்மையில் என்னையே அந்த ச்ரத்தையுடன் ஆராதித்தவராகிறார்கள். அவர்கள் அதைத் தெரிந்து கொள்ளாமல் இருந்த போதிலும், அந்த ச்ரத்தை என்னுடைய சரீரத்தை உத்தேசித்தே செய்யப்படுகின்றது என்று அநுஸந்தித்து நானே அந்த ச்ரத்தையை நிர்விக்நமாகச் செய்கின்றேன். அவர்கள் அப்படி நிர்விக்நமாகச் செய்யப்படும் ச்ரத்தையைக் கொண்டு அந்தந்தத் தேவதைகளையே அர்ச்சிக்கிறார்கள். அர்ச்சிக்கப்படும் தேவதைகள் என்னுடைய சரீரமாக இருக்கிறபடியால், அர்ச்சிக்குமவர்களின் இஷ்டங்களை நானே கொடுக்கிறேன். அப்படி என்னால் கொடுக்கப் படுமவைகளையே அவர்கள் அடைகிறார்கள்’.

அஹம் ஹி...பகவத் கீதை ஒன்பதாவது அத்யாயத்தில் 24 வது ச்லோகம். இதன் அர்த்தம்-‘நான் தான் எல்லா யஜ்ஞங்களாலும் ஆராதிக்கப்படுகிறவன்; நானே அந்த யஜ்ஞங்களின் பலத்தையும் கொடுக்கிறேன்’. ‘போக்தா’ என்பதற்கு ‘ஆராத்யன்’ என்பதும், ‘ப்ரபு:’ என்பதற்குப் ‘பலத்தைக் கொடுக்கிறவன்’ என்பதும் பொருள்.

யஜ்ஞைஸ்த்வமிஜ்யஸே... இது விஷ்ணு புராண ச்லோகம். இதன் பொருள்-‘ஹே ஸர்வதேவமய! ஹே அச்யுத! ஸகல யஜ்ஞங்களாலும் நீரே எப்பொழுதும் ஆராதிக்கப்படுகிறீர்.’

யை: ஸ்வதர்மபரை:... இதுவும் விஷ்ணு புராண ச்லோகமே. இதன் பொருள்- ‘தம் தம் தர்மங்களைச் செய்பவர்களெல்லாராலும் நீரே ஆராதிக்கப்படுகிறீர். ஆகையால் அவர்கள் இந்த மாயை முழுவதையும் கடந்து ஆத்ம மோக்ஷத்தை அடைகிறார்கள்.’

இதி ஸேதிஹாஸபுராணேஷு ஸர்வேஷ்வேவ வேதேஷு 'ஸர்வாணி கர்மாணி ஸர்வேச்வராராதநரூபாணி, தைஸ் தை: கர்மபிராராதித: பரமபுருஷஸ் தத்ததிஷ்டம் ஃபலம் ததாதி' இதி தத்ர தத்ர ப்ரபஞ்சிதம் । ஏவமேவ ஹி ஸர்வசக்தி: ஸர்வஜ்ஞ: ஸர்வேச்வர: பரமபுருஷ இந்த்ராதிதேவதாந்தர்யாமிரூபேண யாகதாநஹோமாதிவேதோதிதஸர்வகர்மணாம் போக்தா ஸர்வஃபலாநாம் ப்ரதாதா ச ஸர்வா: ச்ருதயோ வதந்தி

தையே காணலாம். இவ்வாறு இன்னும் பலவிடங்களில் இதிஹாஸ புராணங்களுள்பட ஸகல சாஸ்த்ரங்களும், 'ஸகல கர்மங்களும் ஸர்வேச்வரனுடைய ஆராதந ரூபங்களே; அந்தந்தக் கர்மங்களால் ஆராதிதனைக் கொண்டு அந்தப் புருஷோத்தமனே அவரவர்களுடைய இஷ்ட பலத்தைக் கொடுக்கிறான்' என்பதையே இன்னும் விஸ்தாரமாகவும் தெளிவாகவும் பேசுகின்றன. அவன் ஸர்வஜ்ஞனானதால் ஆராதந ப்ரகார விசேஷங்களை அவனே சரிவர அறியத்தகுந்தவன்; அவன் ஸர்வ சக்தியுடன் கூடினவனானதால் கேட்கப்படும் பல மெல்லாவற்றையும் கொடுக்க அவனே சக்தனாவான்; அவன் ஸர்வேச்வரனானதால், அவனே எல்லாராலும் அடையத் தகுந்தவனாவான். ஆகையினாலன்றோ, 'சதுர்ஹோதார:' என்பது முதலான ச்ருதிகளும் அந்தப் பகவானே இந்த்ரன் முதலான தேவதைகளுக்கெல்லாம் அந்தர்யாமியாக இருந்துகொண்டு, வேதத்தில் சொல்லப்பட்டுள்ள யாகம் தானம் ஹோமம் முதலிய ஸகல கர்மங்களாலும் தானே ஆராதிக்கப்பெற்று, தானே ஸகல பலங்களையும் கொடுக்கிறான் என்று சொல்லுகின்றன? 'சதுர்ஹோதார:'... யஜ்ஞங்கள். 'யத்ர'— எவ்விடத்தில் (அதாவது- தேவர்களுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மாவினிடத்தில்). 'ஸம்பதம்'— ஸம்பந்தத்தை. அதாவது- இந்த்ரன் முதலானவர்களுக்கு

ஏவமேவ ஹி... இதுவரை ப்ரமாணத்தை நிரூபித்துவிட்டு, இனி 'இவ் விதமான அர்த்தமே உபபந்நம்' என்பதைச் சொல்லப் போகிறவராய், அதற்குக் கடகமாயிருக்கும் ச்ருதி வாக்யத்தைக் கூறுகிறார்.

சதுர்ஹோதாரோ யத்ர... இந்த வாக்யத்தின் பதவுரை- சதுர்ஹோதார:= யஜ்ஞங்களெல்லாம், யத்ர= எந்தப் பரமாத்மாவினிடத்தில், தேவை: ஸம்பதம்= தேவர்களுடன் ஸம்பந்தத்தை, கச்சந்தி= பெறுகின்றனவோ. அதாவது- யஜ்ஞங்களுக்கும் தேவதைகளுக்கும் ஏற்படும் ஸம்பந்தமெல்லாம் பரமாத்மாவின் வழியாகவே என்று சொன்னதாயிற்று. பரமாத்மாவுக்கும் கர்மங்களுக்குமுள்ள ஸம்பந்தம் ஸ்வதந்த்ரம்; தேவதைகளுக்கும் கர்மங்களுக்கு முள்ள ஸம்பந்தம் பாரதந்த்ரம்: ஏனென்றால், இவர்களுக்கு ஏற்படும் ஸம்பந்தம் இவர்கள் பரமாத்மாவுக்குச் சரீரமாக இருக்கிறபடியாலன்றோ? இந்த வாக்யத்தில் 'ஸம்பத்' என்பதற்கு 'ஸம்பந்தத்தை என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் அவயவார்த்தம் அதுவே. 'பத்' என்னும் தாதுவுக்குக் 'கதி' என்பது பொருளாகையால், 'ஸம்பத்' என்பதற்கு 'ப்ராப்தி' என்பது பொருளாகக் கூடும். அந்வய ஸ்வாரஸ்யம் இருக்கிறபடியால் இந்தப் பொருள் ஆச்ரயிக்கப் படுகின்றது.

"சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை:" இத்யாதய: । 'சதுர்ஹோதார:' யஜ்ஞா:, 'யத்ர' பரமாத்மநி தேவேஷ்வந்தர்யாமிரூபேணாவஸ்திதே, 'தேவை: ஸம்பதம் கச்சந்தி' தேவை: ஸம்பந்தம் கச்சந்தீத்யர்த்த: । அந்தர்யாமிரூபேணாவஸ்திதஸ்ய பரமாத்மந: சரீரதயாவஸ்திதாநாமிந்த்ராதீநாம் யாகாதிஸம்பந்த இத்யுக்தம் பவதி । யதோக்தம் பகவதா- "போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம்" இதி। தஸ்மாதிந்த்ராதிதேவதாந்தராத்மதயாவஸ்திதஸர்வேச்வராராதநரூபாணி கர்மாணி, ஸ ஏவ சாபிலஷிதஃபலப்ரதாதேதி கிமத்ராபூர்வேண வ்யுத்பத்திபதவிரோதிநா வாச்யதயாஸ்ய

யாகம் முதலிய கர்மங்களில் ஸம்பந்தம் கிடைப்பதெல்லாம், அந்தர்யாமியாக நிற்கும் பரமாத்மாவுக்கு அவர்கள் சரீரமாக இருப்பதாலேயே என்று சொன்னதாயிற்று. பகவான் ஒருவனே அந்தக் கர்மங்களின் ஸ்வதந்த்ரமான ஸம்பந்தத்தைப் பெற்றவனென்பதை 'போக்தாரம்' என்பது முதலான பகவத் கீதா வாக்யமும் விளக்குகின்றதன்றோ? இப்படி ஸகல கர்மங்களும், இந்த்ரன் முதலிய தேவதைகளுக்கு அந்தராத்மாவாக இருக்கும் பரம புருஷனுடைய ஆராதந ரூபங்களே என்றும், அந்தப் பரம புருஷனே அவரவர்களால் இச்சிக்கப்படும் பலங்களை யெல்லாம் கொடுக்கிறானென்றும் ஏற்படுகிறபடியால், எதற்காக லோக வ்யுத்பத்திக்கு எட்டாமலும் புதியதாகவும் இருக்கும் ஒரு அர்த்தத்தை கட்டுப்பாட்டாலோ அல்லது ஏதாவது ஒரு கல்பனையைக் கொண்டோ வாச்யமென்று ஒத்துக்கொள்ள வேண்டும்? 'இப்படியானால், லிங் முதலியவைகளுக்கு நீங்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டால், நாங்கள் கொண்டிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறோம். 'யாக:' என்னும் சப்தத்திற்கு 'யஜ்' என்பது தாது. அந்தத் தாதுவுக்குத் 'தேவனைப் பூஜிக்கிறது' என்பது பொருள். ஆகையால் 'யாக:' என்பது தேவதையின் ஆராதந ரூபமான ஒரு கர்மம். இது தான் 'யஜேத' என்பது முதலான வினைச் சொல்லில் இருக்கும் ப்ரக்ருதியின் (பகுதியின்) அர்த்தம். அந்த வினைச் சொல்லில் இருக்கும் 'லிங்' முதலிய விகுதிகள் 'அந்த ஆராதகம் ஒரு கர்த்தாவின் வ்யாபாரத்தால் ஸாதிக்கத் தகுந்தது' என்பதைக் குறிக்கின்றன. இது அதன் வ்யுத்பத்தியினாலேயே விளங்கும். இப்படி அர்த்தம் சொல்வதில் ஒரு வித அநு

போக்தாரம்... பகவத் கீதை 5-29. இந்த ச்லோகம், கர்மங்களுடன் ஸ்வதந்த்ர ஸம்பந்தம் பகவானொருவனுக்கே என்பதற்கு ப்ரமாணமாகக் கூறப்பட்டிருக்கிறது.

தஸ்மாத்... இவ்விதம் பகவான் ஸ்வதந்த்ர ஸம்பந்தத்தை உடையவனாகவும் தேவதைகளெல்லாரும் பரதந்த்ர ஸம்பந்தத்தை உடையவர்கள் என்று சொல்வதால் என்ன ஏற்பட்டது என்பதை விளக்குகிறார். பரம புருஷனே பலம் கொடுக்கிறவனாக இருக்கிறபடியால் பல ஸாதநத்வத்தைக் கல்பிக்கவேண்டியது என்பது இல்லை என்பது முக்ய லாபம். கிம் ப்ரயோஜநம்- என்ன அநுபபத்தி சமனம் ப்ரயோஜனமாகின்றது?

ஸாவம் ச... லிங் முதலியவைகளின் அர்த்தத்தைத் தெளிவாக வரிக்கிறதற்கு ஆரம்பிக்கிறார்.

வர்தேத ந கர்த்ருவ்யாபார ப்ரயோஜநம்? ஸ்வர்கம் ச ஸதி ஜீவதேஹ: கோ வாஸ்ய: பரிஷ்வஜீத:?' இதி சோத்யதே। 'யஜ தேவ பூஜாயாம்' இதி தேவதாராதநரூபதயா தாதோ: ப்ரக்ருத்யர்த்தஸ்ய கர்த்ருவ்யாபாரஸாத்யத்வம் வ்யுத்பத்திஸித்தம் லிஙாதயோரபி ஷயதீதி ந கிஞ்சிதநுபபந்நம்। கர்த்ருவாசிநாம் ப்ரத்யயாநாம் ப்ரக்ருத்யர்த்தஸ்ய கர்த்ருவ்யாபாரஸம்பந்தப்ரகாரோ வாச்ய:। லடாதயோ லகாரா: காலவிசேஷகாரா வதந்தி, லிஙாதயஸ்து கர்த்ருவ்யாபாரஸாத்யதாம் வதந்தி।

அபி ச கர்மண: கர்த்ருவ்யாபாரஸாத்யதா ஸ்வர்க வியாய கர்மணோ தேவதாராதநரூபதாம் தத்ஸம்பந்தம் ச தத்தத்கர்மவிதி

பபத்தியுமில்லை. ஒரு வினைச் சொல்லின் ப்ரக்ருதியின் (பகுதியின்) அர்த்தம் கர்த்தாவின் வ்யாபாரத்துடன் எவ்வித ஸம்பந்தத்தைப் பெற்றிருக்கின்றது என்பதை மாத்ரமே கர்த்தாவைக் குறிக்கும் ப்ரத்யயங்கள் (விகுதிகள்) சொல்ல வேண்டுமென்றோ? 'லட்' 'லிட்' முதலிய லகாரங்கள் நிகழ்காலம் இறந்த காலம் முதலியவற்றைக் குறிக்கின்றன; 'லிங்' முதலியவைகளோ வென்றால் 'அந்தக் கர்மம் கர்த்தாவின் வ்யாபாரத்தால் ஸாதிக்கத் தகுந்தது' என்பதையே சொல்லுகின்றன.

அபி ச...நிற்க, 'இன்ன இன்ன பலத்தை அபேக்ஷிப்பவர்கள் இன்ன இன்ன கர்மத்தைச் செய்தல் வேண்டும்' என்று விதித்துவிட்டு, அந்த விதி வாக்யங்களே, 'இந்தக் கர்மங்களெல்லாம் தேவதாராதந ரூபங்கள்; அந்தத் தேவதைகளே

கர்த்ருவாசிநாம்...சாஸ்த்ர மர்யாதை என்னவென்றால்- ப்ரக்ருதியும் ப்ரத்யயமும் சேர்ந்து பதம் உண்டாகின்றது. கர்த்தாவைச் சொல்லும் ப்ரத்யயங்களெல்லாம் ப்ரக்ருதியின் அர்த்தத்திற்கும் ப்ரத்யயத்தின் அர்த்தமாகிற கர்த்தாவின் வ்யாபாரத்திற்கும் எவ்விதமான ஸம்பந்தம் இருக்கிறது என்பதைக் குறித்தல் வேண்டும். அவைகளுள் 'லட்' 'லங்' முதலானவைகள் நிகழ் கால ரூபமாகவும் இறந்த கால ரூபமாகவும் இம்மாதிரி இருக்கும் கர்த்ரு வ்யாபார ஸம்பந்தத்தைக் குறிக்கின்றன; 'லிங்' முதலியவைகளோ வென்றால், கர்த்ரு வ்யாபார ஸாத்ய ரூபமான ஸம்பந்தத்தைக் குறிக்கின்றன. இது தான் இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயம். இவ்வளவு சொன்னதிலிருந்து, லிங் முதலிய லகாரங்கள் ப்ரக்ருத்யர்த்தத்திற்கு மாத்ரம் கர்த்ரு வ்யாபார ஸம்பந்தத்தைச் சொல்லுகின்றனவே தவிர, ப்ரக்ருத்யர்த்தத்தைக் காட்டிலும் வ்யதிரிக்தமான மற்றை ஒன்றுக்கும் அவை சொல்லவில்லை என்பது ஏற்படுகின்றது.

அபி ச...இது வரை, எல்லா உபநிஷத் வாக்யங்களும் அவைகளின் உபப்ருஹ்மணங்களும் இவையெல்லாம் 'பகவானே பல ப்ரதன்' இருக்கிறபடியால், அபூர்வம் என்று ஒன்றைக் கல்பிக்கவேண்டியது அநாவச்யமென்று நிரூபிக்கப்பட்டது. இனி, கர்மவிதி வாக்யங்களே தேவதைகளுக்குப் பல ப்ரதத்வத்தைச் சொல்லுகிற படியால், அபூர்வத்தைக் கல்பிப்பது அநாவச்யமென்று நிரூபிக்கிறார்.

158951

ஸ்ரீ:

விஜ்ஞாபனம்

இது, வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரீ குடவாசல் V. R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளால் சின்னாட்களுக்கு முன் எழுதி முத்திரிப்பித்து வெளியிடப்பட்டிருக்கிற ஓர் உயர்தரச் செந்தமிழ்ச் சமயநூல். இந்நூல் நம்தேசத்தின்கண் உள்ள வேதசாஸ்திர பாரங்தர்களான பண்டித சிரேஷ்டர் பலராலும், லௌகிக சாஸ்திர நிபுணர்களான மேதாவிகள் அனேகராலும், பலபடியாகப் புகழ்ந்து போற்றப்பெற்றிருப்பதைக் கொண்டே இதன் பெருமையை ஒருவாறு உணரலாகும். இந்நூல், நம் தேசத்தில் தொன்று தொட்டு ப்ரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற சார்வாகம், தார்க்கிகம், ஸாங்கியம், பௌத்தம், ஜைநம், வேதாந்தம், எனப்படுகிற ஆறுவிதமான முக்கிய மதங்களின் ஸாரங்களையும் யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் மிக்க தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. மேலும் அந்தந்த மதாசிரியர்களால் அருளப்பெற்ற அந்தந்த மதங்களுக்கேயான அரியபெரிய அஸல் கிரந்தங்கள் பலவற்றையும் மிக்க பரிசிரமத்துடன் வெகு காலம் பயின்று, அதன் பயனாகப் பக்ஷபாதமற்ற நடுவு நிலையோடு அவற்றின் தத்வார்த்தங்களை யெல்லாம் இருபாலாரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற பரந்த நோக்கத்தைக் கொண்டே வரையப் பெற்றிருப்பதால், இப்புத்தகத்தை எல்லா மதத்தினரும் தந்தம் சமய நூலாகவே மதித்து ஏற்றுக்கொண்டு போற்றுகின்றனர். சுருங்கச் சொல்லில்: இது போன்ற சமய நூலொன்று நந்தமிழ்நாட்டில் இதுகாறும் உண்டாகியதே யில்லை யென்று கெட்டியாகக் கூறிவிடலாம். இத்தகைய அரிய பெரிய புத்தகத்தின் அர்த்த ஸாரங்களை அறிந்துகொண்டு பயன்பெற வேண்டியது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க அவச்யமானது. புத்தகம் நல்ல கிளேஸ் பேபரில் ராயல் ஸைஸில் ஸுமார் 400 பக்கங்கள் கொண்டதாய், சுத்தமாய் முத்திரிப்பித்து நேர்த்தியாகக் காலிகோ பயிண்டு செய்து விற்பனைக்குத் தயாராக விருக்கின்றது. விலை ரூ. 3 தான். வேண்டியவர்கள் "ரா. வரதாசார்யர். B. A., L. T., ஸ்ரீ ஸத்வித்யா புத்தகசாலை மானேஜர், 1, புஜங்காராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ்" என்ற விலாசத்திற்கு எழுதிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்ரிகை.
வருஷச் சந்தா: ரூ. 3
தனிப் பிரதி: அணா 5

குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, கோட்னீஸ் கார்டென்ஸ், மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் 30௳ திகதியே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 2 அல்லது 3 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
கோட்னீஸ் கார்டென்ஸ்,
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.

4—3—34
மதராஸ்.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Sabha, Madras.